23 ஆவது

# துளிர்ந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd

+94776391188 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com பதிவு இல: PV 00249082 ISSN 2792-1026

மாதந்தோறும் இதழ் - 23 22 செப்டெம்பர் 2022 @skytamil.lk





சமூகவலைதளங்களில்
எழுத்தாளராக பலர் முன்னிலையில்
அறிமுகமான ஆர்கலி



கத்தாரில் நடைபெற்ற
பிரபல நிகழ்வில்
மாற்றுத்திறனாளியான அர்ஜுனின்
ஓவியத்திற்கு பாராட்டு




நூற்றாண்டை நோக்கி
பயணமாகும் காத்தான்குடி
மத்திய கல்லூரி



கத்தாரின் பிரபல புகைப்பட போட்டியில்,
சாய்ந்தமருது இளைஞனின்
புகைப்படமும் தெரிவு

## இறை பக்தியை நிறை சக்தியாக கொண்ட
## பன்முக ஆளுமை ஜெர்மனியைச் சேர்ந்த
# திருமதி மீனா உதயகுமார்

நேர்காணல் : கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்



## சமூகவலைதளங்களில் எழுத்தாளராக பலர் முன்னிலையில் அறிமுகமான ஆர்கலி


05 பக்கம்



31 பக்கம்


## இறை பக்தியை நிறை சக்தியாக கொண்ட பன்முக ஆளுமை ஜெர்மனியைச் சேர்ந்த திருமதி மீனா உதயகுமார்

நேர்காணல் : கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்






## நூற்றாண்டை நோக்கி பயணமாகும் காத்தான்குடி மத்திய கல்லூரி


36 பக்கம்



48 பக்கம்


## கத்தாரில் நடைபெற்ற பிரபல நிகழ்வில் மாற்றுத்திறனாளியான அர்ஜூனின் ஓவியத்திற்கு பாராட்டு





## கத்தாரின் பிரபல புகைப்பட போட்டியில், சாய்ந்தமருது இளைஞனின் புகைப்படமும் தெரிவு


50 பக்கம்

**பிரதம ஆசிரியர்:**
ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**
முனீரா வாஹித்
ஷிஹானா நௌபர்

**நிர்வாக குழு:**
ஆர்.எம்.சப்ராஸ்
தாரிக் முஹம்மத்
குலசிங்கம் கிலசன்
முஹம்மட் ஹாசில்
பஹ்ரியா பாயிஸ்
ஜவ்சன் அஹமட்
பாத்திமா சகியா

**ஆசிரியர் குழு :**
எம்.பஹ்த் ஜுனைட்
கமறுன் நிஸாம்டீன்
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா
மஜினா உமறு லெவ்வை
பாத்திமா பின்த் சம்சுதீன்
சிவபாலன் கற்ப ஹாசினி
நாகூர் பாத்திமா அவ்ஷபா
பெனாஷில் ஷிப்னா

**மேற்பார்வையாளர்:**
றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்

23 ஆவது சஞ்சிகை

# துணிந்தெழு

**வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்**

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com
www.skytamilmedia.com



**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188

Scan QR Code

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk



# எமது ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு வெளியீட்டில்

## சில்மியூர் முனீரா வாஹித் எழுதிய “கரையோர வேர்கள்”

# நூல் வெளியீட்டு நிகழ்வு!

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு வெளியீட்டில் சில்மியூர் முனீரா வாஹித் எழுதிய “கரையோர வேர்கள்“ நூல் வெளியீட்டு நிகழ்வு 2022.08.21 (ஞாயிற்றுக்கிழமை) பதுளை மாவட்டம் சில்மியாபுர அல் முர்ஷித் மகா வித்தியாலயம் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு அல் முர்ஷித் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம். செய்யத் முஹம்மத் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வெலிமடை வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர்களான ஆர். எம் நவாஸ், கௌரவ அதிதியாக வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர் ஜே. டி. எம் முர்ஷித், சிறப்பு அதிதிகளாக அதிபர்களான ஏ. எஸ் ரஹ்மத்துல்லாஹ் எச். எம் பதஹுல்லாஹ், கே. வேலாயுதம் மற்றும் அரசியல் பிரமுகரான ஏ. எம் இல்லியாஸ் அவர்கள் கலந்து கொண்டனர். கண்ணியத்திற்குரிய உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் புத்திஜீவிகள், கல்விமான்கள் மற்றும் மாணவர்கள் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு எஸ் எஸ் ஆர் சில்மியாபுரா நலன்புரிச் சங்கம் அனுசரணை வழங்கியுள்ளது.









# சமூகவலைதளங்களில் எழுத்தாளராக பலர் முன்னிலையில் அறிமுகமான ஆர்கலி...

ஆர்கலி தமிழ் மணம் கமழும் யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் எனும் சோழியபுரத்தை சேர்ந்தவர். தரம் மூன்று வரை அங்கே சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் என்னும் பாடசாலையில் கல்வி கற்றார். பின்னர் காலச்சூழ்நிலையால் குடும்பத்தோடு இடம்பெயர்ந்து கொழும்புக்கு வர வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே அதன் பின்னர் கொழும்பு இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும் அதனை தொடர்ந்து கொழும்பு இராமநாதன் இந்து மகளீர் கல்லூரியிலும் எட்டாம் தரம் வரை கல்வி கற்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிய நிலையில் விக்ரோறியாக் கல்லூரியில் கல்வியை தொடர்ந்தார். சிறுவயது முதல் அதிகம் பேசாத அமைதியான சுபாவம் கொண்ட இவருடன் எளிதில் நண்பர்கள் உருவாகினாலும் குடும்பத்தாருடனான தொடர் இடமாற்றம் காரணமாக நண்பர்களுடனான இணைப்பினை தக்கவைத்து கொள்ளும் சந்தர்ப்பம் அரிதாகவே காணப்பட்டது. ஆனால் புத்தகங்களுடனான இவரது நட்பு மாத்திரம் எல்லா இடங்களிலும் புத்துயிர்த்துக் கொண்டது. ஆமாம். கல்வி நேரம் போக கிடைக்கும் நேரங்களில் எல்லாம் புத்தகங்களுடன் தனது நேரத்தை செலவு செய்து கொண்டார்.

பின்னர் உயர்தரத்தில் உயிரியல் பிரிவினை தெரிவு செய்தாலும் பொறியியல் மீதான அதீத பிரியம் எப்படியோ பாடசாலை முடிந்த பிற்பாடு பொறியியல் கற்க தூண்டியது. தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பொறியியல் கல்வியை தொடர்ந்து தனது வேட்கையை வெற்றியாக்கினார். பெண்களுக்கு கட்டட நிர்மாணத்துறை கடினமான ஒன்று என்னும் கூற்று பலர் மத்தியில் இருந்தாலும் இவை எல்லாவற்றையும் கடந்து "ஆர்கலி இன்ஞ்சினியரிங் அன் கன்ஸ்ட்ரக்ஷன்" என்னும் கட்டட வடிவமைப்பு மற்றும் நிர்மாண சேவைகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனம் ஒன்றை தைரியமான பெண்ணாக யாழ்ப்பாணத்தில் 2021 மார்ச் மாதம் நிறுவி வெற்றிகரமாக நடாத்தி வருகிறார். அத்துடன் "Aarkali Maths Mount" என்னும் தனியார் கல்வி நிறுவனமொன்றையும் ஆரம்பத்தில் நிகழ்நிலையில் ஆரம்பித்து இப்பொழுது வெற்றிகரமாக நடாத்தி வருவதுடன் குறிப்பிட்ட அளவிலான ஏழை மாணவர்களுக்கு அக்கல்வி நிறுவனத்தினூடாக இலவசமாக மற்றும் சலுகை அடிப்படையில் கல்வியினையும் வழங்கி வருகிறார்.

இப்படி இருக்கையிலும் இவரது கலைத்துறைக்கான அடித்தளம் போடப்பட்டது பாடசாலையில் தான். சிறுவயது முதல் பாடக் கொப்பியின் பின்பகுதியில் நான்கு வரி கவிதைகள், சிறுகதைகள், குறுநாடகம் என கிறுக்கி வைக்கும் பழக்கம் கொண்டவரே ஆர்கலி. தவணைச் பரீட்சைகளின் போது தமிழ் பாட பரீட்சையின் கட்டுரையாக்கம் எனும் கடைசி வினாவில் இவர் எழுதும் சிறுகதைகளுக்கு தமிழ் ஆசிரியரும் அவரது சகாக்களும் மிகப்பெரிய ரசிகர்கள் மாத்திரமல்ல அவரது முதல் பாராட்டுக்கள் என்றும் கூறலாம்.

பதின்நான்காவது வயதில் பாடசாலையில் இடம்பெற்ற உலக

சுகாதார தினத்தில் வெளியாகிய சஞ்சிகையில் இடம்பெற்ற "என்னது சுசமா?" என்னும் சிறுகதை இவரது முதலாவது மேடை பாராட்டை பலர் மத்தியில் அவருக்கு பெற்றுக் கொடுத்த படைப்பு. அங்கு தொடங்கிய பயணம் இவரை முதலாவதாக பாடசாலை சமூகத்தை திரும்பிப் பார்க்கச் செய்தது. பாராட்டுகள் யாவும் மேலும் மேலும் கலைத்துறையில் உள்வாங்கச் செய்தது. பாடசாலையில் நடைபெறும் சிறுகதை, கவிதை போட்டிகளில் கலந்து பல வெற்றிகளையும் பெற்றார். அவரது தமிழ் ஆசிரியரின் உந்துதலால் வெளிவாரியாக இடம்பெறும் மகளீர் தினம் போன்ற நிகழ்வுகளின் போட்டிகளிலும் கலந்து பரிசில்களை பெற்று தன்னை செதுக்கிக் கொண்டார்.

பின்னர் சமூக வலைத்தளங்களில் எழுத ஆரம்பித்தார். இயல்பான அவரது மொழிநடை பலரை கவர்ந்து ரசிகர்கள் ஆக்கியது. அதனை தொடர்ந்து தனது கவிதைகளுக்கு தனது குரல் மூலம் குரல் வடிவத்தை கொடுத்து காணொளிகளாகவும் பதிவிட்டு வந்தார்.

அவ் எழுத்துக்கள் மீதான ஈர்ப்பினால் இதனிடையே புத்தக வெளியீட்டிற்கான வாய்ப்பு ஒன்று முகநூல் வழியாக கிடைத்தும் உலக நோயான கொரோனா காலகட்டம் காரணமாக ஆர்கலிக்கு கிடைத்த வாய்ப்பு கை நழுவிச் சென்றது. துவண்டு போகாது எழுத்துகளின் வீரியத்தை அதிகப்படுத்திக் கொண்டார். இதன் காரணமாக பாடலாசிரியர் என்னும் புதிய பரிணாம மாற்றத்தை எழுத்துக்கள் உருக்கியது. "வசீகரா" பாடலுக்கு புதிய வரிகளை கொடுத்து "வெண்மேகமே" என்னும் cover song வெளியாகி பலரது பாராட்டுக்களை பெற்றது. அதனை தொடர்ந்து அருந்ததி தயாரிப்பில் CV laksh இன் இசையமைப்பில் உருவான "கெட்டிமேளம்" என்னும் வர்த்தக ரீதியாக பாடலுக்கு வரிகளை எழுதும் வாய்ப்பு ஆர்கலிக்கு கிடைத்தது. இது பலர் மத்தியில் பரவலாக பேசப்பட்டு பலரது பாராட்டுக்களையும் அள்ளிக் குவித்தது.

இதனை தொடர்ந்து புதிதாக வெளியாகவிருக்கும் விடயங்களுக்காக வேலையில் இருக்கும் மையல், மரங்கொத்தி போன்ற பாடல்களுக்கு வரிகளை எழுதியதுடன் மேலும் இரு Remake Cover Song க்கு வரிகளை எழுதி வெளியிடும் பணியில் இணைந்து ஈடுபட்டு வருகிறார். முதலாவது புத்தக வெளியீட்டுக்கான பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் கூடிய விரைவில் சமூகம் சார்ந்த ஓர் நாவலை வாசகர்கள் மத்தியில் உலாவ விட்டு புதிய மாற்றத்தை ஏற்படுத்த காத்திருக்கிறார். மற்றும் ஜேர்மனியில் வெளியாகி வரும் வெற்றிமணி என்னும் பத்திரிகையில் "தனிமை அவ்வளவு கடினமானது" மற்றும் "கவலைகள் இருக்கட்டும் மறந்துவிடு காரியம் நடக்கட்டும்






தொடர்ந்துவிடு!" ஆகிய கட்டுரை ஆக்கங்களை தொடர்ந்து பத்திரிகையில் கட்டுரைகளையும் பிரசுரித்து வருகிறார்கள். மேலும் ஓர் குரல் வடிவிலான கவிதை பதிவிடும் "ஆர்கலி கவிதைகள்" என்னும் Youtube Channel ஐயும் , "ஆர்கலி" என்னும் வாசகர் மத்தியில் வரவேற்பினை பெற்ற முகநூல் பக்கத்தினையும், "Aarkali-ஆர்கலி" என்னும் blog ஐயும் தனது எழுத்து ஊடகமாக தற்போது பயன்படுத்தி வருவதுடன் நண்பர்களின் youtube channel க்கு content writer ஆகவும் இருந்து வருகிறார்.

இவரது இயல்பான எழுத்துகளும் மனதை தொடும் மொழிநடையும் வாசகர் மத்தியில் மிகப்பெரிய தாகத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்திவிடுகிறது. கலைத்துறையின் ஆரம்ப கட்டத்தில் கடின உழைப்பினை கொடுத்து பயணித்து வரும் ஆர்கலி பல்வேறு போட்டிகள் சவால்கள் சளைக்காமல் எல்லாவற்றிற்கும் முகம்கொடுத்து தோல்விகளில் துவண்டு போகாது இதே வேகத்துடனும் வேட்கையுடனும் முயற்சிகளை முன்னெடுத்து போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் புன்னகையோடு ஒடிக்கொண்டிருக்கின்றார்.

பொறியியல் துறையில் இருந்து கொண்டு இலக்கியத்துறையில் சாதிப்பதென்பதுவே சவால் தான். நேரப்பற்றாக்குறை பொருளாதாரம், படைப்புக்களை வாசகர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் கொண்டு சென்று உலகெங்கும் சேர்ப்பது போன்ற விடயங்கள்தான் இவருக்கு பெரும் சவால்களாக இருக்கின்றன. இலக்கியம் தன் வாழ்க்கை. பொறியியல் தன் வளர்ச்சி என்று இரு துறைகளிலும் சாதிக்கும் நோக்கோடு ஒடிக்கொண்டிருக்கும் இலக்கிய பெண்ணான பாடலாசிரியர் மற்றும் எழுத்தாளர் ஆர்கலிக்கு அன்பு வாழ்த்துகள்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022



# நேர்மையின் பரிசு

## சிறுவர் கதை



மஜினா உமறுலெவ்வை
மாவடிப்பள்ளி.

பாடசாலையில் புதிதாக மாணவன் ஒருவன் சேர்க்கப்பட்டான். பிஞ்சுபோன சப்பாத்தும் கிழிந்த புத்தகப்பையுடனும் இருப்பதைக் கண்டு சக மாணவர்களும் அவனை கிண்டல் செய்தார்கள். ஒருநாள் ஆசிரியர் தனது ஆயிரம் ரூபா பணத்தை மேசையில் வைத்தவர் திரும்ப எடுக்காமல் மறந்து சென்றுவிட்டார். இதைக்கண்ட மூன்று மாணவர்கள் அந்தப் பணத்தை எடுத்து யாரிடமும் சொல்லாமல் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர். இதை பார்த்த ஏழைச்சிறுவனோ ஆசிரியரிடமே இந்தப் பணத்தை ஒப்படைத்துவிடுங்கள்.

இது அவரின் முக்கிய தேவைக்கான பணமாக இருக்கலாம் என கூறினான். நீ இதை ஆசிரியரிடம் கூறினால் நீதான் திருடினாய் என்று நாங்கள் சொல்வோம். யாரிடமும் சொல்லாமல் இருப்பது உனக்கு சிறந்தது என அவனை மிரட்டினார்கள் .

ஆசிரியர் வீடு திரும்பியதும் தனது மனைவியின் வைத்திய செலவிற்காக வைத்திருந்த பணம் எங்கேயோ தொலைந்துவிட்டது என பல இடங்களிலும் தேடினார் கிடைக்கவில்லை. மறுநாள் பாடசாலை வந்து சக ஆசிரியரிடம் பணம் காணாமல் போன விடயம்பற்றி கவலையோடு பேசினார். இதை கண்ணுற்ற ஏழை சிறுவனோ வீட்டில் தான் தினமும் கஷ்டப்பட்டு சாப்பிடாமல் சேர்த்து வைத்த உண்டியல் பணத்தை இழக்கமனமின்றி சிறிது நேரம் இமைமூடாது பார்த்துவிட்டு மறுநாள் பாடசாலையில் பணம் சேர்த்த உண்டியலை ஆசிரியரிடம் கொடுத்தான்.

“இந்தாங்க சேர் இதில் நான் சேமித்த காசு இருக்கு இதை எடுத்துக்கொண்டு உங்க மனைவிய குணப்படுத்துங்க” என்று கூறினான். இதைப்பபார்த்த ஆசிரியர் ரொம்ப மகிழ்ச்சியடைந்து ”உன்னோட இந்த நல்லமனசு யாருக்கும் வராது நீ கஷ்டத்தில் இருந்து கொண்டு அடுத்தவருக்கு உதவ நினைத்தாயே உண்மையில் நீதான் சிறந்த மாணவன் ”என சக மாணவர்கள் ஆசிரியர்கள் முன் அவனை பாராட்டிவிட்டு ”இந்த உண்டியலை நீ வைத்துக்கொள் இன்று நான் சம்பளம் எடுத்துவிட்டேன்” என தனது சம்பளத்தில் வந்த பணத்தில் ஐயாயிரம் ரூபாவை அவனுக்கு கல்வி கற்பதற்கு அன்பளிபாய் கொடுத்தார்.

பணத்தை பங்கிட்டுக் கொண்ட மூன்று மாணவர்களும் ஆசிரியரிடம் பணத்தை கொடுத்து தாங்கள் செய்த செயலுக்காக மன்னிப்புக் கேட்டனர். அந்த ஏழைச் சிறுவனை தன் நண்பனாகவும் ஏற்றுக்கொண்டார்கள். ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து ...

நல்ல மனப்பாங்கு எப்போதும் நம்மை கைவிடாமல் உயர்வைத் தரும். எல்லோரும் நல்ல மனதோடு வாழ பழகிக்கொள்ளுங்கள் எனக் கூறினார்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022



# பயிர்களை மேயும் வேலிகள்

## (வதைமுகாம்களாகி வரும் பல்கலைக்கழகங்கள்)



ஆர்.எம்.மனாஸ்
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

வேலிகள் பயிர்களை மேயுமா? என்ற கேள்வி உங்கள் மனங்களில் உதிக்கலாம். உங்கள் மனங்களின் உதயம் நியாயமானது தான். இந்த பகுதியை முழுமையாக வாசித்த பின் நீங்களே உணர்வீர்கள் உதயத்தின் உண்மையையும், பிரகாசத்தையும்.

இலங்கை திருநாடானது கல்வி ரீதியில் அபிவிருத்தி அடைந்து வருகின்ற பல கல்விமான்களை உருவாக்கியுள்ள பல்கலைக்கழகங்களை கொண்டவொரு நாடு தான். இருந்தாலும் அவ்வாறான பல்கலைக்கழகங்களில் மறைமுகமானதொரு மௌன அவஸ்தையின் குமுறல்கள் மாணவர்களின் மனதுகளிலே நெட்டித்தள்ளிக் கொண்டிருக்கின்றன. அந்த வலிகளை வெளிக்கொணர்வதே என் நோக்கம்.

இலங்கையினுடைய பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தன்னுடைய பதின்மூன்று வருட பாடசாலைக்கல்வியை பல தடைகளை தாண்டி நிறைவு செய்து தன் இலக்கான சர்வகலாசாலையை அடைகின்றார்கள். அதுவும் உயர்தரத்தில் வெட்டுப்புள்ளிக்கமைய சித்தி எய்திய 10% -20% மாணவர்கள் மட்டுமே. இவ்வாறான போட்டி நிலையிலிருந்து வென்று பல கனவு மூட்டைகளை உள்ளத்திலும் உதிரத்திலும் சுமந்து கொண்டு பல்கலைக்கழக பயணத்தை மேற்கொள்கின்றார்கள். எண்ணற்ற கனவின் கனத்தை தாங்கிக் கொண்டு பல்கலைக்கழகங்களுக்கு முதல்காலடி எடுத்து வைக்கின்ற மாணவர்களின் ஆரம்பத்திலே உண்மையிலே வேதனைக்குரிய கசப்பொன்றை சுவைக்கிறார்கள். அது தான் பகிடிவதை.

கல்வி என்ற வேலிகளின் பாதுகாப்பால் அறிவு, அனுபவம், சமத்துவம், சகோதரத்துவம், தலைமைத்துவம் இன்னும் சொல்லிலடங்கா ஆளுமை விதைகளின் ஊடாக சமுதாயத்திற்கு நல்ல பயிர்களாக அறுவடை விளைய வேண்டுமென்ற கனவோடு வரும் மாணவர்களினுடைய கல்விகூடங்களே அவர்களை தின்றுவிடுகிறது. எவ்வாறென்றால் பல்கலைக்கழகங்களில் புதுமுக முதலாம் ஆண்டிற்கு வருகை தரும் புதிய மாணவர்களை நான்காம் வருட உயர்மாணவர்களான சீனியர்ஸ் மாணவர்கள் பகிடிவதை செய்வது கவலைக்குரிய விடயமே ஆகும். தங்களுடைய ஆளுமையையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி அவர்களை துன்புறுத்தி அடிமைப்படுத்தும் ஏராளமான வக்கிரமமான சம்பவங்கள் இலங்கையில் நடந்துள்ளன. நடந்து கொண்டு தான் இருக்கின்றன. மறுப்பதற்கிடமில்லை.

சீனியர்ஸிற்கு ஜூனியர்ஸ் கட்டுப்பட வேண்டும், மரியாதை செலுத்த வேண்டும், அவர்களின் சொல்லுக்கமையவே ஜூனியர்ஸினுடைய நடை, உடை, பாவனை அமைய வேண்டுமென்பதற்காக கனவு சுமந்து வரும் மாணவர்களின் ஆரம்பங்களை அவஸ்தையாக்கி உள்ளாக்கிவிடுகின்றார்கள். உடல் ரீதியான துன்புறுத்தல்கள், உளரீதியான அவமானங்களை ஏற்படுத்தலும் பயத்தை ஏற்படுத்தலும், பாலியல் ரீதியான சேட்டைகள் போன்றவற்றை சீனியர்ஸ் மாணவர்கள் மேற்கொள்ளும் போது புதுமுக மாணவர்கள் அதிகமாக பல்வேறு உடல், உள ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டு ஏராளமான உயிர்கள் மாய்த்துக்கொண்டமையும், மாய்த்துக் கொன்றமையும், உடல் ஊனங்கள், உடற்சிதைவுகள், பாலியல் வன்கொடுமைகள் போன்ற கேவலமான செயற்பாடுகளை மாணவர்கள் தங்களுக்கிடையே செய்து கொண்டிருப்பதை வரலாறு

சான்றுபடுத்துகின்றது.

### பகிடிவதைகளின் தோற்றமும் இலங்கையில் அதன் வளர்ச்சியும்

உலகில் முதன்முறையாக 1873ஆம் ஆண்டு கொர்னல் பல்கலைக்கழகத்தில் மாணவன் ஒருவன் ஏனைய மாணவர்களால் பகிடிவதையால் தற்கொலை செய்யப்பட்டதே முதல் பகிடிவதை வழக்கு பதிவாகும். இதன் பின்னரே பகிடிவதை குறித்த பார்வை அரசியல் பக்கமும், மக்கள் பக்கமும் திரும்பியது. அவ்வாறே பல நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதைகள் இயல்பாகவே இடம்பெற்று வரலாயிற்று. அவற்றை தடுக்க சட்டங்கள் இருந்தாலும் வெறும் எழுத்துருவாக்கமாகவே அவை காட்சி தந்தன. இப் பகிடிவதையினுடைய தாக்கம் இலங்கையிலும் வேரூன்றாமல் இருக்கவில்லை.

1942 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகமே இலங்கையில் உருவாக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாகும். இக்காலப்பகுதியானது பிரித்தானியரின் ஆதிக்கம் இலங்கையில் காணப்பட்டது என்பதால் மிஷனரி கல்வி முறைகள், பாதுகாப்புக் கல்வி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு சென்று மீண்ட ஒரு சில வகுப்பினரை இலங்கை பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே ஒரு இராணுவ வீரனை தெரிவு செய்யும் போது உடல் ரீதியான வலிமை, பயிற்சிகள், உடல் ரீதியான தகுதிகள் எவ்வாறு பார்க்கப்படுமோ அதே செயற்பாடுகளை கொழும்பு பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்ட இராணுவ வீரர்கள் ஏனைய மாணவர்களுக்கு இராணுவ தகுதிகாண் செயற்பாடுகளை செய்யுமாறு கூறி அடிமைப்படுத்தினர்.

அவஸ்தைபடுத்தினர். மேலும் பல்கலைக்கழகங்களுக்கு மத்தியதர வர்க்கத்தினரின் பிள்ளைகள் அதிகமாக நுழைவு பெற்றதால் இயல்பாகவே அப்பிள்ளைகளின் இரத்தத்தில் வேறுபாடுகளின் தாக்கம் ஊறியிருப்பதால் அவர்களுக்கும் சாதாரண பிள்ளைகளுக்குமிடையான ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றினால் சாதாரண மாணவர்களை நடுத்தர வகுப்பினர்களும், இராணுவத்திலிருந்து விலகிவந்தவர்களும் அடிமைப்படுத்தக்கூடியதொரு நிலையினுடைய ஆரம்பமே இலங்கையில் பகிடிவதையின் ஆரம்பம் ஆகும்.

1949ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகம் அதனைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்பது ஒரு சம்பிரதாயம் போலவே காணப்பட்டது. மாணவர்களே மாணவர்களை அடிமைப்படுத்தி துன்புறுத்தி தங்களுக்கு கட்டுப்படச்செய்து புதுமுக மாணவர்களின் உரிமையை பறிக்கின்ற பகிடிவதை முறை எல்லா பல்கலைக்கழகங்களிலும் இன்றுவரை பரவி காணப்படுகின்றது. பகிடிவதையால் உடல் ரீதியான, உள ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்ட மாணவர்களினுடைய இழப்புகள் ஏராளம். நான் சொல்லும் சில சம்பவங்கள் கண்ணீரை வரவழைக்கும். சில சம்பவங்கள் ஆத்திர அலைகளை ஆர்ப்பரிக்க செய்யும். சில நிகழ்வுகள் சமுதாயத்தில் வேறுபாடுகளை ஒழித்து சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டிய இளைய மாணவ சமுதாயத்தினரே தாம் கல்வி கற்று தெளிய வேண்டிய பல்கலைக்கழகங்களிலே இவ்வாறான செயற்பாடுகளை செய்கின்றனரே? என்ற ஏக்க வினாவை பின்வரும் சம்பவங்கள் உங்கள் உள்ளங்களில் உற்பவிக்கும்.

இதுவரை இலங்கையில் பல்கலைக்கழகங்களில் சீனியர்ஸ் மாணவர்களின் வக்கிரமமான பகிடிவதை செயற்பாடுகளால் பாதிப்படைந்த சம்பவங்கள் இவை : 1974ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் நான்காம் வருட மாணவர்கள் புதுமுக மாணவர்களை பகிடிவதைக்குட்படுத்தியதால் 06 பேர் சிறைபிடிப்பும் 12 பேர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றமும். 1975ம் ஆண்டில் பேராதனை பல்கலைக்கழகத்தில் சீனியர்ஸ் மாணவர்களின் பாலியல் பகிடிவதையின் உச்சகட்ட துன்பத்தை தாங்க முடியாத இரத்தினசீலி என்ற மாணவி இரண்டாவது மாடியிலிருந்து கீழே குதித்ததால் முடக்குநோய்க்கு ஆளாகியதோடு 2002ம் ஆண்டு அந்த மாணவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் உள்ளங்களை உலுக்கிப்போட்டது. 1993ம் ஆண்டில் உருகுணை பல்கலைக்கழகத்தில் சுமிந்த புஞ்சிஹேவா என்ற மாணவன் பகிடிவதை துன்புறுத்தல் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டமையும் அதே ஆண்டில் பிரசங்க நிரோசன என்ற மாணவனின் தற்கொலையும். 1997ஆம் ஆண்டில் அம்பாறை ஆடி தொழிநுட்பக்கல்லூரியிலிருந்த மேல்நிலை வகுப்பு மாணவர்கள் ஒரு மாணவனை நீண்ட நேரம் உடற்பயிற்சி கூடத்திலுள்ள கனதியான உபகரணங்களை தூக்கச் செய்தும் மதுவை அருந்தச்செய்தும் கொடுத்த வக்கிரமமான செயற்பாட்டால் மாணவன் இறந்தமை கொடூரமான பகிடிவதை கொடுமை சம்பவமாகும்.

1997ல் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் பயின்று கொண்டிருந்த 21 வயதுடைய பிரகாஷ் என்ற மாணவனுக்கு நான்காம் வருட மற்றும் மூன்றாம் வருட மாணவர்களால் கொடுக்கப்பட்ட உடலியல் துன்புறுத்தல்களால் சிறுநீரகம் பாதித்து இறந்தமை பகிடிவதையின் பாரியதொரு இழப்பாகும். 2002ம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த சமந்த விதானகே என்ற மாணவன் பகிடிவதைக்கு எதிராக குரல்கொடுக்க கலந்துரையாடிய போது அம் மாணவனை மூன்றாம் வருட மாணவர்கள் படுகொலை செய்தமை அடிப்படை மனித உரிமைக்கே வழியில்லாததொரு நிலையை மேற்கோள் காட்ட முடிகின்றது.

2006ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பகிடிவதைக்கு எதிரான கட்டளைகளுக்கு மாணவர்கள் ஒத்துழைப்பு தெரிவிக்காமையால் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியிலிருந்து சந்திம விஜேபண்டார என்பவர் விலகியமை குறிப்பிடத்தக்கது.

2011ஆம் ஆண்டு உருகுணு பல்கலைக்கழக மாணவி பகிடிவதை உடல் ரீதியான துன்புறுத்தலால் பக்கவாதத்திற்குட்பட்டமையும் பல்கலைக்கழகங்களின் பகிடிவதை செய்யும் சேறுபடிந்த மாணவ காட்டேரிகளினை அடையாளம் காட்டுகின்றது.. 2013ம் ஆண்டு

பேராதனைப் பல்கலைக்கழக புதுமுக முதலாம் வருட மாணவியை 2ம் வருட மாணவிகள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் செய்தமை. 2014ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் நிஷாந்த என்ற மாணவனுக்கு பகிடிவதையால் துன்புறுத்தப்பட்டு "மார்க்ஸ் பெர்ணான்டோ" என்ற ஆண்கள் விடுதியிலிருந்து உடல் தொங்கவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது கண்கலங்க வைத்ததொரு பதிவே. 2015ஆம் ஆண்டு சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் அமாலி சத்துரிக்கா என்ற மாணவி பகிடிவதையால் தற்கொலை செய்து கொண்டமை. 2015 மொறட்டுவை பல்கலைக்கழக மாணவனொருவன் பகிடிவதையால் தற்கொலை. யாழ்பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் மாணவியொருவரை பகிடிவதை என்ற பெயரில் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய சம்பவம் பெரும் கண்டனங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது நாம் அறிந்த உண்மை தான். (இந்த அநியாயத்தை விளக்குமளவு என் உள்ளம் அவ்வளவு உறுதியானதல்ல) 2017ம் ஆண்டு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழிநுட்பவியல் பீட கம்பஹாவை சேர்ந்த ஷென் பீரிஸ் என்ற மாணவன் பகிடிவதையால் கல்வியை இடைநிறுத்தியமை.

கிழக்குப்பல்கலைக்கழகத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்பு பெண் மாணவிகளின் மீது ஆண் மாணவர்கள் சேற்றை அள்ளி இறைத்த நிகழ்வின் காணொளி வேதனைக்குரியதே. அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவனொருவன் பகிடிவதையால் துன்புறுத்தப்பட்டமை போன்ற இவ்வாறான நெஞ்சை உலுக்கும் பதிவுகள் நடைபெற்று தான் வந்துள்ளன. கனவுகளோடு வரும் மாணவர்களின் முதல் அனுபவத்தையே கசப்பாக்கி விடுகின்றார்கள் ஏனைய உயர்நிலை வகுப்பு மாணவர்கள். எத்தனையோ வலிகள் கடந்து பெற்றோரின் கனவுகளோடும் குடும்பத்தின் பொறுப்பையும் வறுமையில் வாடும் போதும் கல்வியே சிறந்தது என்றும் அதுவே உயர்த்தும் என்ற நம்பிக்கையோடு பல்கலைக்கழகங்களுக்கு வரும் புதுமுக வகுப்பு மாணவர்களை தமது இன்பத்துக்காகவும் கேலிக்கைக்காகவும் துன்புறுத்துவது தவிர்க்க முடியாத குற்றமாகும். எத்தனையோ கனவுகளோடு பல்கலைக்கழகம் சென்ற மாணவ செல்வங்கள் பகிடிவதையால் பிணங்களாக வீடுகள் திரும்பி பெற்றவர்களின் நெஞ்சை நொருக்கி அவர்களின் வாழ்க்கையை இருளாக்கி போட்டிருக்கும் இழப்புகள் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் உணர்த்தியிருக்கும். 1998ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 20ம் இலக்க பகிடிவதை தடுப்பு சட்டம் இருந்தாலும் கூட அது வெறும் ஏட்டுச்சுரைக்காயாக மட்டுமே கிடக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

முறைப்பாடுகளை கூற எந்தவொரு ஒழுங்கான அமைப்புகளும் இல்லை என்பது வேதனை தரும் விடயம் தான். "சாதிகள் இல்லையடி பாப்பா....." என்று பாரதி பாடியதற்கு காரணமே அவன் வாழ்ந்த சமூகம் வேறுபாட்டால் பிளந்த போது எதிர்நோக்கிய இன்னல்களாலும், வெறுப்புணர்வுகளாலும் தான். பாரதி எதிர்கால சமுதாயத்திற்கே குறிப்பாக மாணவர்களை நோக்கியே இந்த அறிவுரையை கூறினான். ஆனால் சாதிகள் வேறுபாடு சமுதாயத்தில் ஒழிந்தாலும் கூட வெறும் பெயர் மட்டுமே ஒழிந்திருக்கிறது என்பேன். காரணம் என்னவென்றால் சமுதாய வேறுபாட்டினுடைய ஒரு வடிவமே சாதி. மொத்த வேறுபாடுமே சாதிய வேறுபாடாகி விட முடியாது. சாதி வேறுபாட்டுக்கு முதற்காரணம் சமுதாயத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவனின் உரிமைகளை பறித்து அடக்குவதால் ஏற்பட்ட சமத்துவம் இல்லாமையால் தான். வேறுபாடுகளை களைத்து சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டிய மாணவர்களே இன்று பல்கலைக்கழகங்களில் சீனியர்ஸ்-ஜூனியர்ஸ் என்ற வேறுபாட்டை மாணவர்களிடையிலே உருவாகினால், ஒருசாரார் பிறிதொரு சாராரை அடிமைப்படுத்தும் போது யார் சமூக சமத்துவத்தை நிலைநாட்டுவது? எதிர்கால சமுதாயத்தை காக்க கூடியதொரு சமுதாயம் உருவாகுமா? சமுதாய சீரழிவுகள் முற்று பெறுமா? இவை விடை தெரியாத வினாக்களாகிவிடும். மாணவர்களிடையே நடக்கின்ற இவ்வாறான செயற்பாடுகளை கண்டும் காணாதது போல கண்ணிருந்தும் குருடர்கள் போன்றவர்களும், போலியான நளன்களும், குருட்டு தமயந்திகளும் கையில் மலர் மாலைகளுடன் வலம் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள் ஒரு சாரார்கள்.

மாணவர்களிடையில் இவ்வாறான சமத்துவமில்லாமை என்ற பகிடிவதையை அறிந்தும் அறியாத மௌனம் காக்கும் சமூகம் அதன் கேவலமான தன்மையையே பிரதிபலிக்கன்றது. மழை நீர் சேரும் மண்ணை பொருத்தே அதன் தன்மை அமைவது போல. நிர்வாகிகளே! விழித்துக் கொள்ளுங்கள். இன்று பல்கலைக்கழகங்களில் பகிடிவதை செய்பவன் நாளை இந்த சமூகத்தில் பட்டம் பெற்று வந்தாலும் சமுதாயத்திற்கு அவனால் ஒரு பயனும் கிடைக்காது. அவன் வளர்த்தவை நான்கு வருடங்களாக நல்ல பயிர்களையல்ல முட்செடிகளை வளர்க்க வேலிகள் தேவையா என்ன? சீனியர்ஸ்-ஜூனியர்ஸ் என பகிடிவதை செய்யக்கூடிய வக்கிரம புத்தி கொண்ட மாணவர்கள் எந்த தொழிலில் இருந்தாலும் அந்த தொழிலும் அவன் மக்களுக்கு உயர்ந்தோன் - தாழ்ந்தவன் என்று பாகுபாடு காட்டுவான்.

பாகுபாடு காட்டுபவனால் எவ்வாறு சமுதாயத்திற்கு நலன் செய்ய முடியும்? இன்றைய காலகட்டத்தில் பகிடிவதைகள் வெளிப்படையாக மருவியுள்ளதாக கூறப்பட்டாலும் மறைமுகமாக மாணவர்களிடையே இவை நடந்து கொண்டு தான் இருக்கின்றன என்ற கசப்பான உண்மை எத்தனை பேருக்கு தெரியும்? பல்வேறு வடிவங்களில் பல்வேறு வகைகளாக. குறிப்பாக ஒரு சில பல்கலைக்கழகங்களில் மூன்றாம் வருட மற்றும் நான்காம் வருட மாணவர்கள் புதுமுக மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் வரும் முன்பே இன்றைய நிகழ்நிலை விரிவுரைகள் இடம்பெறுவதால் புதுமுக மாணவர்களுக்குரிய பகிடிவதைகளை வாட்ஸாப் குழுமங்கள் ஊடாகவும், தொலைபேசி அழைப்புகளின் ஊடாகவும் வதைகள் நடைபெறுகின்றமையும் பெரும் கவலைக்குரியதும் கேவலத்துக்குரியதுமான விடயங்களுமேயாகும். இவற்றை பாதிக்கச் செய்பவனும் பாதிக்கப்படுபவனும் இரகசிய இதிகாசமாகவே தங்களுக்குள் கைமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

தொடரும்...

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022

# துணிந்தெழு இதழின்
# QR Code செயற்திட்டம்

**வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகின் வேகத்தோடு இணைந்து சஞ்சிகையின் ஆக்கபூர்வமான அம்சங்களை எல்லா இடங்களிலும் பயனுள்ள வகையில் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் QR Code செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**



பொது நூலகம், கல்முனை



பொது இடங்கள் - ஏறாவூர்





பிரதேச செயலகம் - பூநகரி (கிளிநொச்சி மாவட்டம்)




காரைதீவு தபால் அலுவலகம் (புத்தள மாவட்டம்)




பிரதேச சபை பொது நூலகம், மூதூர்



பொது நூலகம், காத்தான்குடி




மருதமுனை (அம்பாறை மாவட்டம்)



வவுனியா - அல் அமீன் மு.ம.வித்தியால பொது நூலகம்



பலாங்கொடை - இரத்தினபுரி மாவட்டத்தில்



நுவரெலியா மாவட்டத்தில்

# ஓவியக்கலை

## கலைஞர்களுக்கான களம்





அக்ரம் – ஏறாவூர்






உமர்
ஏறாவூர்

**உங்கள் ஓவிய திறமையை வெளிக்காட்ட நாம் களம் அமைக்கின்றோம்.**

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்
+97431060249 | 0757000791 skytamil.lk@gmail.com



# இப்படியும் ஒரு நற்பண்பாடு



கே.எம். ஷாக்கிர்
தோப்பூர்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவோ விடயங்களை கற்கின்றான். எத்தனையோ வகையான செல்வங்களை சம்பாதிக்கிறான். இன்னும் அவற்றிற்காக வேண்டி தன் வாழ்நாளில் அதிகமான நேரகாலத்தையும் செலவிடுகின்றான். ஆனால் இவ்வாறு அவன் எவ்வளவு பெரிய படிப்பை படித்தாலும், அதிகமதிகம் சொத்துக்களை சேர்த்துக் கொண்டாலும், அந்த மனிதரிடம் பண்பாடு என்ற ஓர் அம்சம் இல்லையென்றால் அவனும் கூட சமூகத்தில் பெறுமதியற்றவன்தான். இந்த வரிசையில் ஒருவனது வாழ்க்கைக்கு பட்டம் பதவிகள், சொத்து செல்வங்கள் எந்தளவு அவசியமோ, அதை விட இந்த பண்பாடு என்பதும் அவனுக்கு அவசியமான ஒன்றே. இன்றைய சமூகம் ஒருவனை அவன் கற்றவனா என்று பார்ப்பது அரிது. மாறாக அவனிடம் பண்பாடுகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதே அதிகம். இதனைத்தான் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் வலியுறுத்தினார்கள். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினார்கள்.

எத்தனையோ விதமான பண்பாடுகள் இருக்கின்றன. அதில், மற்றவர்களை மேலாகக் கருதி, அவர்களை பாராட்டி, மனதார வாழ்த்துவதும் ஒன்றே. எமது வாழ்நாளில் நாம் எத்தனையோ போட்டிநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கின்றோம். இன்னும் நாம் எத்தனையோ போட்டிகளை கண்டு கழித்திருக்கின்றோம். ஆனால் எப்போதாவது போட்டிகளில் மற்றும் பரீட்சைகளில் வெற்றிபெற்றவர்களை நாம் பாராட்டி இருப்போமா? அல்லது அவர்களுக்கு வாழ்த்துக்களையாவது தெரிவித்திருப்போமா? என்பது கேள்விக்குறிதான். இதற்கான பதிலாக இல்லை என்பதைத் தவிர வேறு எதனையும் எம்மில் அதிகமானோரால் கூற முடியாது.

ஒருவரை பாராட்டுவதென்பது மிகச் சிறியதொரு விடயமாகயிருந்தாலுமே, இவ்வாறு பாராட்டும் போது எம்மிடம் ஏதும் குறைகின்றதா அல்லது எங்களுடைய நேரம்தான் வீணடிக்கப்படுகின்றதா என்றால் நிச்சயமாக இல்லை. இந்த ஒரு சிறிய நல்ல செயலைச் செய்வதால் எம்மிடமிருந்து எதுவும் குறைந்துவிடப்போவதுமில்லை. ஆனால் இதனை செய்வதற்கு எங்கள் உள்ளம் இடமளிப்பதில்லை என்பதுதான் யதார்த்தம். வறண்டு போன எங்கள் உள்ளங்கள் மற்றவர்களை மனதார வாழ்த்துவதற்கு அனுமதிப்பதில்லை. இவற்றுக்கெல்லாம் காரணம் எங்கள் உள்ளங்களை கல்லாக்கி வைத்திருக்கும் பொறாமை என்ற உளநோயே.

எனவே, பொறாமை என்ற ஒரு தீய குணத்தின் விளைவாக, மற்றவரை பாராட்டுதல் என்ற ஒரு சிறப்பான விடயத்துடன், எங்களைப் பற்றிய நல்லெண்ணத்தை மற்றவர்களின் உள்ளத்தில் ஏற்படுத்தக் கூடிய ஓர் செயற்பாடும் தடுக்கப்படுகின்றது. இன்னும் அதன் மூலம் ஏற்படவிருக்கும் எத்தனையோ விதமான நலவுவுகளும் கூட எம்மை விட்டும் தூரமாக்கப்படுகின்றன. ஆகவே இந்தப் பொறாமை என்ற விடயத்தை புறந்தள்ளிவிட்டு மற்றவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் பற்றிய நல்லெண்ணத்தை எம்மில் ஏற்படுத்தி சகல விடயங்களையும் நேர்மறையாக நோக்கும் போது பல மாற்றங்களை எம்மத்தியில் ஏற்படுத்த முடியும்.

எனவே ஒருவரைப் பாராட்டி அவரை மனதார வாழ்த்துவதென்பது மிகவும் அற்பமானதொரு விடயமாக இருந்தாலும், அதன் மூலம் எங்கள் மத்தியில் ஏற்படவிருக்கும் பரஸ்பர புரிந்துணர்வும், நிறைவான சந்தோஷமும் எந்தளவு உயிரோட்டமானது என்பதை நாம் ஒருபோதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. எத்தனையோ நற்பண்பாடுகள் எமது சமூகத்தில் பரந்து காணப்பட்டாலும் மற்றவர்களைப் பாராட்டுதல் என்ற இந்த விடயம் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. ஆகவே இவ்வாறு மற்றவர்களை பாராட்டுகின்ற ஒரு நல்ல, மிகச் சிறந்த பண்பாட்டிற்காக, எங்கள் மத்தியில் குடிகொண்டிருக்கும் வறட்டு கௌரவம் மற்றும் பொறாமை போன்ற தீய குணங்களை பிடுங்கி எடுத்து அடியோடு அழித்துவிட வேண்டும். இதன் மூலம், இவ்வாறான சிறிய நற்பண்புகளை, நற்செயல்களை எங்கள் மத்தியில் வளர்ப்பதற்கு அடித்தளமிட முடியுமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இது ஒரு சாதாரண விடயமாக இருந்தாலும் கூட இதன் மூலம் ஏனைய மனிதர்களை ஏதோ ஒரு வகையில் சந்தோஷப்படுத்த முடியுமாயிருக்கும். அதுமாத்திரமன்றி இப்படியான ஒரு பண்பாட்டின் மூலம் மனிதர்களது உள்ளங்களை வென்று சமூகத்தில் அதிகமான மனிதர்களைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடியதாகவும் இப் பண்பாடு இருக்கும். எனவே இப்படிப்பட்ட நற்பண்பாடுகளை உயிர்ப்பிப்பதன் மூலம் சமூகத்தில் ஒருவரையொருவர் வாழ்த்துகின்ற, பாராட்டுகின்ற ஒரு நல்ல கலாசாரத்தை ஏற்படுத்த முடியும் என்பது உறுதி.



# இறுதி வேதம்

இறைவன் அருளிய இறுதி வேதம்
இம்மை வாழ்வின் இயல்பை கூறும்
இறுதி நபி(ஸல்) இன் பண்பை காட்டும்
இறுதிநாள் வரையிலும் இறைக்கட்டளைப் பேசும்

மூடத்தை களைத்திட்டு ஓரிறையைப் போதிக்கும்
நெறி தவறா வாழ்வியலுக்கு வழிகாட்டும்
மனித நேயத்தை செதுக்கிடும்
இறைவன் அருளிய அரும் பெரும் பொக்கிஷம்

இறையச்சமில்லா இதயத்தை மாற்றிடும்
பாவத்தை நோக்கிய பயணத்தை முற்றுப்பெற செய்திடும்
உண்மையை மட்டுமே இதன் வசனங்கள் பேசும் உம்மி
நபியின் உம்மத்திற்கு நேர்வழி காட்டிடும்

குழம்பியுள்ள மனதிற்கு மருந்தாய் மாறும்
வாயால் மொழிய நன்மைகள் குவிந்திடும்
அழிந்து போன சமுதாயங்களின் சம்பவங்களை
படிப்பினையாய் மாற்றும் அறிவியல் பேசி ஆச்சரியமூட்டும்

அஞ்ஞானம், மெஞ்ஞானம் கூறி மெய் சிலிர்க்க வைத்திடும்
வாசித்து, சிந்திப்போருக்கு அத்தாட்சிகளை எத்திவைக்கும்
நபிக்கு வஹியாய் வந்த இறைவனின் பேச்சு என
நிரூபிக்கும் அல்குர்ஆனை
வாசித்து,விளங்கி எத்திவைப்போம்

பர்மிலா மன்சூர்
அக்குரஸ்ஸ



# நிலையான நிலையை தேடி

காலங்களில் மாறுகின்ற காலநிலை.......
பார்த்து ரசிக்கின்றோம் இயற்கை
வளங்களை......காட்சி காட்டும் மாய நிலை.....
உள்ளம் உணருமா உண்மை நிலை ? ......

வேண்டுதல் நிறைவேற துடிக்கும் மன நிலை.....
காதலால் மறந்து போனாய் சுய நிலை .......
நீ உணர்ந்து கொள்ள மறந்த சூழ்நிலை......
தற்போது காட்டும் தீர்வு நிலை...
உறவுகளில் விரிசல் தோன்றிய பிரிவு நிலை......

இவை கூறுமா மறுநாள் நடப்பு நிகழ்வுகளை.......
முடிந்தவரை பிறருக்கு செய் உதவிகளை.....
தியானத்தில் மூழ்கி அடைகிறார் முக்தி நிலை......
பாசத்திற்கு ஏது விலை.....

கற்றோர் செல்கிறார் உயர் நிலை.....
கண்ணியம் மறப்பவர் அடைவார் துயர
நிலை......உலகம் கூறும் பல செய்திகளை.....
புத்திக்கு எட்டாதவருக்க அது பயனில்லை......
சிந்தனை என்பது ஒரு கலை.....
அதற்கு எல்லை உளவியலிலும் இல்லை......

சாதியா சம்சுதீன்
நாவலப்பிட்டி



# திருமணம்

தினம் தோறும் திரைச் சீலை திசையே திண்டாடும் உள ஆசைகளை உடலுறவால் உறக்கமின்றி, இடை இடையே இன்பமென இன்னிசை இயற்றி இரு இளைய இமைகள், கனவரியா காலமறியா கற்பை அன்பென எண்ணி அலைகளெழுப்பி, கழிக்கும் தீபாவளி அல்ல திருமணம்....

(திருமண தம்பதியினர்)
உலகம் அறிய ஊர் அறிய, புதுவண்ண புத்தாடை அணிய,கார்மேகம் கவிழ, தார் பூசப்பட்ட தரையே, கலர் கலராய் காரில், இளைய ராஜா இசையெழுப்பி, அரை அழகாய் ஆடை அணிந்து, கை கோர்த்து கை தட்டும் வண்ணம், வரவேற்கத்தக்க வரமேற்கபடாத, வானவர் களுக்கிடையே வதந்தி வர இறங்கும் இரு இளைய இலைகள் அல்ல திருமண தம்பதியினர்

(அவ்வாறாயின் ஆண் எவ்வாறு இருக்க வேண்டும்)

பணமில்லா பட்டாடை அணியா,
பாதை வலியே புது பாடல் பாடி பறக்கா,
பல பெண் பின்னே பெயர் பெற்று,

அவள் முந்தானை முறையே முகம் தொடரா,
பல பரகசப்பெண்களின் பேரன்பை பெறா,
உடலுறவை உயிராய் எண்ணா,
உ ள உறவை உலகமாய் எண்ணும்,

எட்டு சதம் சம்பாதிக்கும், சில்லறை கடை அருகே சிக்ரட் அருந்தா ஆணும், ஆயிரம் வருடம் அழகாய் ஆருயிராய் காப்பான் உன்னை.....

( பெண் எவ்வாறு இருக்க வேண்டும் )
பல பெறுபேறு களை பெற்று,
பல ஊறாண்களின் உற்றுப்பார்க்கும் இமை இடையே சிலுசிலுப்பை ஏற்படுத்தி,

சிகர சிகரமாய் சீதனம் தந்து,

வெண்மை வெண்பாவாக இல்லாவிடினும், பணமில்லா பண்பானாகவும், குறையில்லா குணமுடையவானாகவும், அழகில்லா அன்பானகாபவும்,

கலையில்லா கருப்பானாகவும், கிளையில்லா தனி மனிதனானாலும், நசுங்காத நண்பனாய்

தோல் தரும் தோழனாய் தோன்று என் வாழ்வில், என்பவளும் சிறந்த சிற்றரசிக்கான உதாரணமேயாகும்.



எம்.ஆர்.எஃப். சப்ரினா
மாவனல்ல

# ஏங்கே மனிதம்...

பொதுவுடமை பேசும் மானிட வர்க்கத்தின் விழிகள்
குருடாகிவிட்டதோ...!

சமத்துவம் என வரிக்கு வரி வரையும்
சமத்துவவாதிகளின் நா அறுக்கப்பட்டு விட்டதோ....

பத்திரிகா தர்மம் என போர் கொடி ஏந்தும் ஊடகத்துறை
பத்தி எரிக்கப்பட்டு விட்டதோ...

அரை சான் வயிற்றுக்கு அல்லல்படும் புத்தகப் பை சுமக்க
வேண்டிய கரங்கள் பிச்சை பாத்திரம் ஏந்தாமல் எச்சில்
பாத்திரம் கழுவுவதை பார்ப்பதினாலோ...

மூச்சுக்கு மூச்சு பல நூறு முறை பேசும்
பேச்சுக்கு மனிதம் எனும் மனது மங்கிப்
போய்விட்டதோ....

வாழ்க மனிதம்
வாழிய உலகம்

கவியின் கதாநாயகன்
அமீன் பவாஸ்

# பொறுமை

சில விதிகள் எம்மை
சுற்றி சுற்றி அடித்திடும்...
வதை வதைத்து எடுத்திடும்...

உயிர் பிரியும் வலியை
உணர்த்திடும்...
மௌனத்தை பரிசாய் அழித்திடும்...
கண்ணீரை ஊற்றாய் ஊரச் செய்திடும்...

பல நேரங்களில் வாழனுமா?
என்ற வினா கூட எழுந்திடும்...
பொறுமையை ஆழமாய் விதைத்திடு...

இறைவனிடம் இரு கரம் ஏந்திடு...
இறை திருப்தியில் ஆணிவேராய் ஊன்றிடு...
அறுவடை இறை அருளினால் நிரம்பிடும்...

மின்ஹா பாரூக்

# நினைவுகள்

கனவினில் நிகழ்கின்ற சில நினைவுகள்
நிஜத்தினில் நடந்து விடக்கூடாதா என்று புத்தி
சொல்லும்.....

ஆனால் மனமோ கனவிலாவது சில
நினைவுகள் எஞ்சியிருக்கட்டுமே என்று
சொல்லும்.....

எப்படியோ சில கனவுகள் நிஜங்களாக
வேண்டும் என்று இதயம் ஏங்கத்தான்
செய்கிறது....!!

ஹனுபர் ஹுசைன்
(நிலவின் தோழி திலு)
மாளிகைக்காடு



# மங்கும் இலங்கை எனும் முத்து

வாக்களிக்கும் முன் வாக்களித்த வாக்கை நிறைவேற்றாமையால் வந்த வினை!! இன்னலின் உச்ச பிடியில் சிக்குண்டு கிடக்கிறது எம் பூமாதேவி!!

ஒவ்வொரு நாளும் பசியில் பல உயிர்கள், வறுமையால் வற்றா குளத்தில் குடும்பப்பெண்.. என தொடராய் உயிர்துறந்த அவலம் எம் செவிகளை அண்டுகின்றன..

சிதைவடைகின்றன சிப்பிக்குள் ஒளிந்திருக்கும் முத்துக்களின் கல்வி நிலை!! நித்தமும் நீங்கா இடர்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன!!

நின்றபடியே நாழிகைகள் கழிகின்றன எரிபொருள் நிலையங்களில்!! செழுமை பொங்கிய ஈழத்திருநாடு செயலிழந்து ஜடமாகி போகிறதே!!

விவசாயம் செழிக்கும் இந்துமாதேவியின் முத்து பளபளப்பை இழந்து கொண்டிருக்கிறதே!”

புத்தகங்களை சுமந்து சென்ற பிஞ்சுக்கரங்கள்இன்று போராட்டகளத்தில் அட்டையை சுமந்து நிற்கின்ற அவலம்!!

நோயாளிகளுக்கான சிகிச்சை இல்லை சிக்கலான சூழ்நிலை இழக்கத்தானே வேண்டும் நல்லுள்ளங்களை மருந்துத்தட்டுப்பாடு மாண்டுபோகின்றன உயிர்கள்

மக்களின் தேவைகளை நிறைவேற்றி ஆட்சியை நிலைநாட்டும் அரசன் அமையப்பெற்றால் விடியல் கிட்டுமாடா.. எப்போது கிடைக்கும் சுதந்திரம்? எங்கே நம் எதிர்காலம்?




ரிஸ்மா ரிப்கான்
களுத்துறை



ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகை வழங்கும்

## பாடசாலை மாணவர்களுக்கான ஊடக செயலமர்வு வேலைத்திட்டம்



தங்களது பாடசாலைகளில் இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 | 0757000791 skytamil.lk@gmail.com

# காதல் மானே காவல் நானே

காதல் மானே
காவல் நானே..
மோதல் கொள்ளா
மொத்தத் தேனே..
என்னுள் உறங்கும்
உன்னுயிர் தானே..
கண்ணுள் இறங்கும்
வெண்ணிலா நீதானே..

தூரம் சென்றாலும்
துரத்தி வருவேனே..
காதல் மானே
காவல் தருவேனே.
உன்னிதயம் வெறுத்தாலும்
பிரிய மறுப்பேனே..
மரணம் வென்றாலும்
உன்னிதயத்தில் இருப்பேனே..

தென் பொதிகை
மலை ஏறிடுவேனே..
தேன் எடுத்து
தலை இறக்கிடுவேனே..
உன்னை தேனால்
சிலை வடிப்பேனே
காதலோடு காவல்
தந்து க(ட்)டிப்பேனே..

ஒருமனம் கொண்டு கரம்
பிடிப்பேனே..
மறுகணம் உன்னை திருமணம்
முடிப்பேனே..
காத்திரு காத்திரு அடிப்
பெண்ணே..
பூத்திரு பூத்திரு
காதல் கண்ணே..


வாழ ஆசை
உன்னோடு தானே..
உன்னழகில் நானே
கனிந்து போனே..
நாவில் தித்திக்கும்
நாவல் தேனே
காதல் மானே
காவல் நானே..



தஞ்சை விஜய்,
இந்தியா



# என் தாய்மண்




ஹாஸ்மியா தாஹா
கலாவெவ

யான் பிறந்தது கலாவெவ என்ற நாமம் சூடிய வரலாற்று மண்ணில். இயற்கை மாதாவின் செல்லக் குழந்தையாம் என் கிராமியத் தாய் மண்ணின் பெருமையை வரிகளால் வர்ணிக்க சொற்களுக்கே பஞ்சம் என்று தான் சொல்ல வேண்டும்.

நீலப் பட்டாடையை போர்வையாய் போர்த்திய கலாவாவி எனும் அம்மையாருக்கும், அரச மகுடத்தை தலையில் சூடிய தாதுசேனன் என்ற அப்பனாருக்கும் கருவாகிய குழந்தையே என் தாய் மண்ணாகிய கலாவெவ கிராமம்.

கிராமத்தின் மத்தியிலே நெடிது வளைந்து ஓடிக் கொண்டிருக்கும், மீன்களின் கருவறையாய் சலசலத்தோடும் நீர்த் துறையான யோத எல மற்றும் சிற்சிறு ஓடைகளும் மாரி காலத்திற்குக் கொடி தூக்கும் வாண் கதவுகள் என்பனவுமே என் தாய் மண்ணை ஈர முத்தங்களால் அணைத்துக் கொள்கின்றன.

வள்ளன்மையின் உருவமே என்றாகிய என் கிராமமானது, பச்சைப் பசேலான வயல் வெளிகளை தன் காதல் இல்லமாய் செதுக்கிய மாபெரும் சிற்பி

அங்கே காதல் ஜோடிகளான மந்தைகளும், வெண் கொக்குகளுமே அவ்வில்லத்தின் இலக்கியங்கள் வெண் முகத்தின் பூரிப்பைக் காட்டும் காலைப் பனித்துளியும், வன் முகத்தின் சீற்றத்தைக் காட்டும் உச்சி வெயிலுமே அவ்வில்லத்தின் இலக்கணங்கள்.

கிராமத்தின் எல்லையை அழகூட்ட நெடும் பாதையும் ,அதன் இரு மருங்கிலும் ஒய்யாரமாய் கிளை பரப்பி நிழல் கொடுக்கும் மரங்களும், மரங்களின் இருப்புக்கு புகழ்பாடும் வாவி நீரும், பசுமையான புல்வெளியும், சற்று அன்னார்ந்து பார்க்கையில் கம்பீரமாய் வீற்றிருக்கும் மலைத் தொடரும்...

கொடுப்பனவுகள் ஏதுமில்லாத குயிலின் இன்னிசை கீதமும், விழிகளால் தன்னைக் காதல் செய்யும் மானிடர்கள் மீது தன் வெட்கத்தைப் பொலியும் மயிலின் அழகிய நடனமும், வாசனையால் விழிகளை ஈர்க்கும் மலர்களின் மீது மது அருந்தி மயக்கமுறும் வர்ணனைகள் நிறைந்த பட்டாம்பூச்சிகளும் என் கிராமத்தில் முத்தமிழாய் அரங்கேறுபவன.

இன நல்லிணக்க ஊடகங்களான பள்ளிவாயல்களும், விகாரையுமே எம் மானிட நெஞ்சங்களுக்கான பாதுகாப்பு வேலிகள்.

இவ் அனைத்து வளங்களாலும் தலை நிமிர்ந்து வீர நடை போடுவதே என் பிறப்பிற்கு இடமளித்த என் தாய் மண். இப்படிப்பட்ட இயற்கை அற்புதங்களால் நிறைந்த வரலாற்றுப் பூமியில் பிறந்த பாவை நான்.





# அவனில் அவள்

ஒரு ஆணின் விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டாள், என்றால்- அவன் எவ்வாறோ அவ்வாறே தன் துணையும் என்று புரிந்தால் பாதி பிரச்சினை குறையும்..... ஆனால்- அதிஷ்டம் எவ்வாறு வேண்டுமானாலும் மாறலாம்... தவறாக வந்த துணை சரியாகாதா என்ன?

பெண் என்பவள், பாரிய மலையின் அடிவாரத்தில் இருந்து எடுக்கப்படும் ரத்தினம், மாணிக்கம்.... போன்றவள்- பகிரங்கமாக, அதன் உரிமையாளரின் அனுமதியுடன் எடுத்தால் ஆபத்தில்லை... மாறாக, கள்ளத்தனமாக சுரண்டி எடுக்க நினைத்தால்... இருக்கும் இடமறியாமல் அழிந்திடுவாய்...

பெண் படித்து பட்டம் பெற்ற பிறகும், தலைமைத்துவம் ஆண்வசமே- என்னதான் பட்டம் பெற்ற வர்க்கத்தின் ஒரு மேன்மை நிலையை அவள் எட்டியிருந்தாலும், அவள் பிறப்பிலிருந்து இறப்புவரை இன்னொரு ஆணின் தயவிலேயே வாழ்கிறாள்....

பிறப்பு தந்தையின் மூலம், வளர்ப்பு குடும்பத்தின் மூலம், பதின்மம் ஒரு ஆண் நட்பு மூலம், திருமணத்தின் பின் கணவன் மூலம், முதுமையில் தான் பெற்ற குழந்தை மூலம்,

இதுவே இவளது விதி..... இதுவே இவளது தியாகம்....... இதுவே இவளது வெற்றி...... இதுவே இவளது ஆசை....... இதுவே இவளது கனவு.....

காரணம் தேடினாலும் கிடைக்காத பதில் பெண்மையே... நீ ஊண் கொடுத்தால் அவள் ஊட்டி வளர்ப்பாள், நீ ஆத்திரமடைந்தாலும் அவள் அன்பாலணைப்பாள், நீ கோபம் கொண்டாலும் அவள் கோர்த்து புரியவைப்பாள், நீ தவறாக நடந்தாலும் முதல் பார்வை உன்னை உடன்பிறப்பாகவே பார்க்கிறாள்,

இவ்வாறே நீ கொடுப்பதை பலமடங்கு திருப்பியும் கொடுப்பாள்.... "அது அன்பாலானாலும் சரி, வம்பாலானாலும் சரி" இதனாலேயே கூறத்தோன்றுகிறது, இறைவனின் விசித்திரமான, புனிதமான படைப்பு பெண் என்பதே....

கருவை சுமப்பதிலிருந்து சமாதியாகும் வரை அவளின் உதிரம் சிந்தா நாள் உண்டோ? இதனை நீ சிந்தித்ததுண்டோ? பிறக்கும் போது உதிரத்துடனே பிறக்கிறாள், பதின்மத்தில் மாதத்தில் ஏழு நாட்களும் உதிரத்துடனும் அதன் இனம் புரியாத வலிகளுடனும் கழிக்கிறாள், திருமண வாழ்வில் தன் கணவனின் சந்தோஷத்திற்காக வலிகளுடனான சுகத்தை அனுபவிக்கிறாள்,
பிரசவத்தின் போது வலிகளுடானான
சந்தோஷத்தை உணர்கிறாள்,

இவ்வாறு வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பாரிய வலிகளுடன் கடக்கும் பெண்மையா உமக்கு பொம்மையாக தெரிகிறது?

ஓ மானிடா! உணர்ந்து கொள்ளடா, உன்னை ஈன்றவளும் ஒரு பெண் என்பதை, உன்னோடு ஒன்றித்து பிறந்தவளும் ஒரு பெண் என்பதை, உன்னோடு வாழப் (பவளும்) போவதும் ஒரு பெண் என்பதை,

உன்னால் மனவலிகளை தாங்க முடியாது என்றதாலயே உன்னை பெற்ற மடியை தேடுகின்றாய்... காரணம், உமக்கானது உடல் வலிமை எமக்கானது மனவலிமை.... (இது கூடவா உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.... )

அந்த வலிமை நிறைந்த உடல் என்பதாலா "அவளை தூற்றும்" போதும் தன் மனம் உணர்த்தவில்லையோ தன்னை பெற்றவளும் பெண் என்பதை, அந்த வலிமை நிறைந்த உடல் என்பதாலா "அவளை புறக்கணிக்கும்" போது தன் மனம் உணர்த்தவில்லையோ தன்னை பெற்றவளும் பெண் என்பதை,

அந்த வலிமை நிறைந்த உடல் என்பதாலா "அவளை தவறாகப் பார்க்கும்" போது தன் மனம் உணர்த்தவில்லையோ தன்னை பெற்றவளும் பெண் என்பதை, அந்த வலிமை நிறைந்த உடல் என்பதாலா "அவளை மிரட்டும்" போது தன் மனம் உணர்த்தவில்லையோ தன்னை பெற்றவளும் பெண் என்பதை,

அந்த வலிமை நிறைந்த உடல் என்பதாலா "அவளை பலவந்தமாக கற்பழிக்கும்" போது தன் மனம் உணர்த்தவில்லையோ தன்னை பெற்றவளும் பெண் என்பதை,

அவள் துன்பப்படும் போதும் உன்னை, அவள் அண்ணா விட்டுவிடு...தாத்தா விட்டு விடு....மாமா விட்டு விடு...- என உறவுடன் அன்பாகவும் கூறுகிறாளே அப்போதுமா தோனவில்லை உன் உடன் பிறப்பு, உன்னை பெற்றதும், உன்னோடு வாழ்வது...என அனைத்துமே பெண் என்பது இவ்வாறு சில ஆண்களாளேயே பெண்மையின் மென்மை ஆக்ரோஷமாக மாறுகிறது.

இவ்வாறு சில ஆண்களாளேயே பெண்களை பெற்றோர்கள் வெளிசெல்ல தடுக்கின்றனர். இவ்வாறு சில ஆண்களே பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக அமைகின்றனர்.

சாதி, மதம், அழகு, பணம், மூடநம்பிக்கை போன்ற பிரிவினை பார்த்து திறமையான பெண்களை தமது திறமைகளை முடக்கச்செய்து அடக்கி ஒடுக்க நினைக்கும் சிலரும் இருக்கின்றனர். அதேபோல், அதனனைத்தையும் உடைத்தெறிந்து எனது மகள் முன்னேற வேண்டும், எனது சகோதரி முன்னேற வேண்டும், எனது மனைவி முன்னேற வேண்டும், எனது தாய் முன்னேற வேண்டும் -என உயர்த்த துடிக்கும் கரங்களும் உண்டு...

அவ்வாறான கரங்கள் மேன்மேலும் கண்ணியமடைந்து சாதனை புரிய வேண்டுகிறேன் படைத்தவனிடம்....

அவனில் அவள் பற்றி தொடரும்...



பாத்திமா பின்த் சம்சுதீன்
தனிமையின் இளவரசியவள்

## Smile Dear Snaily என்ற சிறுவர் புத்தகம் 2022.09.19ம் திகதி BMICHயில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் காட்சியின் போது வெளியிடப்பட்டது.

இது சகோதரி ரும்மான் அவர்கள் எழுதிய இரண்டாவது புத்தகமாகும். இப் புத்தகத்தின் சிறப்பம்சமாக அமைவது அதன் விளக்கப்படம் , இதனை மாவனல்லை ஸாஹிரா கல்லூரியைச் சேர்ந்த 12 வயதுடைய மரியம் ஆசாத் அலி எனும் மாணவியே இந் நூலின். வண்ண ஓவியங்களை வரைந்துள்ளார்.





மேலும், குழந்தை உளவியல் அம்சங்களைக் கருத்திற்கொண்டு, சிறு வயதிலேயே, அவர்களுக்கு விஞ்ஞானக்காதலை ஏற்படுத்தும் விதமாக இது அமையப்பெற்றுள்ளது. தடித்த ஆர்ட் போர்டாலான பக்கங்கள் மேலதிக சிறப்பாகும். நூலை, சமுத்ர புத்தக வெளியீட்டகம் வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது

இந்த நிகழ்வில் பிரபலங்கள், பெற்றோர்கள்,சிறுவர்கள் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.



# பேனா



நுஹா சுல்பிகர்
அக்குரனை

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒரேயொரு விடயத்தின் மீதாவது காதல் என்பது இருக்கும். சிலருக்கு ஓவியத்தின் மீது.. சிலருக்கு மழையின் மீது.. சிலருக்கு ஐஸ்கிரீமின் மீது.. சிலருக்கு சிலரின் மீது..

அவள் ஜமீலா. முப்பதுகளின் இறுதியில் இருக்கும் அவள் மூன்று குழந்தைகளுக்குத் தாயானவள். கணவர் கம்பு ஆலையில் வேலை, மகள்மார் மூன்று பேரும் அரசாங்கப் பாடசாலையில் கல்வி என்று குடும்ப வாழ்வில் எந்தக் குறையுமில்லை அவளுக்கு.

அவளது காதலானது..பேனை!

“போர்க்களங்களில் தன்னை அர்ப்பணித்து வரலாறு படைத்த வாள்களைப் போலவே எழுத்துக்களுக்காய்த் தன்னையிழந்து சரித்திரம் படைத்த பேனைகளும் அதிகம்.. கரண்டி பிடித்த கைகள் உணவின் சுவையை சோதிப்பது போலவே பேனா கொண்ட கைகள் இலக்கிய இன்பத்தில் திளைத்து சுவை கண்டதும் அதிகம்.. வாய் வார்த்தைகளினால் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளைவிட பேனா முனை மையாய் ஒழுக்கும் உணர்ச்சிகளே அதிகம்..“

என்று பேனாவை எண்ணி மெச்சிக்கொண்டு அதனைத் தன் அடையாளமாகவே ஆக்கிக்கொள்ளக் கனவு கண்டவள். ஜமீலாவுக்கு ஒரு பழக்கம் உண்டு. ஏதாவது ஒன்றைப் பார்த்தால் அதனையே நினைத்துக் கற்பனை செய்து சுவாரசியமான துணுக்குகளும் மனதுக்கு விருந்தாகும் நகைச்சுவைகளையும் உருவாக்குவாள். அத்தோடு நிறுத்தாமல் அதை டயரிகளில் எழுதியும் வைப்பாள்.

அதுதான் கிட்டத்தட்ட பத்துப் பதினோராவது அவளது பேனாவின் பயணம் தொடங்கிய கதை, அவளுக்குத் தெரியாமலே.. மனதில் தோன்றுவதையெல்லாம் டயரியில் கொட்டுவாள். டயரியைப் போல பொறுமையாக நாம் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க வேறு எதுவும் இல்லையென்றால் அவற்றை இறக்கிவைக்க பேனாவைப் போல ஒரு கருவியில்லை பேனா மையைப் போன்றதொரு மொழியுமில்லை.

முதலில் தனக்கு மட்டுமேயென்று அவற்றை வைத்து வாசித்துக் கொண்டிருந்தவள் எதற்கும் மற்றவர்கள் கருத்தை அறியலாமென்று முயன்றாள். ஆனால் அந்த முடிவு அவள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. ஆச்சர்யமில்லை!

நட்பு வட்டாரத்துக்கு அவள் தன் ஆக்கங்களை அறிமுகப்படுத்தி வைக்க, அதற்குக் கிடைத்த வரவேற்போ சிரிப்பலைகள்தான். நகைச்சுவைகளை வாசித்ததால் அல்ல, ஏளனத்துக்கு அவள் உள்ளாக்கப்பட்டதால்..

அவ்வளவுதான்! அதன் பிறகு அவளறிந்த துணுக்குகளெல்லாம் அவள் டயரிகளறிந்த ரகசியம் மாத்திரமே.. ஆனாலும் அவளது கிறுக்கல்கள் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தன. இருந்தாலும் ஒரு தயக்கம். மற்றவர்களின் விமர்சனங்களும் மறையான கருத்துக்களும் அவளுட் புகுந்து தன் வேலையைக்

காட்டின போலும்.

ஏதோ ஒரு தயக்கம் வெட்கம். தான் எழுதுவதைப் பார்த்து ரசிப்பார்கள் என்று பார்த்தால் நகைக்கின்றார்களேயென்ற சங்கடம். இந்நிலையில்தான் அவளுக்கோர் எண்ணம் உதித்தது. பேசாமல்.. தனக்கென ஓர் அடையாளத்தை உண்டாக்கி அதற்குப் பின்னால் மறைந்துகொண்டால்..!? இருக்கவே இருக்கின்றது அவள் காதலான பேனை!
வாராந்த சஞ்சிகைகளின் வாசகர்களுக்கு முன்பு "ஜமீயின் பேனா" என்றோர் அடையாளத்தை செதுக்கிக் கொண்டவள் ஆரம்பத்தில் இல்லாவிட்டாலும் போகப் போக வரவேற்புப் பெற ஆரம்பித்தாள். பலரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த அந்தப் பேனாவின் பின்னால் ஒளிந்திருந்து ஜமீலா என்பது ஜமீலாவைத் தவிர வேறு யாருக்கும் தெரியவில்லை.

மனைவியாகி, ஒரு தாயாகி, வேலைப்பளுவுக்கு இடையில் திணறினாலும்கூட அவளது பேனா செயற்பட்டுக் கொண்டுதான் இருந்தது. அவ்வப்போது ஸ்டோர் ரூமில் பெட்டி பெட்டியாக இரகசியமாகத் தான் அடுக்கி வைத்திருக்கும் தன்னுடைய பழைய டயரிகளை எடுத்துப் புரட்டிப் பார்த்துக் கொள்வாள். தான் சிறுபிள்ளையிலிருந்து அன்றைய நாள்வரை எழுதி வைத்திருக்கும் விடயங்களை வாசித்துப் பார்த்துத் தனக்குத்தானே சிரித்துக் கொள்வாள்.

ஒரு சுவாரசியமான விடயம் என்னவெனில் அவளது வீட்டுக்குள்ளேயே அவளுக்கு மூன்று தீவிர வாசகிகள் உண்டு. எழுத்தாளினி தங்கள் தங்கத் தாய்தான் என்று அறியாமலே சஞ்சிகைகள் வாங்கும் நாட்களில் பாய்ந்து சென்று வாசிப்பார்கள்.

"உம்மா.. இங்க பாருங்களே இவ எழுதியிருக்குறத.. ஹஹா.. எப்டியெல்லாம் யோசிச்சிருக்குறா!" என்று ஜமீலாவிடமே வந்து அவளைப் பாராட்டிச் செல்வார்கள். இவளுக்கோ உள்ளுக்குள் பேருவகை பொங்கும். எனினும் அப்போதுதான் முதல்தடவை அதனைக் கேட்பதுபோல மகள்மாருடன் சேர்ந்து சிரித்து வைப்பாள்.

"பேசாமல் அது நான்தானென்று சொல்லிவிடலாமா? அடடே.. வெக்க வெக்கமா வருதே.."

இதுதான் வாராவாரம் அவளது பாடு.

ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட நாளில் அவள் சந்தைக்குச் சென்று வருவதுண்டு. பொருட்கள் வாங்க வேண்டிய அவசியம் இல்லாவிடினும் சஞ்சிகைக்குத் தான் அனுப்பி வைக்க வேண்டியவற்றை எழுதிக் கடிதவுறை சுமந்து தபாலகம் செல்வது வழக்கம்.

அன்றும் அப்படித்தான் மகள்மார் மூவரும் படுக்கைக்குச் சென்றுவிட்ட நேரத்தில் ஸ்டோர் ரூமில் தான் எப்போதும் அமர்ந்து எழுதுவதற்கென்று ஓரமாகப் போட்டு வைத்திருந்த கதிரை மேசையில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தாள் ஜமீலா. கணவர் வீட்டிற்கு வரத் தாமதாகுமென்பதால் அதுவரைக்கும் எழுதலாமென்று அமர்ந்துவிட்டாள் போலும்.

"உம்மா.. இங்க என்ன செய்றிங்க?"

கதவருகில் கேட்ட தன் மகளின் சத்தத்தில் திடுக்கிட்ட ஜமீலா தன் கையில் பிடித்திருந்த பேனா அவளைவிட்டு சில அடிகள் சென்று விழ, தன் மகளைப் பார்த்து முட்டை முட்டையாய் முழித்தவள் இளித்து மழுப்ப முனைய, மகளோ ஏற்கனவே அருகே வந்து நின்று கொண்டாள்.

"ஹேய்.. நீ தூங்க போன தானே? என்ன இது மருஹா..?"

எதிர்பாராத விதமாக மகளிடம் மாட்டிக் கொண்டதில் தடுமாறியவரின் கேள்விக்குப் பதிலளிக்காதவளோ,

"என்னம்மா எழுதுறிங்க? ஒளிஞ்சிகொண்டு?" என்றாள் புருவத்தைச் சுருக்கிக்கொண்டு..

"ஒன்டுமில்லயே"

கையிலிருந்த தாள்களை ஜமீலா தனக்குப் பின்னால் மறைக்க, அதைப் பறித்தெடுத்தாள் மற்றவள்.

அந்தத் தாளின் கீழே வலது மூலையில் இருந்தது ஒரு ஒப்பம்,

"ஜமீயின் பேனா" என்று.

"அச்சோ.. இவள் கண்டுட்டாளே.. போய் மத்தவங்கட்ட சொல்லிடுவாளோ!" என்று வெட்கம் எட்டிப் பார்க்க, நாக்கைக் கடித்துக்கொண்டு அசையாது நின்றாள் ஜமீலா. அவள் மகளோ அவளது நினைப்பைப் பொய்யாக்காமல் அந்தத் தாளை எடுத்துக்கொண்டு குறையாத ஆனந்த அதிர்ச்சியுடன் அங்கிருந்து ஓடினாள், தன் சகோதரிகளைத் தேடி..

(அடுக்களைக்குள் ஒளிந்திருக்கும் சில இல்லத்தரசிகளின் ஓசையில்லா ஆசைகள்)

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022



# அமேசான் காடுகளில் பறக்கும் ஆறுகள்

## தொடர்ச்சி...



பாத்திமா நிப்லா
கடுகண்ணாவை,கண்டி.

சுமார் 1100 கிளை நதிகளைக் கொண்டது இந்த அமேசான் காடு. அவற்றில் 7 நதிகள் 1500 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. உலகின் நைல் நதிக்கு அடுத்த படியாக மிகப்பெரிய நதியாக விளங்குவது இந்த அமேசான் காடுகளில் உள்ள நதிகள் தான். உலகின் ஆபத்தான மீன் இனமாக கருதப்படும் பிராண வகை மீன்கள் இந்த நதிகளிலும் அது கலக்கும் அத்திலாந்திக் கடலோர பகுதிகளிலும் தான் அதிகமாக வாழ்கின்றன.

அனகொண்டா போன்ற பயங்கரமான பாம்புகளின் பிறப்பிடமும் இதுதான். இதுதவிர இங்கு வாழும் சில பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் வெளியுலகத்தை பார்க்காமலேயே இன்னமும் இயற்கையுடனே இணைந்து வாழ்கின்றனர். காட்டில் கொடிய நோய்கள் பரவினாலும் அதனை எதிர் கொள்ளும் திறன் அமைப்பை பெற்று வாழ்கிறார்கள் இந்த மக்கள்.

உலகில் உள்ள காடுகளிலேயே மிகப்பெரியதும் பயங்கரமானதும் இரண்டிலுமே இதுதான் முதல் இடம் பெறுகிறது. 8 நாடுகளை எல்லை பகுதிகளாக கொண்டுள்ளது இந்த காடு. மனித இனம் சுவாசிக்கும் ஆக்சிஜனின் மொத்த அளவில் 20% இங்கு தான் உற்பத்தியாகிறது. இவ்வளவு அதிசயம் கொண்ட அமேசான் காடுகளுக்கும் மற்றும் அதனை சார்ந்துள்ள நதிகளுக்கும் மற்றொரு சிறப்பம்சமும் இருக்கிறது.

அதுதான் பறக்கும் ஆறு என்று அழைக்கப்படும் ஒட்டுமொத்த அமேசான் பிரதேசத்தையும் மேலிருந்து சூழ்ந்திருக்கும் நீராவியால் ஆன ஆறு. அமேசான் ஆற்றின் நீரை உறிஞ்சி மரங்கள் வெளியேற்றும் நீராவியால் இவை உருவாகுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தென் அமேரிக்கா கண்டத்தில் உள்ள பல நாடுகளில் உருவாகும் பனி பொழிவிற்கும் இவைகளே ஆதாரமாக விளங்குகின்றன. இந்த பறக்கும் ஆற்றின் சிறப்பு அம்சம் தரையில் ஓடும் ஆற்றின் நீரோட்டத்தை போலவே இதன் நீராவி ஓட்டமும் அமைந்திருப்பது தான். மனித இனம் காணாத பல அதிசயங்கள்.



# இயற்கையும் மனித வாழ்வும்



எம். எஸ். எப்(க).ஹஸ்னா

இயற்கையும் மனித வாழ்வும் எனும் போது இயற்கையுடன் ஒட்டி பிறந்தவனே ஆவான். ஒவ்வொரு மனிதனும் உலகில் பிறக்கும் போதே உலகுடனும் இயற்கையுடன் ஒட்டி பிறந்தவனே மனிதன் ஆவான்.

இது இவ்வாறு இருக்க உலகுடன் இணைந்த இயற்கை பற்றி நாம் யோசித்தால் இயற்கை என்பது இறைவனால் படைக்கபட்ட அனைத்துமே இயற்கை எனலாம். இவ்வியற்கைக்கு உதாரணமாக மரங்கள், செடிகள், கொடிகள், மழைகள், வானம், பூமி என அனைத்தையும் கூறமுடியும்.

இன்றைய தொழிநுட்ப வளர்ச்சியடைந்த கால கட்டத்தில் பல்வேறு உபகாரணங்கள், வடிவங்கள் நாளுக்கு நாள் உருவாக்கப்பட்டு வருகிறது. அவை மனிதனால் உருவாக்கப்பட்டதால் அவை செயற்கை என அழைக்கப்படும். இவ்வாறான செயற்கையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதே இயற்கை ஆகும். இவ்வியற்கையிலே செயற்கை பொருட்களும் தங்கி இருக்கிறது என்பது மிகையாகாது. அத்துடன் மனிதனையும் மனித வாழ்வையும் மையமாக கொண்டதே இயற்கையாக காணப்படுகிறது.

மேலும் ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் இயற்கையோடு அன்னியோன்னியமாக வாழப்பழகி கொண்டதோடு அவற்றின் மூலமே அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி கொண்டான். உதாரணமாக ஆதி மனிதன் தனது பசி தேவைக்காக தனது வாழ்விடத்தை நந்திக்களுக்கு அருகாமையில் வைத்து கொண்டதோடு மட்டுமல்லாது வேட்டையடியும் மீன்களை பிடித்து அவற்றை சமைத்து உண்ணவும் பழகிக்கொண்டான்.

மேலும் ஆதிகால மனிதர்கள் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தமைக்கு உதாரணமாக மழை காலங்களில் குகைகளை தேர்ந்தெடுத்து அவற்றில் தங்கியதுடன் வெயில் காலங்களில் வெட்டவெளிகளில் நடமாடி திரிந்து வேட்டையாடல் போன்றவற்றில் ஈடுபட்டமையினை குறிப்பிடலாம். இவ்வாறு ஆதி காலம் தொட்டு இன்று வரை மனிதன் தனக்கு ஏற்றால் போல் இயற்கையை மாற்றி வாழபழகி விட்டான்.

மேலும் தற்காலத்தில் மனிதனது சுய நலனுக்காகவும் அழகிற்காகவும் இயற்கையை பயன்படுத்தி அவற்றை மாசு படுத்துக்கிறான். அதாவது மனிதன் இயற்கையில் காற்று, நீர், மண் வானம்... என அனைத்தையும் மாசு படுத்துகிறான்.

அதாவது நீரை தொழிற்சாலை கழிவுகள் மூலமும், குப்பைகளை கொட்டுதல், மிருகங்களை கழுவுதல் .. போன்றவற்றின் மூலம் மாசு படுத்துகிறான். மேலும் நிலத்தை கழிவுகள் கொட்டுதல், இரசாயன உரம், கிருமிநாசினி பயன்பாடு போன்ற வேறு காரணிகளால் மாசு படுத்துகிறான். மேலும் வளியை வாகன புகைகள் , தீயிட்டு கொழுத்துவதால் ஏற்படும் புகை, தொழிற்சாலை

புகை... என பல்வேறு பட்ட காரணிகளால் மாசு படுத்துகிறான். மேலும் காடழிப்பு, மரம் வெட்டல், வீடுகளை கட்ட சதுப்பு நிலம், வயல்களை இல்லாது செய்து இயற்கையை மாசு படுத்துகிறான். இவ்வாறு மனிதன் தனது அனைத்து தேவைக்காகவும் இயற்கையை அழிக்க முற்படுகிறான்.

இது இவ்வாறு இருக்க இயற்கையே மனிதனுக்கு அனைத்து நலன்களையும் பெற்று கொடுக்கிறது. அனைத்தையும் தூய்மையாக கொடுக்கும் இயற்கையை மனிதன் அழித்து தனது உடல் நலத்திற்கு கெடுதி தரக்கூடிய நீரிழிவு, சுவாச பிரச்சினை என பல்வேறு நோய்களையும் தேடிக்கொள்கிறான். இவ்வாறான மனிதனுக்கு ஏற்படும் தீமைகளை தடுக்க இயற்கையை பாதுகாப்பது அத்தியவசியம் ஆகும். இயற்கையை தாய் போல் மதித்து அவற்றை பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கொடுப்பது ஒவ்வாரு மனிதனினதும் தலையாய கடமை என கூறினாலும் மிகையகாது.



# அன்பின் உருவமானவள்



நிரோசனி

கதிரவன் சோம்பல் முறித்து எழும்பி தனது செங்கதிர்களை பரப்பி இவ்வுலகை பிரகாசமடையச் செய்யும் இதமான காலைப் பொழுது. நீலாம்பிகை சமையல் வேலைகளில் மும்முரமாகக் காணப்பட்டாள். சட்டென ஏதோ நினைவு வரவே கைகளை கட்டியிருந்த புடவையில் துடைத்தவாறு வராந்தாவிற்கு வந்தாள். கடிகாரம் மணி 7.45 எனக் காட்டியது.

"என்ன இந்தப் பொண்ணு இன்னும் எழும்பலியே, உடம்புக்கு எதும் பண்ணுதோ என்னமோ" என யோசனை செய்தவாரே சத்யாவின் அறையை நோக்கி நடந்தாள். அறைக்கதவு தட்டும் சத்தம் கேட்கவே மெல்ல தூக்கம் கலைந்து எழுந்து சென்று கதவைத் திறந்தாள் சத்யா. மெலிந்த உடலுடனும், சிவந்த விழிகளுடனும், சோர்வான முகத்துடனும் தன் தாயின் முன் நின்றவளைப் பார்க்க நீலாம்பிகைக்கு மனம் கனத்துப் போனது.

"என்னம்மா ஹாஸ்பிடல்ல ரொம்ப அதிகமான வேளையா அசந்து தூங்கிட்டியே."எனக் கனிவுடன் வினவிய தாயாரைப் பார்த்து" ஆமாம்மா நேத்து கொஞ்சம் அதிகமா வேலை. ரொம்ப கலைப்பா இருக்கவும் தூங்கிட்டேன்" என்றாள் கொஞ்சலான குரலில்.

"சரிம்மா ரொம்ப நேரம் போச்சு, சீக்கிரம் குளிச்சுட்டு வா நா காஃபி போட்டு வக்கிறேன்." என்ற நீலாம்பிகைக்கு தன் சிரசை மாறி மாறி ஆட்டிவிட்டு குளியலறைப் பக்கம் சென்றாள் சத்யா. "பாவம் என் பொண்ணு, இந்த சின்ன வயசுல எவ்ளோ கஷ்டப்படறா. குடும்ப பொறுப்பை அவளே ஏத்துகிட்டு எல்லாத்தையும் குறையேயில்லாம பாத்துக்குறா, அவளோட அப்பா இருந்தா இவ்ளொ கஷ்டம் வந்து இருக்காது. பாவி மனுஷன் ரொம்ப சீக்கிரமாவே போய் சேந்துட்டார்." என மனதில் எண்ணமிட்டவாரே சமயலை முடித்தாள்.

அவசரமாக சமையலறைக்குள் நுழைந்த சத்யா தேநீரை அருந்தி விட்டு மதிய உணவையும் எடுத்துக் கொண்டவள் நீலாம்பிகையிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டாள். சத்யா சென்று மறையும் வரை பாதையை பார்த்துக் கொண்டு நின்றாள் நீலாம்பிகை நினைவுகளோடு



# இளம் வயதில் கிழக்கு மாகாண பணிப்பாளராக பதவியேற்ற சரண்யா சுதர்சன்

## பற்றிய சிறு பார்வை...



பைஷல் இஸ்மாயில்

திருகோணமலை மாவட்ட - தம்பலகமம் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை அரியநாயகம் மற்றும் பத்மலோஜினி அரியநாயகம் ஆகியோருக்கு 02 வது பிள்ளையாகப் பிறந்த அரியநாயகம் சரண்யா, திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை கற்ற இவர், உயர்தரப் பரீட்சையில் மாவட்டத்தில் 16வது நிலையைப் பெற்ற மாணவியாகத் தெரிவாகி இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவானார்.

தனது 4 வருட பல்கலைக்கழக காலப்பகுதியில் பல சவால்களை எதிர்கொண்டு வியாபார நிருவாகமாணிப் பட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் சிறப்பு பட்டங்களைப் பெற்று முதல்நிலை மாணவியாகத் திகழ்ந்த இவருக்கு, சிறந்த மாணவருக்கான விருது மற்றும் அனைத்து வருடங்களின் மிகச் சிறந்த மாணவர் விருதினையும் தனதாக்கிக் கொண்ட பெருமையும் இவருக்குண்டு.

அவரது கல்விப் பருவத்தில் கற்றல் செயற்பாடுகளில் மட்டும் நின்றுவிடாமல் விளையாட்டு நிகழ்ச்சிகள், கலை கலாசார நிகழ்ச்சிகள், தொழிநுட்ப அறிவுப் போட்டிகள் மற்றும் மேடை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்ற ஒரு முன்னணி மாணவியாகவும் திகழ்ந்துள்ளார். இலங்கை நிருவாக சேவை அல்லது கணக்காளர் சேவையில் தனது மகள் உள்நுழைய வேண்டுமென, தனது தந்தையின் கனவாக இருந்தது. அவரின் கனவே தனது கனவாக நினைத்துக்கொண்டு அந்த இலக்கை முன்வைத்து அவரது இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்தார். அந்த இலக்கையும் அடைந்தார்.

இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் பதவியில் பயிலுநராக இருந்தபோது, பட்டப் படிப்பு பொது நிருவாகப் பரீட்சையில் மிகச் சிறந்த தேர்ச்சி சித்தி பெற்றதனால், அவருக்கு தங்க விருது கிடைக்கப்பெற்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

அதற்கமைவாக, அரியநாயகம் சரண்யா 2014 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்ட இவர், அதேயாண்டில் முகாமைத்துவ பயிலுனராக இலங்கை வங்கியில் கடமையாற்றி வந்தார். 2015 ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் பயிலுனராக இணைக்கப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டு, 7 வருடங்கள் கடமையாற்றி வந்த இந்நிலைமையில், 2022 ஆம் ஆண்டு சிறிது காலப்பகுதியில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பதில் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

அவர் கடமையாற்றிய காலப்பகுதியில் திணைக்களத்தில் நிலவுகின்ற குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ததுடன், அதன் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்து பல்வேறுபட்ட அபிவிருத்தி சார்ந்த விடயங்களுக்கு பாரிய பங்களிப்பைச் செய்துவந்தார். இந்நிலைமையிலேயே, கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருகோணமலை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொறியியலாளர் இராஜயோகம் சுதர்ஸன் என்பவரை 2014 ஆம் ஆண்டு திருமணம் செய்து 1 ஆண் மற்றும் 1 பெண் பிள்ளைக்கு தாயாகவும், சிறந்த குடும்பத் தலைவியாகவும் இருந்து வருகிறார்.



# தொலைபேசி பாவனையாலே



கே.பிரியங்கா
கண்டி

வலைத்தளம் என் வாழ்வில் தன் விளையாட்டை காட்டியது எந்த ஒரு பிள்ளையும் மண்ணில் பிறக்கையிலே நல்ல பிள்ளை தான் அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற பழமொழியை மிஞ்சியது எனது கையடக்க தொலைபேசி பாவனை.

ஒருவன் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் கையடக்க தொலைபேசி பாவனையாலே என்று மாறி விட்டது. எங்கிருந்தோ முகவரி தெரியாத ஒரு அழைப்பு முகநூலின் ஊடாக யார் எவர் ?? என்று தெரிய வில்லை. ஏன் பழக்கம் தொடர்ந்தது என்றும் புரிய வில்லை பின் விளைவு என்ன என்பதையும் அறிய வில்லை ! எப்படியோ மழை துளி போல சிறிது சிறிதாக ஆரம்பித்தது . ஹாயி ஹீலோ என்று ஆரம்பித்தது.

தினம் தினம் good morning & good night இல் வளர ஆரம்பித்த உறவு, நட்போ காதலோ எதுவாக இருந்தாலும் இருந்து விட்டு போகட்டும் கடைசி வரை இருப்போம் உனக்கென நான் எனக்கென நீ என்று உறவை முடிச்சி போட்டது. பெண்ணாக இதை நான் சொல்ல ஆரம்பிப்பதை விட பெண்களுக்கான ஒரு விளிப்பு உணர்வாக இருந்து விட்டு போகட்டும் என்பதற்காகவே என் எழுதுகோளின் பயணம் தொடரட்டும். தொடர்ந்து சென்ற எங்களுடைய நட்பு வட்டாரம் நீடிக்க வேண்டும் என்ற மனநிலை இருவரின் உள்ளத்திலும் கதிர் ஒளி போல உதித்தது. நேரில் சந்தித்தது இல்லை என்றாலும் சந்திக்க போகிறோம் என்ற சிந்தையினால் அவனது பின்னணியை சிறிது சிறிதாக அறியும் ஆவல் இருந்தது. தோற்றம் கண்களுக்கு தவிர காதலுக்கு கிடையாது.

குலத்தில் குழப்பம் இல்லை கல்வியில் தகமை உண்டு. காலம் கடக்க நிரந்தர வேலை வாழ்க்கையை வாழ்வதுக்கு சொத்து பத்திரம். துன்பத்தில் விழுந்தால் கரம் கொடுக்க நல்ல உறவுகளும் நண்பர் கூட்டங்களும் மனம் மயங்கியது. மதி செய்த பிழையால் விதி என் வாழ்வை பிளக்க தொடங்கியது. காதல் எனும் பயணம் கல்யாணம் என்னும் கயிற்றில் சிக்கியது. மேள தாளத்துடன் வாழை மரம் கட்டி பந்தல் போட்டு ஊர் உலகை அழைத்து ஆரவாரத்துடன் நடந்தது திருமண நிகழ்வு. பின் கடல் கடந்து சென்ற வாழ்க்கை பயணம் ஆரம்பித்தது. கனவுகள் நனவாகும் போது மனதில் ஏற்படுகிறது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

பழக பழக பாலும் புளிக்கும் என்ற வகையில் தூரத்தில் இருந்து நான் பார்த்த கண்ணோட்டம் அருகிலிருந்து பழகையில் வியப்பை ஏற்படுத்தியது. எனது தாய் தந்தையர் உடைய தொடர்பை தொலைத்தேன். சகோதரர் பாசத்தை இழந்தேன், ஊர் உலகை மறந்தேன். வீட்டின் உள்ளேயே சிறிது காலம் கழிந்தது. காதலனாக வந்தவன் கள்வர் கூட்டத்தின் தலைவர் என்று அறிந்த போது எனது மனம் இடிந்து போனது, இதயம் நொறுங்கியது உணர்வுகள் செத்து போனது. கண்களில் அருவி பெருக்கெடுத்தது.

அவன் பல கோடிகளுக்கு மனித உறுப்புக்களை திருடி மக்களை ஏமாற்றி குழந்தைகளை கடத்தி பிழைக்கும் ஈன கல் நெஞ்ச காரனின். பிடியில் மாட்டிக் கொண்டு தவிக்கும் என் நிலை என்னவாகும் என்ற பதட்டமும் பட படப்பும் என் நாடி நரம்புகள் எல்லாம் விரைத்தது. இதை இவ்வாறு விட்டால் எதிர்காலம் என்னவாகும் எத்தனை பேர் பாதிக்கப்படுவார்கள் இவர்களின் ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது யார் ? என்று பல கேள்விகள் எழுந்தது. எப்படியாவது எங்கேயாவது யாரிடமாவது சொல்லி விட வேண்டும் என்ற ஆதங்கம் எனக்குள் எழுந்தது திடுக்கென விழித்தேன்.

இவை கனவுகளாக இருந்தாலும் எமது சமுதாயத்திற்கு அறிவிக்க வேண்டிய விழிப்பு உணர்வு தான். இன்றைய சமூகம் வலை தளங்களில் சிக்கி தவிக்கும் இது போன்ற பல கதைகள் நாம் அறிந்தது உண்டு. 5 நிமிடத்தில் நமது கலாசாரத்தை அழிக்க வந்த அரக்கன் தான் கையடக்க தொலைபேசி. தொடர்பாடல் நம் அறிவையும் உறவையும் வளர்ப்பதக்கு அன்று எமது கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அழிப்பதற்கு இல்லை. கர்ணனின் கலச குண்டலத்தை போல கையில் ஒட்டிக் கொண்ட கையோட்டி இந்த தொலைபேசி. நவீன மயத்தின் கலப்படத்தால் எமது வாழ்வில் கலாசாரம், நாகரிகம் என்பன சீர்குலைந்து வருகின்றது. நாம் எனது எதிர்கால சமூகத்தை சிறந்த முறையில் உருவாக்குவதற்கு இன்றைய சந்ததியினரிடம் விளிப்பு உணர்வை ஏற்படுத்தும் செயல்படுகளில் ஈடுபட வேண்டும்

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022

# உலகின் 2ஆவது பணக்காரர்




## இந்தியாவின் கவுதம் அதானி

(சிறப்பு தொகுப்பு)

எலான் மஸ்க்கிற்கு அடுத்தபடியாக உலகின் 2ஆவது பெரிய பணக்காரர் ஆகியுள்ளார் கவுதம் அதானி. அதானி குரூப் நிறுவனங்களின் தலைவரான இவர், உலக பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பன்னாட்டுத் தொழிலதிபதிரான இவர் குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரத்தில் பிறந்தவர். இவரது அதானி குழுமம், வேளாண்மை, பாதுகாப்புத் துறை, துறைமுகம், பெயர்ச்சியியல், எரிசக்தி மற்றும் மின் உற்பத்தி துறைகளில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. 15 செப்டம்பர் 2022 அன்று போர்ப்ஸ் நிறுவனத்தின் அறிக்கையின் படி, கௌதம் அதானி குடும்பத்தின் சொத்து $155B பில்லியன் அமெரிக்க டாலர் என கணித்துள்ளதுடன் இரண்டாவது உலக பணக்கரார் என கணித்துள்ளனர். இன்று வரை தன் வணிக சாம்ராஜ்யத்தை குஜராத்திலிருந்தே நிர்வகித்து வரும் 58 வயதான கௌதம் அதானியின் பில்லியனர் அத்தியாயம் எப்படித் தொடங்கியது?

1980களிலேயே கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, சொந்த ஊரான அகமதாபாத்தை விட்டு மும்பைக்குச் சென்று வைர வியாபாரத்தில் இறங்கினார். 1988ஆம் ஆண்டு தன் சகோதரர்களில் ஒருவரின் பிளாஸ்டிக் ஆலையை நிர்வகிக்க மீண்டும் குஜராத் வந்து, தனக்கென சொந்தமாக ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கி தன் தொழிலதிபர் கனவுக் கோட்டைக்கு அடித்தளமிட்டார் அதானி. அந்த நிறுவனத்தின் பெயர் தான் அதானி என்டர்பிரைசஸ்.

### கௌதம் அதானியின் வியாபார சாதனைகள்

**இந்தியாவிலேயே சுமார் 300 கிலோமீட்டர் நீளத்துக்கு தனியார் ரயில் பாதைகளைக் கொண்டிருக்கும் ஒரே நிறுவனம், வருடைய நிறுவனம் தான்.**

**இந்தியாவிலேயே மிகப் பெரிய தனியார் அனல் மின் நிலையம் வைத்திருக்கும் நிறுவனமும் அதானி குழுமம்தான்.**

**இந்தோனீசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் நிலக்கரி சுரங்கங்களை நடத்தி வருகிறார் அதானி.**

**தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தின் கமுதியில் தான், 2500 ஏக்கர் நில பரப்பில், உலகின் மிகப் பெரிய சோலார் உற்பத்தி நிலையத்தை அமைத்திருக்கிறார்.**

இவ்வாறு வியாபாரத்திலும் தொழிலிலும் இவ்வளவு உயரத்தை எட்டிய கௌதம் அதானி கூச்ச சுபாவமுடையவராக இருப்பதோடு, ஆங்கிலத்தில் அதிக புலமை இல்லை. தன் சக போட்டியாளர்களைப் போல அதிகம் ஊடகத்தின் முன் தோன்றி பகிரங்கமாகவோ, பெரிய ஆளுமையுடனோ பேசக்கூடியவர் அல்ல என்பதும் நோக்கப்பட வேண்டிய ஒன்று. உலக பணக்காரர்கள் பட்டியலில் வேகமாக முன்னேறி 2வது இடத்திற்கு சில வருடங்களில் சென்றுள்ள அதானி, விரைவில் உலகின் நம்பர் 1 பணக்காரராக உருவாகினால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றே கூற வேண்டும்.

துணிந்தெழு

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு

# சிறுவர் செய்தி வாசிக்கும் போட்டி




## போட்டி நிபந்தனைகள்

- 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கலந்துகொள்ளலாம்.
- எந்த நாட்டிலிருந்தும் பங்குபற்றலாம்.
- தமிழ்,ஆங்கிலம்,சிங்களம் ஆகிய மொழிகளில் செய்தி வாசிக்கலாம்.

உங்களுக்கு விரும்பிய செய்தி ஒன்றை மூன்று நிமிடத்திற்கு மேற்படாதவாறு வீடியோ செய்து அதனுடன் உங்கள் பெயர், முகவரி, வட்சப் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு கீழுள்ள இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

**+94757000791** skytamil.lk@gmail.com

**2022 ஒக்டோபர் 20ம் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

#skytamil.lk www.skytamilmedia.com

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022





# இறை பக்தியை நிறை சக்தியாக கொண்ட பன்முக ஆளுமை ஜெர்மனியைச் சேர்ந்த மீனா உதயகுமார்



நேர்கண்டவர்:
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்

பாடகி, சமூக சேவகி, நிகழ்ச்சி தொகுப்பாளினி என பன்முக ஆளுமை கொண்டவர் தான் சகோதரி திருமதி மீனா உதயகுமார். இவர் இலங்கையில் பிறந்தவர் நாட்டில் நிலவிய கலவர நிலைமையை அடுத்து இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து ஜெர்மனிக்குச் சென்று குடியேறியவர். 1998 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுமார் 34 வருட காலமாக ஜெர்மனியில் வாழ்ந்து வரும் இவர் அக்கரையில் வாழ்ந்தாலும் இக்கரையான இலங்கையர் மீது அக்கறை கொண்டவர். தன் குடும்பத்தை நேசிப்பது போலவே அனைவரையும் நேசிக்கும் அன்பாளர்.

சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இவர் இறை பக்தியை நிறை சக்தியாக கொண்டு இயங்குபவர். கோயிலில் தொண்டு புரிவதில் தொய்வு கொள்ளாது இன்பம் காண்பவர். தனது வாழ்வில் பெரும்பாலான நேரத்தை கோயிலில்தான் செலவிட்டு வருகிறார். பல தொண்டர் ஸ்தாபனங்களில் அங்கம் வைக்கும் இவர் சர்வதேச சாதனையாளர் அறக்கட்டளையின் ஆசிய நாடுகளுக்கான கௌரவ செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் இயங்கும் “விழித்தெழு” பெண்ணே அமைப்பின் இயக்குநரான திருமதி சசிகலா நரேந்திரன் அவர்களினால் இலங்கையில் நடத்தப்பட்ட சர்வதேச பெண் ஆளுமைகளுக்கான விருது வழங்கும் விழாவுக்கு ஜெர்மனியில் இருந்து கொண்டே இலங்கை பெண் ஆளுமைகள் பலரை சிபார்சு செய்த பெருமை திருமதி மீனா உதயகுமாரையே சாரும்.

இவர் சிறந்த பாடகியாகவும், பாடலாசிரியையாகவும் திகழ்கிறார். இவரின் இசை மழையில் நனைந்து இன்பம் கண்டோர் பலர். இவ்வாறு பல்துறை சிறப்புமிக்க சகோதரி மீனா உதயகுமாரை, கட்டாரிலிருந்து வெளிவரும் “துணிந்தெழு” சஞ்சிகைக்காக நேர்காணல் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**இனி அவரின் அனுபவ பகிர்வினை நோக்குவோம்**

**கேள்வி: எமது வாசகர்களுக்காக உங்களைப் பற்றிய அறிமுகம் ?**

பதில்: எனது பூர்வீகம் யாழ்ப்பாணம். எனது தந்தை பெயர் திரு. பீ. நாகலிங்கம் - தாய் திருமதி ராஜேஸ்வரி அன்பான என் தாயார் ஓர் ஆசிரியை. இன்று எனது சமய தொண்டு புரிய என்னை உற்சாகம் கொடுத்தவர் அவரே. நான் படித்த பாடசாலை யாழ்ப்பாணம் ராமநாதன் கல்லூரி. எனது அன்பு கணவர் உதயகுமார். எமக்கு ஒரு மகன் ஒரு மகள் . ஜெர்மனி என்றாலே உலகில் முதல் தர இரும்பு உற்பத்தி செய்யும் நாடு. எனது கணவரும் இங்கே மிகப்பெரிய ஒரு இரும்பு தொழிற்சாலையில் கடமை புரிகின்றார். மகன் தாதியாக பணிபுரிகின்றார்.

மகள் அவருடைய பட்டய கணக்காளர் படிப்புக்காக இந்த வருடம் பல்கலைக்கழகம் செல்ல தன்னை தயார்படுத்தி கொண்டு இருக்கின்றார் .

**கேள்வி: நீங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்த போதும் பிறந்த மண்ணை மறக்காது பல சமூக சேவைகள் செய்து வருகிறீர்கள். அது பற்றி கூறுங்களேன் ?**

பதில்: இலங்கையில் நான் இருக்கும் காலத்தில் செஞ்சிலுவை தொண்டர் அமைப்பிலும். பல இளைஞர் கழகங்களிலும், செல்ல பிராணிகள் பாதுகாப்பு அமைப்பிலும் மற்றும் ஆதரவற்ற பலபேரை ஆதரிக்கும் நிலையங்களிலும் சேர்ந்து பணியாற்றி உள்ளேன். என்றும் தாய்நாட்டை மறக்க முடியாது . மறக்கவும் கூடாது. ஜெர்மனியில் நாம் மிக மரியாதையாக செல்வாக்குடன் வாழ்ந்து வந்தாலும் நாம் பிறந்து தவழ்ந்து வளர்ந்து வந்த எமது தாய் மண்ணுக்கும் மரியாதையும் மதிப்பும் கொடுக்கவேண்டும். அந்த எண்ணத்தோடுதான் ஜெர்மனியில் இருந்து கொண்டு தாய் நாட்டில் பெற்றோரை இழந்த சிறு குழந்தைகளுக்கும், கணவரை இழந்த பெண்களுக்கும் என்னால் முடிந்த உதவிகளை செய்து வருகின்றேன்

**கேள்வி: தங்களின் இசைத்துறை ஈடுபாடு பற்றி ?**

பதில்: நான் சிறு வயதிலிருந்தே நன்றாக பாடுவேன்.





அதைப் பார்த்து விட்டு எனது பெற்றோரும் எனது தாய் மாமன்மாரும் கொடுத்த உற்சாகம் இசைத்துறைக்கு வர வைத்தது. அன்று முதல் இன்று வரை ஆலயங்களில் பாடி வருகின்றேன். நானே பாடல்களை எழுதி மெட்டமைத்து பாடுவேன். அந்த ஆர்வத்தில் எனது சொந்த இறுவட்டு ஒன்றை வெளியிட வேண்டும் என்ற ஆசை மனதில் ஏற்பட்டது . அந்த ஆசையை எனது நீண்டநாள் சிறு வயது நண்பன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசையமைப்பாளராக கடமை புரியும் மதிப்புக்குரிய திரு. சிவசங்கர் அவர்களின் உதவியுடன் எனது முதல் இறுவட்டினை வெளியிட்டேன்.

**கேள்வி: நீங்கள் இறுவட்டு எங்கே வெளியிட்டீர்கள் ?**

பதில்: நான் எனது முதல் பக்தி பாடல் இறுவட்டினை ஜெர்மனியில் நான் தொண்டாற்றும் எமது காமாட்சி அம்மன் ஆலயத்தில் 2018ஆண்டு எங்கள் குருவின் தலைமையில் எனது சிறுவயது நண்பரும் இறுவட்டின் இசைமைப்பாளருமான திரு. சிவசங்கர் அவர்களின் கரங்களால் முதல் இறுவட்டினை எமது ஆலய குருவுக்கு கொடுத்து வெளியிட்டோம். மீண்டும் அதே இறுவட்டினை 2018ஆண்டு ஜுலை மாதம் கொழும்பு தமிழ் சங்கத்தில் எமது ஆலய குருவின் முன்னிலையில், முன்னாள் அமைச்சர் திரு. மனோகணேசன் அவர்களின் தலைமையில் திரு. சிவசங்கர் அவர்கள் ஏற்பாட்டில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

**கேள்வி: இந்த இறுவட்டில் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தையும் நீங்கள்தான் எழுதினீர்களா ?**

பதில்: அந்த இறுவட்டில் மூன்று பாடல்களை நான் எழுதி இருந்தேன். ஏனைய பாடல்களை எனது சைவ சமய குரு மதிப்புக்குரிய சிவானந்த சர்மா அவர்களும் சிவசங்கர் அவர்களும் எழுதி இருந்தார்கள்.

**கேள்வி: நீங்கள் ஜெர்மனியில் வாழ்ந்தாலும் தமிழையும் தமிழ் கலசாரத்தையும் மறக்காமல் அழகான தமிழ்ப் பெயரிட்டு யூடியூபில் நடத்தும் “அழகிய தமிழ் மகள்” நிகழ்ச்சிப் பற்றி சற்று கூறுங்களேன் ?**

பதில்: என்னை ஓர் அழகிய தமிழ் மகளாக அடையாளம் காட்ட வைத்தது இந்த “அழகிய தமிழ் மகள்” என்னும் யூடியூப் நேர்காணல் நிகழ்ச்சிதான். மிகவும் மனதுக்குப் பிடித்த ஒரு நிகழ்ச்சி. உலகில் உள்ள பல நாடுகளைச்




சேர்ந்த சாதனைகள் புரிந்த எங்கள் அழகிய தமிழ் மகள்களை நான் நேர்காணல் கண்டு ஜெர்மனியில் இயங்கும் உலக கோவில் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பி வருகின்றோம். நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, பிரான்ஸ், லண்டன், இலங்கை, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளை சேர்ந்த பெண்மணிகளை செவ்வி கண்டு இருக்கின்றேன். இந்த நிகழ்ச்சியை எனக்கு செய்வதற்கு ஊக்கம் கொடுத்த உலக கோவில் தொலைக்காட்சி அதிபர் திரு. ராஜகருணா அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கேள்வி: உங்களின் சமூக சேவைகள் மற்றும் இசைப் பங்களிப்புக்காக கிடைத்த விருதுகள் ?**

பதில் : நான் பிறந்த மண்ணில் முத்தமிழ் சைவ உபசாகி விருது 2018, இந்தியாவில் இயங்கும் இனிய நந்தவனம் அமைப்பினால் உலக சாதனை பெண் விருது 2021, இந்தியா மதுரை கிராமிய இசைக்கலைஞர் அமைப்பினால் வாழ்நாள் சாதனையாளர் விருது 2022, உலக தமிழ் பேரவை இந்திய அமைப்பினால் சிறந்த சைவ தொண்டர் விருது 2022, கனடா “விழித்தெழு பெண்ணே” விருது 2022 என்பன எனக்கு கிடைத்துள்ள விருதுகளாகும்.









**கேள்வி: பல அனுபவங்கள் கண்ட நீங்கள் இன்னல்களுக்கும் முகம் கொடுத்தே இன்றைய இந்த நிலையை அடைந்திருப்பீர்கள் உங்களுடைய வாழ்வில் நடந்த கசப்பான சம்பவம் ஒன்றை சுருக்கமாக தரலாமே..?**

பதில்: கசப்பான நினைவு என்றால் அது மிகவும் வேதனையான ஒரு சம்பவம் சொல்லி ஆகணும். செல்வாக்காக நான் என் தம்பி எங்கள் பெற்றோருடன் வாழ்ந்த காலத்தில் போர் சூழலால் வீடு வாசல் சொத்துக்கள் யாவற்றையும் ஒரே நாளில் இழந்து அடுத்த வேளை உணவுக்கு கஷ்டப்பட்டு உறவினர்கள் கூட எங்களை அகதிகளாகப் பார்த்து ஏளனம் செய்த கொடுமையை நேரில் பார்த்து மிகவும் மன வேதனை அடைந்தவள் நான். ஆனால் இறைவன் அருளால் மீண்டும் நாங்கள் பழையபடி மீண்டு வந்தோம். இந்த கசப்பான அனுபவம் என்றும் என் நினைவை விட்டு அகலாது.

**கேள்வி: இன்றைய பெண்கள் ஒதுங்கி வாழாமல் தங்களாலும் சாதிக்க முடியும் என்பதை தைரியமாக பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இது பற்றி உங்கள் கருத்தென்ன ?**

பதில்: முன்னைய காலத்தில் பெண்கள் வெளியே வருவது குறைவு. இப்பொழுது பெண்கள் எல்லோரும் எல்லாத்துறையிலும் சிறந்து விளங்கி சிகரம் தொட்டு சிங்கப் பெண்களாக மாறிவிட்டார்கள். நானும் ஒரு பெண்ணாக எங்கள் பெண்களை வாழ்த்துகின்றேன். மென்மேலும் எமது பெண்கள் வீரநடை போட்டு முன்னுக்கு வரவேண்டும்,

**கேள்வி: எமது “துணிந்தெழு” சஞ்சிகைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

பதில்: “துணிந்தெழு” சஞ்சிகை இலக்கியம் மற்றும் ஏனைய துறைகள் சார்ந்தவர்களை மிகவும் ஊக்குவிப்பதை பார்த்தேன். அதைவிட இன பேதம் இன்றி எல்லோருக்கும் இந்த சஞ்சிகையில் இடம் கொடுத்திருப்பது இன்னும் மன மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் இந்த சஞ்சிகை பல ஆண்டுகள் தொடர்ந்து வர என் வாழ்த்துக்கள். வாசகர்கள் தொடர்ந்து இந்த சஞ்சிகைக்கு ஆதரவு வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

**கேள்வி: இறுதியாக நீங்கள் கூற விரும்புவதென்ன......?**

பதில்: எனது இந்த நேர்காணலைச் செய்த சகோதரி நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் அவர்களுக்கும், “துணிந்தெழு” சஞ்சிகை ஆசிரியர் திரு. ஜே. எம். பாஸித் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை கூறிக்கொள்கிறேன்.

வாழ்க நம் பண்பாடுகள் ! உலகெலாம் பரவட்டும் எம் தமிழ் புகழ் !!




**ஷிஹானா நௌபர்** B.Sc. in Psychology UG (IOU) துணிந்தெழு - இணை ஆசிரியர்






# நூற்றாண்டை நோக்கி பயணமாகும் காத்தான்குடி மத்திய கல்லூரி

கிழக்கிலங்கையில் தொன்று தொட்டு பிரதான நகரமாகத் திகழ்ந்து வரும் காத்தான்குடி பொருளாதார, கல்வி மற்றும் இலக்கியத் துறையிலும் தனக்கென தனித்துவமான அடையாளத்தை பெற்றிருக்கிறது. இந்த வகையில் கிழக்கு முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் காத்தான்குடி மத்திய கல்லூரிக்கும் கணிசமான பங்குண்டு என்பது இப் பாடசாலையின் வரலாற்றை நோக்கும் போது அறிந்துகொள்ள முடிகிறது.

காத்தான்குடி மத்திய கல்லூரியானது 1930 ம் ஆண்டு ஜனவரி மாதம் 6 ம் திகதி காத்தான்குடி பிரதேசத்தின் பெரும் சமூக சேவையாளரும் அப்போதைய வன்னிமை முதலியும் பின்னாட்களில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த முதலியார் சின்னலெப்பை அவர்களின் முயற்சியில் அப்போதைய கிழக்குப் பிராந்திய வித்தியாதிகாரி அக்கிராசனர் ஹரிசன் ஜோன்ஸ் துரை அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இது காத்தான்குடி 6 ம் வட்டார அரசினர் பாடசாலை எனப் பெயர் இடப்பட்டது அக்கால கட்டத்தில் பல பாடசாலைகள் இப் பிராந்தியத்தில் இயங்கி வந்த போதிலும் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் இணைந்து கற்பதற்கான பிரதான பாடசாலை ஒன்றினை மட்டக்களப்பு நகருக்கு வெளியே அமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கில் இது ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக எம்.சீ.எஸ். இஸ்மாயில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள் மேலும் 04 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு முஸ்லிம்,தமிழ் மாணவர்கள் 62 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1938 ம் ஆண்டு இப்பாடசாலையிலிருந்து கனிஷ்ட பாடசாலை சான்றிதழ் (Junior School Certificate- JSC ) பரீட்சைக்கு முதன் முதலாக மாணவர்கள் தோற்றி சித்தியும் பெற்றனர்.

அப்போதைய கல்வி மந்திரியும் இலவச கல்வியின் தந்தை என அழைக்கப்பட்டவருமான திரு C.W.W.கன்னங்கரா அவர்கள் சுதேச மக்களின் கல்வி வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 56 மத்திய மகா வித்தியாலயங்களை அமைக்கும் திட்டத்தின் கீழ் ஒரு மத்திய கல்லூரியாக இப் பாடசாலையை தெரிவு செய்து 1941 ஜனவரி மாதம் 6 ம் திகதி முதல் இது தரமுயர்தப்பட்டு " காத்தான்குடி அரசினர் மத்திய கல்லூரி "என்று பெயரிடப்பட்டது.

அதன் பலனாக பொத்துவில் முதல் புல்மோட்டை வரையிலான பிரதேசங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்கள் இங்கு அனுமதி பெற்றதுடன் கிழக்கிலங்கையின் முதலாவது பாடசாலை மாணவர் விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது. 1943 ல் தரம் 5 புலமை பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்பட்ட போது இக் கல்லூரியில் 9 மாணவர்கள் தோற்றி 5 பேர் சித்தியடைந்தனர். இதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் அனுமதிக்கப்படுவதற்கான விடுதி வசதியுடன் கூடிய கல்லூரியாக இது



எம்.சீ.எம்.ஏ.சத்தார்
அதிபர்

வளர்ச்சியடைய தொடங்கியது இதன் காரணமாக காத்தான்குடி அரசினர் மத்திய கல்லூரியானது கிழக்கு மாகாண முஸ்லிம் அறிஞர்கள், தலைவர்கள், கல்வியாளர்களை உருவாக்கும் தளமாக மாறியது.

1948 சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட பாடவிதான சீர்திருத்தங்கள் காரணமாக கலைத்திட்டத்தில் புதிய பாடங்களாக மரவேலை, மனைப்பொருளியல் ஆகிய படங்கள் சேர்க்கப்பட்டன இக்காலத்தில் மாணவர் தொகையும் பெருமளவில் அதிகரித்தது. ஆகையால் பாடசாலைக்கான இடப்பரப்பு அதிகரிக்கப்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டது இதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் முதலியார் சின்னலெப்பை அவர்களின் முயற்சியால் புதிய காத்தான்குடி பிரதேசத்தில் 14 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் பின்னர் அங்கு மாணவர் விடுதி அமைக்கப்பட்டு பிரதான வீதியில் பாடசாலையில் இயங்கிய விடுதி இங்கு இடமாற்றம் செய்யப்பட்டது.. அத்துடன் இக்கானியில் சுமார் 4 ஏக்கர் நிலம் மைதானத்துக்கென விருத்தி செய்யப்பட்டு 1950 ம் ஆண்டு இக்கல்லூரியின் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டியும் இம் மைதானத்தில் இடம்பெற்றது.

1952 ஏற்பட்ட புயல் காரணமாக பாடசாலை பெருமளவில் தேசமுற்றது. இதன் பின்னர் பாடசாலையை புதிய காத்தான்குடிக்கு இடமாற்றுவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு அங்கே அதாவது தற்போது கல்லூரி அமைந்திருக்கும் இடத்திலேயே பௌதீக, விஞ்ஞான ஆய்வு கூடத்துடன் கூடிய கட்டிடமும் நிர்மாணிக்கப்பட்டது.

இதன் பின் 1952 ஏப்ரல் 26 ம் திகதி முழுவதுமாக கல்லூரி புதிய இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இக்கால கட்டத்தில் கல்வித் துறையிலும் பெண்களின் கவனம் திரும்பியது இச் சமயத்தில் கல்லூரியில் 13 பெண் மாணவிகள் கல்வி கற்று வந்தனர்.


இக்கால கட்டத்தில் மாணவர்களின் புறக்கிருத்தியச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக "பாடசாலை கல்வி சங்கம்" ,மாணவர்கள் தேச்சி சங்கம்", மற்றும் "இலக்கிய கழகம்" போன்றவை தோற்றுவிக்கப்பட்டது. 1955 ம் ஆண்டு செப்டம்பர் 19 ம் திகதி இக் கல்லூரியின் சாரணர் படை தோற்றுவிக்கப்பட்டது. இது மட்டக்களப்பு மாவட்டத்தின் 6 வது சாரணர் படையாக பதிவு செய்யப்பட்டது.

இவ்வாண்டு அக்டோபர் 1 ம் திகதி இக் கல்லூரியின் மைதானம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதில் முதலாவது நிகழ்வாக 30 பாடசாலைகள் கலந்துகொண்ட சாரணர் ஜம்பொரி ஒன்றும் நடைபெற்றது. இதனை முன்னின்று நடாத்துவதில் ஜனாப் எம்.ஏ.செய்யது அகமது அவர்கள் பாடுபட்டார்கள். 1957 இல் முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சைக்கு இக் கல்லூரி மாணவர்களும் தோற்றினார்கள்.

தனிச் சிங்கள சட்டம் போன்ற சில சட்டங்கள் சில அரசியல்மாற்றங்கள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கல்வித்தரம் வீழ்ச்சியடையுமென அச்சம் கொண்டிருந்த காலப்பகுதியில் 1959 ம் ஆண்டு அதிபராக ஜனாப் எச்.எம்.ஹாசிம் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார். இவரது சேவைக் காலம் இக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு பொற்காலமாக கருதப்படுகிறது இவர் மக்களிடையே கல்வியின் மகத்துவமும் தேவைகளும் குறித்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டார்.

இக் காலப்பகுதியில் கிழக்கு மாகாணம், பொலன்னறுவை உட்பட பல பிரதேசங்களையும் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்வியை மேற்கொண்டு வந்தனர். இரண்டு மாணவர் விடுதிகளும் மாணவர்களால் நிரம்பிக் காணப்பட்டதாக அக் காலப் பகுதியில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஊடாக அறிய முடிகிறது. ஜனாப் எச்.எம்.ஹசிம் அவர்களின் பின்னர் பல அதிபர்கள் இக்கல்லூரியின் செயற்பாட்டில் பெரும் பங்களிப்புக்களைச் செய்துள்ளனர்.

இவர்களுள் 1967 ல் அதிபராக பதவியேற்ற ஜனாப் சீ.ஓ.லெஸ்தகீர் அவர்களும் குறிப்பிடத்தக்கவராவர். இவர் மாணவர்களின் கல்வி ஒழுக்க விடயங்களை மேம்படுத்துவதில் பெரும் பங்காற்றினார்கள். 1970 களில் க.பொ.த(உ/த) வகுப்புக்களை ஆரம்பித்தார். அப்போது போதிய ஆசிரியர்கள் இல்லாமை பெரும் இடையூறாக அமைந்திருந்தது. எனினும் முதல் தொகுதி மாணவர்கள் 1974ல் கலை, வர்த்தகப் பிரிவுகளில் தோற்றி 100% சித்தியடைந்தமை பெரும் வரலாற்றுப் பதிவாகும். எனினும் உயர்தர விஞ்ஞானப் பிரிவு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் அப்போதைய அதிபரான ஏ.எல்.ஏ.ஜவாத் அவர்களால் 1975 ல் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் கல்லூரி விஞ்ஞான துறை சார்ந்த முழுக்கட்டமைப்புக்களையும் பெற்றுக்கொண்டது







மட்டுமல்லாது பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தி மற்றும் அழகு படுத்தல் செயற்பாடுகளும் மேம்பட்டது. எனினும் அக்காலப்பகுதியில் காணப்பட்ட அரசியல் சூழலும் ஆசிரியர் இடமாற்றங்களும் கல்லூரி வளர்ச்சியில் தேக்க நிலையை ஏற்படுத்தின.

எனினும் 1984 வரை அதிபர்கள் இதனை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளையும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வந்தனர். 1984 ல் பிரதி அமைச்சர் அகமட் பரீட் மீராலெப்பை அவர்களின் வேண்டுகோளின் பேரில் இக் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாப் எம்.ஐ.சின்னலெப்பை அவர்கள் கல்லூரியை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதில் முழு மூச்சுடன் பங்காற்றினார்.

இவரது காலப்பகுதியில் 1984 ல் முதலாவது மாணவனாக மருத்துவ துறைக்கு எம்.எம்.அப்துல் றஹ்மானும், 1988 ல் முதலாவது மாணவனாக பொறியியல் துறைக்கு எம்.எம்.பழுலுள்ஹக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை இக் கல்லூரிக்கு கிடைத்த வெற்றிகளாக கருதப்பட்டன.அதன் பின்னர் இன்றுவரை பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இக் கல்லூரியில் இருந்து பல துறைகளுக்காக பல்கலைக்கழகம் சென்றுவருகின்றனர்.

1984 ல் கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் ஏற்பட்ட சீர்திருத்தம் காரணமாக இக் கல்லூரி 20 க்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு தலைமை தாங்கும் தொத்தணிப் பாடசாலையாக மாற்றப்பட்டது. இக்கட்டமைப்பு 1993 வரை நீடித்தது இக் கல்லூரி அதிபர், கொத்தணி அதிபர் (Cluster Principal) என அழைக்கப்பட்டார். இறுதி கொத்தணி அதிபராக எம்.எம்.மஹ்றூப் கரீம் அவர்கள் கடமையாற்றினார். இவரது காலத்தில் க.பொ.த.(உ/த) பரீட்சையில் கணித ,விஞ்ஞான துறைகளில் மாவட்டத்தில் முதலாம் இடங்களைப்பெற்று இரு மாணவர்கள் சாதனை படைத்தனர். மாவட்டத்தின் 75 வருட க.பொ.த(உ/த) வரலாற்றில் கணிதத் துறையில் 4A சித்திகளை பெற்று ஏ.சீ.எம்.முஹம்மது அதீக் எனும் மாணவர் பெரும் சாதனையினைப் படைத்தார்.

இக் கல்லூரி பிரதி அமைச்சர் ஜனாப் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அவர்களின் முயற்சியால் 1994 டிசம்பர் 20 ம் திகதி முதல் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. முதலாவது தேசிய பாடசாலை அதிபராக கே.எம்.ஏ.அஸீஸ் கடமையாற்றினார். இவரே இக்கல்லூரியின் அதிக காலம் கடமையாற்றிய அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1990 களின் பின்னர் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையும் காத்தான்குடி மக்கள் சந்தித்த பொருளாதார அழிவுகளும் மாணவர்களை கல்வித் துறையின்பால் அவர்களின் நாட்டத்தை திருப்பி விட்டது.அன்றுமுதல் இன்றுவரை இக் கல்லூரியின் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகள் தொடர்ச்சியான அதிகரிப்பினை கண்டு வருகிறது.

2000 ம் ஆண்டில் இக் கல்லூரிக்கு அதிபராக ஜனாப் எம்.எச்.காதர் இப்றாஹீம் அவர்கள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அவர்களின் வேண்டுகோளின் பேரில் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் கல்லூரியின் நிர்வாக கட்டமைப்பை ஒழுங்குபடுத்தினார். இதன் மூலம் பொறுப்புக்கள் பரவலாக்கம் செய்யப்பட்டு கல்லூரியின் வளர்ச்சியில் உத்வேகம் பெற்றது. அத்துடன் இவரது காலத்திலேயே 2001 ல் மீண்டும் ஆரம்ப பிரிவு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் இப்பாடசாலை உள்ளீர்க்கப்பட்டு ஆரம்ப பிரிவு நிறுத்தப்படும் வரை சிறப்பாக செயற்பட்டது. இதன் காரணமாக 2007 ம் ஆண்டு தரம் 5 புலமை பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் தேசிய மட்டத்தில் 5 ம் இடத்தை பெற்று சாதனை படைத்தது.

2003 முதல் 2004 வரை அதிபராக கடமையாற்றிய ஜனாப் எம்.சீ.எம்.ஏ.சத்தார் அவர்களின் காலத்தில் CLC எனப்படும் கணினி கற்கை நிலையம் திறந்து வைக்கப்பட்டதுடன் நவோதய திட்டத்தில் பாடசாலை உள்ளீர்க்கப்பட்டது. 2004 முதல் 2008 வரை அதிபராக கடமையாற்றிய ஜனாப் யூ.எல்.ஏ.மஹ்ரூப் அவர்களின் காலத்தில் ஒரே தடவையில் மருத்துவத் துறைக்கு 6 மாணவர்களும் பொறியியல் துறைக்கு 6 மாணவர்களும் தெரிவாகிய சாதனை பயணம் ஆரம்பமாகியது.

2008 முதல் 2010 வரை அதிபராக கடமையாற்றிய ஜனாப் ஏ.எம்.றபீக் அவர்களின் காலப்பகுதியில் க.பொ.த (சா/த) பரீட்சை-2010 இல் 8 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் 09யு



சித்திகளைப் பெற்று சாதனை படைத்தமை வரலாற்றுப் பதிவாகும்.

அதிபர் யூ.எல்.ஏ.முபாரக் அவர்கள் இக் கல்லூரியைப் பொறுப்பேற்றது முதல் பாடசாலை முறைமைகள் சிறப்பாக ஒழுங்கு படுத்தப்பட்டன 5ளு முறைமைகளின் அமுலாக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. கல்வி மற்றும் விளையாட்டு துறைகளில் தேசிய மட்டம் வரை பல்வேறு வெற்றிகளை கண்டுவருகின்றது. பிரதி அதிபராக கடமையாற்றிய எம்.எல்.ஏ.லாபிர் அவர்களினால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன கணினி கற்கை நிலையம் "தேசிய தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அதி திறமைய பரிசில்" (NICTE AWARD 2010-2011) போட்டியில் பங்குபற்றி இக் கல்லூரி வரலாற்றில் காணாத ரூபா ஒரு மில்லியன் பரிசைப் பெற்று சாதனை படைத்தது.

அதிபர் யூ.எல்.ஏ.முபாரக் அவர்களின் அயராத முயற்சியின் காரணமாக பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் இக் கல்லூரி அரசின் "மகிந்தோதய" 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டது. இக் கல்லூரியில்" 2020 பாடசாலையின் அதிபர்களுக்கான இலட்சியங்கள்" என்று பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டப்பட்டது. 2015ம் ஆண்டில் இருந்து அதிபராக கடமையாற்றிய அல்ஹாஜ் எஸ்.யூ.பிர்தௌஸ் அவர்களின் காலத்தில் 2016ம் ஆண்டு இப்பாடசாலை 13 வருட உத்தரவாத கல்வித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அதற்கான SMART CLASS ROME களும் உருவாக்கப்பட்டன.

2019ம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் , எமது நாட்டில் காணப்படுகின்ற 7 வகையான பிரிவுகளிலும் (7 STREAM) இருந்து 72 இற்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்ற வரவாற்றுச் சாதனை படைக்கப்பட்டது.

பிரதி வருடமும் பல்கலலக்கழகத்திற்கு மருத்துவம், பொறியியல் மற்றும் முகாமைத்துவ, கலை, தொழிநுட்ப மற்றும் ஏனைய பீடங்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு பெய்யப்படும் மாணவர்களுல் சுமார் 15% இக்கல்லூரி மாணவர்கள் என்பது பெருமையுடன் குறிப்பிடத்தக்கதாகும் .

அது மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்பான முன்னேற்றத்தைக் காட்டுவதுடன் பல மாகாண, தேசிய விருதுகளையும் பெற்றுள்ளது. அத்துடன் விளையாட்டு நிகழ்வுகளில் பல மாகாணமட்ட அடைவுகளைப் பெற்ற போதிலும் தேசிண மட்ட விருதுகளைப் பெறுவதணை இலக்காக கொண்டு செயற்பட்டு வருகிறது.

தற்போதைய அதிபராக பாடசாலை நிறைவேற்று அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம்,வலையக் கல்வி பணிமனை அதிகாரிகள், மற்றும் பாடசாலை சமூகம் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எம்.சீ.எம்.ஏ.சத்தார் அவர்கள் (04.03.2022) அன்று பொறுப்பேற்று பாடசாலை பழைய மாணவர்களை ஒன்றுசேர்த்து பாடசாலையை சமூகத்துடன் இணைத்தல் எனும் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் மாணவர்களின் கல்வி,ஒழுக்கம் போன்றவற்றை மேம்படுத்துவதிலும் பாடசாலையில் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதிலும் கூடுதல் கவனமெடுத்து வருகின்றமை கல்லூரியின் சாதனை பயணத்தின் சான்றாகும்.






இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் இலங்கை உட்பட உலகின் பல பிராந்தியங்களில் பல உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர் .

இப் பாடசாலையின் கடந்த கால அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் முன்னாள் அதிபர்களது பங்களிப்பும் அர்ப்பணிப்பும் மிகவும் மகத்தானது. அத்தோடு இப்பிராந்தியத்தில் அரசியல் அதிகாரம் பெற்றிருந்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முதலியார் சின்னலெப்பை, முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத், முன்னாள் பிரதியமைச்சர் டாக்டர் அஹமட் பரீட் மீராலெப்பை, முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஆகியோரது பங்களிப்புகள் இப்பாடசாலையின் பெரும் பங்களிப்பு வகிக்கிறது

**எம்.பஹ்த் ஜுனைட்**



# பொருளாதார நெருக்கடியின் போது ஒரு முஸ்லிமின் வகிபாகம்



எம்.எப்.எம். ஆஸிர் (ஸலபி, றியாழி),
விரிவுரையாளர்
அல் ஹாமியா அரபுக் கல்லூரி
கல்முனை

இன்று உலகம் வெகு வேகமாக வீறுநடை போட்டுக் கொண்டிரும் சந்தர்ப்பத்தில் அந்த வேகத்தை தடுத்து நிறுத்துவதற்காக அல்லாஹ்வால் ஏற்பாடு செய்யப்பட்டதுதான் உயிர்களைக் காவு கொள்ளும் தொற்று நோயாகும். உலக வரலாறுகளை எடுத்து நோக்கும் போது கொடிய நோய்கள் பரவுமாக இருந்தால் அதனுடன் சேர்ந்து பொருளாதார நெருக்கடியும் ஏற்படும் என்பது அல்லாஹ்வால் விதிக்கப்படாத விதியாகக் காணலாம்.

இன்று உலகமே இவ்விரண்டையும் எதிர் கொண்டுள்ளது என்பது மறைக்க முடியாத உண்மையாக காணலாம். அதிலும் குறிப்பாக இலங்கை வாழ் மக்கள் மிகவும் அதிகமாக இவ்விடயங்களில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பது உள்ளங் கை நெல்லிக் கனி போல எங்களுக்கு தெரிகின்றது. உயிர் கொல்லி நோய் ஒரு புறம் மக்களை கோழி முட்டையை அடைகாப்பது போல வீட்டினுள் அடைபட்டுக் கிடக்க வைத்தாலும், அவர்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் தங்களின் உயிர்களை மாய்த்துக் கொள்ளும் அவல நிலையையும் கண்டு கொண்டிருக்கின்றோம்.

இன்று பொருளாதாரத்தை எதிர் கொள்ள முடியாமல் தவிக்கும் மக்களுக்கு மத்தியில் நிதானமாகவும் நீதமாகவும் நடந்து கொள்ளும் நல்லுள்ளம் படைத்தவர்களையும் காண்பது என்பது அரிதல்ல. எனவே தான் நாம் பொருளாதாரத்தையும் அதனை அடைவதையும் விளங்கிக் கொள்வதையும் எப்படி அணுகுவது என்பதனை அறிவது முதற் கடமையாக இருக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ எந்த உயிராக இருந்தாலும் அது தன்னுடைய வாழ்வாதாரத்ததை (றிஸ்கை) அடையாமல் மரணிப்பது கிடையாது. நீங்கள் அல்லாஹ்வின் வாழ்வாதாரத்தில் (றிஸ்க்) இருந்து விரண்டோடினாலும், மரணம் எப்படி உங்களை வந்தடையுமோ அப்படி உங்களுடைய வாழ்வாதாரம் (றிஸ்க்கும்) உங்களை வந்தடையும்”

அதே போன்று தான் அல்லாஹ் அல்குர்ஆனில் “ உங்களுக்கும் அவர்களுக்கும் உணவளிப்பது நாங்கள் தான்” என்று உணவளிப்பதை அவனுடைய கடமை என்று சொல்லிக் காட்டுகின்றான். இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் வாழ்வாதாரம் தீர்மானிக்கப்பட்டதன் பின்னரே பிறக்கின்றார்கள் என்பது இஸ்லாமிய மார்க்கம் எங்களுக்கு எடுத்துச் சொல்கின்றதை பார்க்கலாம். ஆனால் இன்று எங்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியை எதிர் கொள்வதற்கு நாம் தயாராக இல்லை என்பதனை நாம் கடையோரங்களில், கடைத் தெருக்களில் அளவலாவிக் கொண்டிருப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

**பொருளாதார நெருக்கடி எங்களுக்கு மட்டுமா?**

பொருளாதார நெருக்கடி என்பது எங்களுடைய காலத்தில்

அதிலும் குறிப்பாக தற்போதுதான் இடம் பெறுகின்றது என்று நாம் நினைப்பது தவறான சிந்தனையாகும்.

நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் விலைவாசி அதிகரித்த போது மக்கள் நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் விலை நிர்ணயம் செய்வது அல்லாஹ்வாகும். அவனே உணவளிப்பதும், செல்வத்தை வளங்குவதும் அதனை பிடிங்கி எடுப்பதும்" என பதில் அளித்தார்கள்.

அதே போன்று அபூ பக்கர் (ரழி) அவர்களுடைய காலத்திலும் ஆமுர் றமாதா என்று அழைக்கப்பட்ட பஞ்ச வருடம் உருவானது என்பதனையும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். எனவே பொருளாதார நெருக்கடி ஏற்படுவது அல்லாஹ்வின் நாட்டத்திலாகும்.

**பொருளாதார நெருக்கடியை எப்படி எதிர்நோக்குவது?**

இன்று பல வழிமுறைக் காரணிகள் சொல்லப்பட்டாலும், அதாவது செலவீனத்தை குறைப்பது, சேமிப்பில் ஈடுபடுவது, தேவையற்ற வீண் விரையங்களை தவிர்பது போன்ற பல காரணிகளில் ஈடுபட்டாலும் மிக முக்கியமான அடிப்படைகளை நடைமுறைப் படுத்துவது அவசியமாகும்.

இறை நாட்டமே என்று ஏற்றுக் கொள்ளல். அல்லாஹ் அல்குர்ஆனில் "நிச்சயமாக, இக்கிராமங்களில் உள்ளவர்கள் நம்பிக்கை கொண்டு (அல்லாஹ்வை ) அஞ்சி நடத்திருந்தால், அவர்களுக்கு வானம் மற்றும் பூமியில் இருந்து பாக்கியங்களைத் திறந்து விட்டிருப்போம் எனினும் அவர்கள் பொய்ப்பித்தனர் எனவே அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவற்றின் காரணமாக நாம் அவர்களைப் பிடித்தோம்" என்று கூறிக் காட்டுகின்றான். (07:96)

எனவே தான் பொருளாதாரம் கூடிக் குறைவது அல்லாஹ்வின் நாட்டம் என்பதனை மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**பொருளாதாரம் இறை அச்சத்தினால் கிடைக்கும்.**

அல்லாஹ் அல்குர்ஆனில் "அவள் இருக்கும் தொழுமிடத்திற்குள் ஸகரிய்யா நுழையும் போதெல்லாம் அவர் அவளிடத்தில் உணவைக் கண்டு "மர்யமே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது" என ஆச்சரியமாகக் கேட்டார், இது அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும். நிச்சயமாக அல்லாஹ் தான் நாடுவோருக்கு கணக்கின்றி வழங்குவான் என்று அவள் கூறினாள்" (03:37)

அல்லாஹ் மீது அசையாத நம்பிக்கை வரும் போது அல்லாஹ் பொருளாதாரத்தில் அபிவிருத்தி செய்கின்றான் என்பதனை இந்த குர்ஆன் வசனத்தின் மூலம் எமக்குச் சொல்லிக் காட்டுகின்றான்.

**அல்லாஹ்விடம் பாவமீட்சி (தௌபா) செய்தல்.**

அல்லாஹ் அல்குர்ஆனில் "எனது சமூகத்தினரே! உங்கள் இரட்சகனிடம் நீங்கள் பாவமன்னிப்புக் கோரி அவனிடமே மீளுங்கள். அவன் உங்களுக்கு மழையைத் தொடராகப் பொழியச் செய்வான். உங்களது சக்திக்கு மேல் சக்தியை உங்களுக்கு அதிகரிப்பான். குற்றவாளிகளாகப் புறக்கணித்து விடாதீர்கள்" என்று ஹூத் நபி தனது சமூகத்திற்கு கூறினார்கள். (11:52)
அல்லாஹ்விடம் நாம் செய்யும் பாவங்களுக்கு அதிகமதிகமாக பாவமன்னிப்புக் கேட்கும் போது அல்லாஹ் பொருளாதாரத்தை எங்களுக்கு அதிகரிக்கச் செய்கின்றான்.

**விலைவாசி அதிகரிக்கும் போது ஒரு முஸ்லிம் வியாபாரியின் நிலைப்பாடு**
**போட்டி போட்டு மக்களை கஷ்டத்துக்குள்ளாக்காமல் இருத்தல்**

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் சந்தைக்குச் சென்றார்கள் அப்போது வியாபாரிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு வியாபாரப் பொருட்களை விற்றுக் கொண்டிருந்தார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள் "வியாபாரிகளே! மறுமையில் வியாபாரிகள் பாவிகளாக எழுப்பப்படுவார்கள் என்று சொல்லி விட்டு, யார் அல்லாஹ்வுக்கு அஞ்சி உண்மையாகவும், பொய்யில்லாமலும் வியாபாரம் செய்கின்றார்களோ! அவர்களைத் தவிர என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ரிபாஆ இப்னு றாபி (ரழி)
நூல் : திருமிதி (1210)

இந்த ஹதீஸின் அடிப்படையில் வியாபாரிகள் மக்களை சங்கடத்துக்கு உள்ளாக்காமல் வியாபாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

**மோசடி செய்யாமல் வியாபாரம் செய்தல்.**

நபி (ஸல்) அவர்கள் வியாபார பொருட்கள் வைத்திருக்கும் ஒரு கடையை தாண்டி செல்கின்ற போது, அந்த வியாபாரப் பொருட்களின் பையில் தங்களது கையை விட்டார்கள், அவர்களுடைய விரல்கள் நனைந்தது. உடனே வியாபாரியிடம் ஏன் ஈரமாக இருக்கின்றது எனக் கேட்டார்கள். அதற்கு அந்த

வியாபாரி "மழை பெய்து நனைத்து விட்டது என்றார், அதனை மக்களுக்கு காண்பிக்க கூடாதா என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டுவிட்டு "யார் எங்களுக்கு மோசடி செய்கின்றார்களோ! அவர்கள் எங்களைச் சார்ந்தவர்கள் அல்ல" எனக் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா (ரழி)
நூல் : முஸ்லிம் (102)

தயாளத் தன்மையுடன் நடந்து கொள்ளல்
நபி (ஸல்) அவர்கள் "பொருட்களை விற்றாலும் வாங்கினாலும் அல்லது கடன் கொடுத்தாலும் யார் தயாளத் தன்மையுடன் நடந்து கொள்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் அருள் புரிந்து விட்டான்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஜாபிர் இப்னு அப்துல்லாஹ்
நூல் : புஹாரி (2076)

எனவே வியாபாரிகளாக இருக்கும் நாங்கள் எப்போதும் எங்களிடம் வரும் வாடிக்கையாளர்களிடம் தயாளத் தன்மையோடு நடப்போமாக இருந்தால், வாடிக்கையாளரும் எங்களை விரும்புவார்கள் அல்லாஹ்வும் எங்களுடைய பொருளாதாரத்தில் அருள் புரிவான்.

பதுக்கலில் ஈடுபடுதல். நபி (ஸல்) அவர்கள் "யார் பதுக்கலில் ஈடுபடுகின்றாரோ அவன் பாவியாவான், இந்த சமூகத்திற்கு தவறிழைத்தவனாவான்" என்று கூறினார்கள்

அறிவிப்பாளர் : மஃமர் இப்னு அப்துல்லாஹ்
நூல் : முஸ்லிம் (1605)

நபி (ஸல்) அவர்கள் "மறுமையில் அல்லாஹ் மூன்று மனிதர்களுடன் பேசவும் மாட்டான் அவர்களை பார்க்கவும் மாட்டான் அவர்களை தூய்மைப் படுத்தவும் மாட்டான், அவர்களில் ஒருவன் தான் தன்னுடைய வியாபாரப் பொருட்களை பொய் சத்தியம் செய்து விற்பவன் எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூதர் அல்கிபாரி
நூல் : முஸ்லிம் (106)

மக்களை கஸ்டப்படுத்தும் நோக்கிலும், அதிக இலாபம் பெறும் நோக்கிலும் பதுக்கல் செய்பவர்கள், இந்த உலகிலும் வெற்றி பெறமாட்டார்கள் , மறுமையிலும் வெற்றி பெறமாட்டார்கள்.
எனவே பொருளாதார நெருக்கடியில் வாழும் நாம் மக்களின் நலன்களையும், அல்லாஹ்வையும் பயந்து, இஸ்லாம் காட்டித் தரும் பொருளாதார முறையின் அடிப்படையை பின்பற்றி வாழ்வோமாக! அல்லாஹ் மிக அறிந்தவன்

# பாடசாலை மாணவர்களுக்கான ஊடக செயலமர்வு

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகை நடாத்திய பாடசாலை மாணவர்களுக்கான ஊடக செயலமர்வு பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையில் 31.08.2022 ஆன்று பாடசாலை கேட்போர் கூடத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இச் செயலமர்வில் தரம் 6 முதல் 11 வரையான பாடசாலை ஊடகப் பிரிவை சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வானது பாடசாலையின் அதிபர் எம். ஜெ. எம் மன்சூர் அவர்களது தலைமையில் பாடசாலை ஊடகப் பிரிவின் பொறுப்பாசிரியர் ஆர். மனோகரன் அவர்களது கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றது.

இந்த இலவச ஊடக செயலமர்வு ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் இணை ஆசிரியருமான ஷிஹானா நௌபர் இனால் நடாத்தி வைக்கப்பட்டது. செயலமர்விற்கு தேவையான உதவிகளை துணிந்தெழு சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர் சிவபாலன் கற்பஹாசினி வழங்கியிருந்தார். 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.





துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022

# கத்தார் நாட்டின் புதிய தேசிய சின்னம் அறிமுகம்




கத்தார் பிரதமரும் உள்துறை அமைச்சருமான அதிமேதகு ஷேக் காலித் கத்தார் நாட்டின் புதிய தேசிய சின்னத்தை (செப்டம்பர் 15) கத்தார் தேசிய அருங்காட்சியகத்தில் வெளியிட்டார்.

கத்தார் அரசின் சின்னம் வரலாறு மற்றும் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டு கவனமாக ஆய்வு செய்யப்பட்டு, ஒற்றுமை உணர்வையும் நம்பிக்கையும் ஊக்குவிக்கும் வகையில் இந்தப் புதிய சின்னம் மறுவடிவமைக்கப்பட்டுள்ளது.




## புதிய தேசிய சின்னம் பற்றிய விளக்கம்:

### வாள்

பழங்காலத்திலிருந்தே தலைமுறை தலைமுறையாக வாள் நிலத்தையும் மரியாதையையும் பாதுகாக்கப் பயன்படுகிறது. மேலும் தைரியம் மற்றும் வலிமையின் அடையாளமாக இருக்கிறது. புதிய சின்னத்தில் அசல் வாளின் உருவத்திற்கு ஏற்ப மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.






### பேரீச்சை மரம்



முந்தைய சின்னத்தில் பயன்படுத்தப்பட்ட பேரீச்சை மரம் புதிய சின்னத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டிருக்கிறது. கத்தார் தலைமையும் மக்களும் பேரீச்சை மரங்களுக்கு செலுத்தும் ஆழ்ந்த ஆர்வத்தை இது குறிக்கிறது, இது தாராள மனப்பான்மையையும் குறிக்கிறது.

### கடல்



கத்தார் பாரம்பரியத்தின் மிக முக்கியமான அடையாளங்களில் இதுவும் ஒன்றாகும். கடலின் சக்தியைக் குறிக்கும் கத்தாரின் கொடியின் ஒன்பது துண்டிக்கப்பட்ட முனைகளைப் பயன்படுத்தி அலைகள் வரையப்பட்டன. கத்தார் நாடு மூன்று பக்கங்களிலும் நீர் சூழ்ந்துள்ளது, இது கத்தார் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடலின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

### படகு



கத்தார் நாட்டின் வரலாற்றில் முதல் பாரம்பரிய மோட்டார் மூலம் இயங்கும் படகு “ஃபாத் அல்-கைர்” என்று அழைக்கப்படுகிறது. இது 1900 இல் கட்டப்பட்டது மற்றும் ஷேக் ஹமத் பின் அப்துல்லா அல் தானிக்கு சொந்தமானது. படகு கடந்த காலத்தில் கத்தார் நாட்டின் பொருளாதாரத்தின் தூணாகவும் முக்கிய வருமான ஆதாரமாகவும் இருக்கிறது.

இந்த புதிய சின்னம் அனைத்து அரசு நிறுவனங்களிலும் தொடர்ந்து பயன்படுத்தப்படும். மற்றும் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பொதுமக்களிடம் கத்தார் நாட்டின் கௌரவத்தை மேம்படுத்தும்.








# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

## துணிந்தெழு நேரலை

## நிகழ்ச்சித் தொகுப்பாளராக

## அரிய வாய்ப்பு!

YouTube LIVE Sky தமிழ் - இணைந்திடுங்கள்!

0757000791




# அதிக பார்வையாளர்களை தன்வாசப்படுத்தி சாதனை படைத்த கத்தார் கால்பந்தாட்டப் போட்டி

லுசைல் சூப்பர் வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டி வெள்ளிக்கிழமை (09) லுசைல் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. எகிப்தின் ஜமாலெக் அணிக்கும் சவுதி அரேபியாவின் அல் ஹிலால் அணிக்கும் இடையான போட்டியில் சவுதி அரேபியாவின் அல் ஹிலால் அணி வெற்றிபெற்றது.

இந்த போட்டியில் 77,575 பார்வையாளர்கள் கலந்து கொண்டது கத்தாரில் அதிக மக்கள் கலந்து கொண்ட கால்பந்து போட்டிக்கான சாதனையாகும்.

கடந்த ஆண்டு கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இடையிலான FIFA அரபு வெற்றிக் கிண்ண போட்டியில் 63,439 பார்வையாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தகது.









# Katara International Hunting and Falcons Exhibition 2022

## கத்தாரின் வேது சர்வதேச Hunting மற்றும் Falcons கண்காட்சி.


இக்கண்காட்சி கட்டாராவில் (Katara) செப்டம்பர் 10 வரை நடைபெறும். கத்தார் மன்னர் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி வியாழன் இக்கண்காட்சியை பார்வையிட்டார்.

குவைத், பாகிஸ்தான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், துருக்கி, பெல்ஜியம், லெபனான், போர்ச்சுகல், ருமேனியா, பிரான்ஸ் மற்றும் ஹங்கேரி போன்ற 20 நாடுகளைச் சேர்ந்த 180 நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

ஸ்கை தமிழ் குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 23 | 22 செப்டெம்பர் 2022







# கத்தாரில் நடைபெற்ற பிரபல நிகழ்வில் மாற்றுத்திறனாளியான அர்ஜூனின் ஓவியத்திற்கு பாராட்டு


பாரிகா பைசல்

அண்மையில் நடைபெற்ற கத்தாரின் 6வது சர்வதேச Hunting and Falcons Exhibition 2022 கண்காட்சியில் பங்குபற்றிய அவர், பருந்தின் நேரடி ஓவியத்தை வரைந்ததுடன் அவரது கலைப்படைப்புகளையும் அங்கு காட்சிப்படுத்தி, அதற்கான பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். இது போன்று 2021யில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

20 வயதுடைய மாற்றுத்திறனாளியான அர்ஜூன் சுவராஜ் ஓர் ஓவியக் கலைஞர் ஆவார். ஓவியத்தில் அதிக ஆர்வம் உள்ள அவருக்கு பல அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகள் மூலம் தனது திறமையை வெளிப்படுத்த பரந்த வாய்ப்புகளை கத்தார் வழங்கியுள்ளது.

கலையில் அவருக்கு உள்ள திறமை மற்றும் அவரது திடமான நம்பிக்கை காரணமாக அவர் பங்குபற்றக்கூடிய நிகழ்வுகள் மற்றும் போட்டிகளில் பெரும்பாலும் முதல் மூன்று இடங்களுக்குள் வருவதுண்டு. அந்த வகையில், Little Art Qatar நடாத்திய ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்ட அவர் தனது பிரிவில் முதல் இடத்தை பெற்றுக் கொண்டார். மேலும் இந்த ஓவியம் கூகுள் கலாச்சார நிறுவனத்தினால் காட்சிப்படுத்தப்பட்டது.

திரைகடல் கடந்து சாதித்த தமிழர்களுக்கு மகுடம் சூட்டும் மகத்தான மேடை தமிழ்மகன் அவார்ட்ஸ் 2022 யில் இவருக்கு ஜூன் மாதம் விருது வழங்கப்பட்டது.

அவர் 2021 கத்தார் சர்வதேச கலை விழா இல் பங்குபற்றி FIFA 2022_NOW & THEN என்ற கருப்பொருளில் தனது ஓவியங்களை காட்சிப்படுத்தினார். மற்றும் UN ஆல் நிர்ணயித்த 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் என்ற கருப்பொருளில் நேரடி ஓவியம் ஒன்றை வரைந்து “வளர்ந்து வரும் இளைய கலைஞர்“ என்ற விருதையும் பெற்றார்.

அர்ஜூன், 2021 நவம்பர் Katara Cultural Village "வெளிப்பாடுகளின் சித்தரிப்பு" என்ற தலைப்பில் ஒரு தனி கலைக் கண்காட்சியை நடாத்தினார். அது பல்வேறு துறைகளிலுள்ள பிரபலங்களின் உருவப்படங்களை



சித்தரித்தது. அந்த கலைப்படைப்புக்கள் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களிடம் அதிகமான பாராட்டுகளைப் பெற்றது.


அவர் 2021 டிசம்பர் Dhow Festival மற்றும் Katara ஏற்பாடு செய்யப்பட்ட Katara Football art நேரடி ஓவியம் ஆகியவற்றில் பங்குபற்றியதுடன், 2022 ஜனவரி Katara அரேபிய குதிரை திருவிழாவில் பங்கேற்று Saddle ஓவியப் போட்டியில் இரண்டாவது இடத்தையும் பிடித்தார்.

தனது ஓய்வு நேரத்தில் ஓவியம் வரைய ஆரம்பித்த அர்ஜூனனுக்கு இப்போது, ஓவியமே அவரது வாழ்க்கையாக மாறியுள்ளது. தற்போது இவர் இஸ்லாமிய கலை அருங்காட்சியகத்தில், சிறந்த கலைஞரான திரு இஸ்மாயில் அஸ்ஸாமின் வழிகாட்டுதலின் கீழ் கலை வகுப்புகளில் கலந்து கொள்கிறார். செப்டம்பர் 26, 2022 திகதி QIAF 2022 இல் காட்சிப்படுத்தப்படும் 'FIFA 2022 - Football' என்ற கருப்பொருளின் அடிப்படையில் ஓவியங்கள் வரைவதற்கு, அர்ஜூன் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளார்.

அர்ஜூன் தற்போது கத்தாரில் வசித்து வரும் இவர் இந்தியாவின் சென்னையை சேர்ந்தவர். தந்தை திரு ராஜேஷ் ஒரு கட்டுமான நிறுவனத்தில் பணிபுரிகிறார். அம்மா திருமதி ஷோபா ராஜேஷ் கத்தாரின் ஐடியல் இந்தியன் பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிகிறார். மூத்த சகோதரர் ஆகாஷ் சுவராஜ் பெங்களூரில் பணிபுரிகிறார். இந்த குடும்பத்தில் கடைசி பிள்ளையான அர்ஜூன் சுவராஜ்.

இவர், பாடசாலையில் ஓவியத்தை ஒரு பாடமாக தெரிவு செய்து கற்றதோடு மட்டுமல்லாமல் Graphic Designing தொடர்பான சான்றிதழ் படிப்பையும் முடித்துள்ளார். இன்னும் பல சாதனை படைக்க ஸ்கை தமிழ் ஊடகம் வாழ்த்துகின்றது.













# கத்தாரின் பிரபல புகைப்பட போட்டியில் இடம்பிடித்த இலங்கை இளைஞர்!

நூருள் ஹுதா உமர்

கத்தார் சஃபாரி மால் நடாத்தும் "FRAMES SEASON 5" புகைப்பட போட்டியில் இலங்கை சாய்ந்தமருதை சேர்ந்த இளைஞர் ஜே. எம். பாஸிதின் புகைப்படமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவர் சிறு வயதில் இருந்து டிஜிட்டல் மற்றும் புகைப்பட துறையில் ஆர்வம் கொண்டவர். இவர் பல போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளார். இப் புகைப்பட போட்டியில் சுமார் 500க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதில் தெரிவு செய்யப்பட்ட முப்பது புகைப்படங்களை அபு ஹமூரில் உள்ள சஃபாரி மாலில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மூன்று வெற்றியாளர்கள் தெரிவு இந்த கண்காட்சியில் மக்களினால் புகைப்படங்களுக்கு வாக்களித்து மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். முதலாவது வெற்றியாளருக்கு 3000 ரியால், இரண்டாவது வெற்றியாளருக்கு 2000 ரியால், மூன்றாவது வெற்றியாளருக்கு 1000 ரியால் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் என இரண்டு பிரிவுகளில் பரிசு வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



Wonderful views of the Inland Sea and the Saudi Border





# திசை மாறிய கப்பல்



ஜஸ்ரா ஜலீல்

இருண்ட பூமிக்கு வெளிச்சம் பரப்பிட காலைக்கதிரவன் தன் தோகை விரித்து ஒளி பரப்பிட மெதுவாக இருள் பூமியை விட்டு அகன்று பிரகாசித்தது பச்சை பசேல் என்று சிறு கிராமம் அது. சலங்கை ஓசையோடு ஆறுகள் ஓடிக் கொண்டு இருக்கும் அழகிய கிராமம். அங்கே வயல்களுக்கு அருகாமையில் சிறு ஓலைக் குடிசை ஒன்று அழகாய் வீற்றிருந்து. அதற்கு பக்கத்தில் மலை கம்பீரமாய் நின்றது. இந்த குடிலில் அப்பா ராஜ் அவர் ஒரு கூலி வேலைகள் செய்யும் ஏழை மனிதர். நல்ல பண்புடையவர் அவருக்கு இருந்தாள் சுண்டி இழுத்து வசியம் செய்யும் அழகு தேவதை மகள் ரதிப்பிரியா.அவள் அழகை சொல்ல வார்தைகள் பத்தவில்லை. அவ்வளவு அழகு! அவளை விடவும் அவளது முடி அடர்த்தியாக கரு கருவென்று இருக்கும். மான் விழிகளை கொண்டவள். அவள் பாதையில் சென்றால் திரும்பி பார்க்காதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

அவ்வளவு அழகு! இவளே எங்கள் கதாநாயகி. இவளுக்கு அம்மா இல்லை அப்பாதான் எல்லாமே. அப்பாவை விட்டால் இவளுக்கு உலகமே இல்லை. நன்றாக படிக்கக் கூடியவள். அப்பாவின் கஷ்டங்களை பார்த்து வளர்ந்ததாலோ என்னவோ அதிகம் பொறுமைசாலியாக இருந்தாள்.எல்லோருடனும் சிரித்துக் கொண்டே கதைப்பாள் அவளின் நல்ல மனதுக்கே அனைவரும் அவளோடு பாசமாக பழகுவார்கள். காலை எழுந்தவள் அப்பா ஊற்றி வைத்த காபியை குடித்துவிட்டு தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிவிட்டு வருவாள். அப்பா அவளுக்கு உணவுகளை தயாரித்து வைத்து இருந்தார். ‘அப்பா நீ எவ்வளவு சொன்னாலும் கேட்கவே மாட்டியா காபி குடிக்காம வேலை செய்ய கூடாதுன்டா கேட்கவே மாட்டே’ என்று சொல்லவும் ‘இல்லடா கண்ணு கோவப்படாதே நான் உணவு பொதிய உனக்கு தயார் பண்ணிட்டு மெதுவா குடிக்கிறேன் சரியா நீ போய் பாடசாலைக்கு தயார் ஆகு’ என்று சொல்லவும், ‘நீ இப்படியே சொல்லி என்ன சமாளித்திட்டு இரு’ என்று சொல்லவும் அவள் நண்பி அனுஷ்கா அவளை அழைக்கவும் சரியாக இருந்தது. தந்தையை முறைத்து கொண்டே அவசர அவசரமாக தயாராகி பாடசாலைக்கு நண்பியோடு புறப்பட்டாள். இருவரும் பாடசாலை சென்று சேரும் வரை கதைத்து கொண்டே சென்றார்கள். இவள் இங்கே செல்ல கதாநாயகனை பற்றி பார்த்துவிட்டு வருவோம்.

அவனது பெயர் ரிஷி. அவன் ஓர் ஆண் அழகன் கம்பீரமானவன் கண் ஜாடையாலே அனைத்தையும் முடிக்கும் வல்லமை கொண்டவன் அவனால் மயங்காத மங்கைகளே இருக்காது வசீகரிக்கும் மன்மதன் பல கோடிகளுக்கு சொந்தக்காரன். அப்பா கார்த்தி பத்து பதினைந்து தொழிற்சாலைகளின் முதலாளி. அம்மாவும் கணவனுக்கு சலிக்காது பணம் படைத்தவர். அவனது அக்கா வைத்தியர். அவர் திருமணம் செய்தவர் ஒரு வைத்தியர். இருவரும் நான்கு ஐந்து வைத்தியசாலைகளை நடத்துபவர்கள். வீடு முழுவதும் வேலைக்காரர்கள். அதனால் என்னவோ அவனுக்கு எப்போதும் திமிர் அதிகம்தான். கார் சாவியை சுழற்றிய வண்ணம் லிப்டில் இருந்து வரும் மகனின் அழகை ரசித்துக் கொண்டே லட்சுமி ‘அப்பா! என் பிள்ளைக்கு ஏன் கண்ணே பட்டுரும் போல இருக்கே’ என்று சொல்லிக் கொண்டே நெட்டி முறித்தாள். ‘அவன நீ பார்த்து பார்த்து இருந்தால் போதாது அவசரமா கலியாணத்த முடித்து வைக்கப்பாரு’ என்று கார்த்தி சொல்லவும், ‘என்னதான் செய்ய பார்க்கிற எல்லாரையும் வேணாம்டு சொல்லிட்டு இருக்கிறான்’ என்று சொல்லவும் ‘அவன் வேணாம்டுதான் சொல்லுவான் நீதான் அவன விருப்பப்படுத்த வேண்டும்’ என்று சொல்லவும் ‘நானும் சொல்றன்தான் ஆனால் அவன் மறுக்கும் போது என்னால எப்படி பேச முடியும்’ என்று சொல்லவும் ‘நான் இன்றைக்கு முடிவு எடுக்குறேனே’ என்று கார்த்திக் கூறிக் கொண்டே ஒபிசுக்கு செல்ல சென்றார்.

கார்த்திக்கின் வார்த்தையை வீட்டில் யாரும் தட்டியதில்லை. அவர் முடிவு எடுத்தால் அதை நடத்தியே தீர்பவர். அவர் அப்படி சொல்லவும் லட்சுமியும் மறு பேச்சு பேசவில்லை. ‘அம்மா அவசரமா நான் போக வேண்டும் அவசரமா சாப்பாடை எடுத்து வைமா’ என்று சொல்லிக் கொண்டு அவன் வரவும் சாப்பாடை அவனுக்கு பரிமாறிவிட்டு அவனை உண்ணவைத்து

அவன் ஆபிஸ் போகும் வரை பார்த்து கொண்டு இருந்தாள் லட்சுமி. பாடசாலைக்கு சென்ற ரதிப்பிரியா 'என்னடி இன்று பரீட்சைக்கான புள்ளிகள் தருவாக' என்று சொல்லவும் அனுஷ்கா 'அதுதான் தெரியுமே எப்படியும் நீதான் முதலாவது வருவே நான் கடைசியில் இருந்து பார்த்தா முதலாவது வருவேண்டு' என்று சொல்லவும் ரதி கலகல வென்று சிரித்தாள் அவள் சிரிப்பை ரசித்துக் கொண்டே 'ஏண்டி இவ்வளவு அழகா பிறந்தாய்' என்று சொல்லி அவள் கன்னத்தை கிள்ளி விட்டு 'நீ எப்போதும் இதே போல சிரித்து கொண்டே இருக்க வேண்டும். ஓகே?' என்றாள்.'நீ என்னோடு இருந்தா இப்படிதான் சிரிச்சிட்டே இருப்பேன்' என்றதும் அனுஷ்கா 'நான் ஒன்னவிட்டு எங்க போக ஒன்னோடேதான் வால் போல் இருப்பேன்' என்று சொல்லிக் கொண்டு வகுப்பறையை நோக்கி சென்றனர். இருவரும் இன்று பரீட்சைக்கான பெறுபேறுகள் கொடுப்பதால் பாடங்கள் ஏதும் நடக்கவில்லை. அவர்களின் வகுப்பாசிரியை வகுப்புக்குள் நுழையவும், அனைவரும் அமைதியாக இருந்தனர்.

ஆசிரியர் பேறுபேறுகளை அனைவருக்கும் கொடுத்து அதில் அதிக புள்ளிகளை பெற்ற ரதிப்பிரியாவை அழைத்து பரிசுப் பொருட்களையும் கொடுத்துவிட்டு ரதியை போல எல்லாரும் நன்றாக படிக்க வேண்டும் என்று செல்லி அவளை உற்சாகம் ஊட்டும் வகையில் அனைவரும் அவளுக்காக கைகளை தட்டுங்கள் என்றதும் அனைவரின் கரகோஷமும் பலத்த சத்தத்தோடு ஒலித்தது.அவளுக்கு சந்தோசத்தில் கண்ணீரே வந்துவிட்டது. தந்தையிடம் போய் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டு பாடசாலை விட்டதும் பரிசுப் பொருட்களோடு வீடு நோக்கி வந்தாள்.

ரதிப்பிரியா அப்பா வழமைக்கு மாறாக ஆனந்தத்தோடு அவளை வரவேற்கவும் வீட்டில் புது வாசனை திரவியத்தின் வாசம் வரவும் 'அப்பா என்ன இன்று ஒருநாளும் இல்லாததை போல் ஆனந்தத்தோடு இருக்குறீங்க வீட்டுல வாசனை எல்லாம் தூக்கலா இருக்குதே எப்படி' என்று கேட்கவும் 'அது உனக்கு பொறுமையா சொல்லுறன்டா கண்ணு' என்று சொல்லவும் 'அதல்லாம் பொறுமையா சொல்ல வேண்டாம் இப்போதே சொல்லுங்கள்' என்று சொல்லவும் 'கண்ணு நீ மொதல்ல போய் கை கால் அலம்பிட்டு வா சாப்புட' என்று அப்பா கூறவும் 'ஏதோ நடந்திருக்கு' என்று சொல்லிவிட்டு 'நான் வழமை போல் வகுப்பில் முதலாவது வந்தேன் எனக்கு ஆசிரியர் பரிசு பொருள் எல்லாம் கொடுத்தாங்க 'என்று எல்லாத்தையும் பிரித்து காட்டவும் மகளின் திறமையை கண்டு மகிழ்ச்சியால் அணைத்துக் கொண்டார். 'கண்ணு இதே போல எப்போதும் முன்னேற வேண்டும் சரியா' என்று அவளது தலையை தடவி சொல்லவும் 'கண்டிப்பாக எடுப்பேன் பா' என்று சொல்லிவிட்டு ஆடைகளை மாற்றிக் கொண்டு கை கால் அலம்பிவிட்டு இருவரும் சேர்ந்தே சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடித்தும் ராஜ் வேலைக்கு போகவும் இவள் வீட்டு வேலைகளை செய்துவிட்டு பாடசாலை வேலைகளையும் செய்துவிட்டு இரவில் அப்பாவுக்காய் காத்து நின்றாள்.

'என்ன அப்பா சொல்ல வந்தாரு ஏன் சொல்லாம போனாரு அப்பா வந்ததும் கேட்காம தூங்கவே கூடாது' என்று நினைத்துக் கொண்டாள். அப்பா வாசலில் வரும் சப்தம் கேட்டு ஓடிப்போய் கதவை திறந்தாள்.'கண்ணு இந்தா நீ பரீட்சையில் முதல் மாணவியா வந்தற்கு அப்பாட குட்டி பரிசு' என்று அவளுக்கு பிடித்த மிட்டாய்களை கொண்டு வந்து கொடுத்தார். அதனை கையில் ஏந்தியவள் நீங்க வாங்க சாப்பிடுவோம் என்று கூறிவிட்டு அப்பாவும் மகளும் உண்டுவிட்டு திண்ணையில் இருவரும் போய் அமர்ந்து கொண்டனர். அப்போது ராஜ், 'ரதி கண்ணு உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும் அதனை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும் அப்பாவுக்காக ஏற்றுக் கொள்வேன் என்று சத்தியம் பண்ணிக் கொடு' என்றதும் 'அப்பா நான் உன் புள்ளபா நீ என்ன சொன்னாலும் நான் கேட்டு கொள்ளுவேண்டு உனக்கு தெரியாது உனக்காக நான் உயிர கூட தருவன் அப்பா' என்றதும் அவளை வாரி அணைத்துக் கொண்டார்.

'எனக்கு தெரியும்தான் கண்ணு ஆனாலும் இந்த விடயத்துல சொல்லி கொள்ள வேண்டும் என்று தோன்றினதாலே சொல்லிக் கொண்டேன் அவ்வளவே' என்று சொல்லிவிட்டு அவளின் கையை தனது கைகள் வைத்துக் கொண்டு 'ரதி கண்ணு இன்று எனது நண்பர் கார்த்திக் வந்தாரு. அவருடைய தேயில தொழிற்சாலையை பார்க்க வந்ததோட என்னையும் பார்க்க வந்தாரு. அப்போது அவர் என்னிடம் உன்னை ரிஷிக்கு மணம் முடிக்க பெண் கேட்டாரு" என்றதும் "அப்பா!" என்றாள் ரதி. 'கேளுடா கண்ணு நானும் உன்னை போல்தான் ஆச்சரியமாய் கேட்டேன். அதற்கு அவர் நான் பொய் சொல்லவில்லை உண்மையாகத்தான் கேட்கிறேன் எனது மகனுக்கு உன் மகளை தரவேண்டும் என்று சொல்லவும் நான் சொன்னேன் இது சரிவராது நீ எவ்வளவு பணக்காரன் நான் ஏழை என்று உனக்கு தெரியும்தானே அத்துடன் எனது மகள் இப்போதுதான் சின்ன பிள்ளை. படிக்கிறாள். இது வேண்டாம் என்று சொல்லவும் அவர் அப்போ நீ என்னை வேறாகத்தான் பார்கிராய் என்று அவர் சொல்லவும் என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை ரதி கண்ணு நான் எவ்வளவோ எடுத்து பேசியும் அவர் அப்படி கூறவும் என்னால் பேச முடியவில்லை நானும் விருப்பம் என்று வாக்களித்து விட்டேன்.

அத்தோடு எல்லாம் பேசி முடிவாகி விட்டது. கண்ணு இன்னும் இரண்டு வாரத்தில் கலியாணத்தை முடிக்க எல்லாம் பேசி முடிவாகி விட்டது. அத்தோடு அவர் சொன்னாரு உன்னையும் படிக்க வைப்பாங்களாம் ராணி போல் பார்த்து கொள்ளுவாங்களாம் என்று சொன்னாரு. கண்ணு எனக்கு இதுக்குமிச்சம் என்ன வேண்டும் அதனால் நானும் விருப்பத்தை கொடுத்து விட்டேன் கண்ணு' என்று சொல்லவும் தலையில் பாராங்கல் ஒன்றை வைத்தது போல் துடிதுடித்துப் போனாள்.அவளால் அப்பாவின் பேச்சை மீறி எந்த ஒன்றும் பேசமுடியவில்லை. 'அப்பா என்னால உன்னவிட்டு எங்கேயும் போக மாட்டேன் உன்னவிட்டு நான் எப்படி இருப்பேன் சொல்லு' என்று கண்கள் கண்ணீர் மல்க கேட்கவும் 'கண்ணு நான் ஒன்ன வந்து பார்த்து கொள்வேண்டா கண்ணு நீ ஒன்று கவல பட தேவையில்லை நீ அங்க மாளிகையில் ராணி போல வாழ்றத நான் பார்க்க வேண்டும் கண்ணு நீ சந்தோசமா இருந்தா எனக்கும் சந்தோசம்தானே கண்ணு நீ கண்ணு கலங்காம இருக்க வேண்டும். அப்போதானே அப்பாவுக்கும் மகிழ்ச்சி.' என்று அவளை தேற்றிவிட்டு

இப்போ போய் தூங்கு கண்ணு என்று அவளை தூங்க அனுப்பினார். அவளது அறையில் பாயை விரித்து தூங்க சென்றவளுக்கு தொண்டை அடைத்து கண்களில் கண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து அப்பா அறியா வண்ணம் அழுகையோடு உறங்கிவிட்டாள்.

கார்த்திக் இங்கே எல்லாம் முடிவு எடுத்துக் கொண்டு தனது குடும்பத்திடம் தான் எடுத்த முடிவை கூற குடும்பத்தில் உள்ளவர்களை கூப்பிட்டு பக்குவமாய் சொல்லவும். ரிஷி டாட் எனக்கு இதில் இஷ்டம் இல்லை என்று சொல்லவும் நீ அவளைதான் திருமணம் முடித்து ஆக வேண்டும் என்று உறுதியாக சொல்லிவிட்டார். அவனுக்கோ கோபம் தலைக்கு மேல் வந்து ஆட்டம் போட்டும் இவரின் பேச்சுக்கு முன் எல்லாமே முற்றுப் பெற்றது அவனோ கோபத்தில் காரை எடுத்துக் கொண்டு வெளியில் சென்றுவிட்டான். அப்பா ஒரு அடி பாய்ந்தால் மகன் நூறடி பாய்வான் தொழிலில். ஆனாலும் இந்தவிடயத்தில் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை இவ்வாறே இருவரின் திருமண நாளும் வந்து ரிஷிக்கு விருப்பமே இல்லாமல் மண்டபத்திற்கு கம்பீர நடையோடும் அழகு மன்மதனாய் பார்ப்போரை கவர்ந்து இழுக்கும் மணக்கோலத்திலே வந்தான். இங்கே மணக் கோலத்தில் வானத்தில் இருந்து இறங்கிய அழகு தேவதை போல் ரதி அச்சத்தோடும் மனதில் அப்பாவை பிரியப்போகும் கவலையோடும் மேடைக்கு வரவும் அவளின் அழகில் மயங்கி அனைவரும் கண் வெட்டாமல் அவளையே பார்த்தனர் இருவரின் ஜோடி பொருத்தத்தை பார்த்து ஊரே வாய் பிளந்து பார்க்க ஆரம்பித்தனர். ஆனால் ரிஷியோ அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ரதியோ குனிந்த தலை நேராகமல் நடுங்கும் கைகளை இறுக பிடித்துக் கொண்டு நின்றாள் .


இவ்வாறே இனிதே திருமணம் நடைபெற்று முடிந்தது. மணமக்களை காரில் ஏற்றி ரிஷியின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவளுக்கோ மனதில் பல போராட்டத்தோடு சிந்தித்த வண்ணமே வீட்டை வந்து அடைந்தனர். காரை விட்டு இறங்கியதும் அவள் யாரோ நான் யாரோ என்றது போல் அவன் அவளை விட்டு விட்டு விறு விறு என்று சென்றுவிட்டான். அவள் அப்போதுதான் தலையை நிமிர்ந்து வீட்டை பார்த்தாள். அவள் வாழ்வில் இவ்வாறான ஒரு மாளிகையை அவள் கண்டதே இல்லை. அவ்வளவு பெரிய மாளிகை. அதை கண்டதும் ஆச்சரியத்தில் அதையே பார்த்து நின்றாள். அவளுக்கு பின்னால் வந்து அண்ணி என்ற குரலை கேட்கவும் மெதுவாக திரும்பி பார்த்தாள் அங்கே ரிஷியின் அக்கா சாலினி நிற்கவும் இவள் அவளை பார்த்து மெதுவாக சிரித்தாள்.அவளோ சிரிக்காது வீட்டுக்கு உள்ள வாங்க என்று மட்டும் சொல்லிவிட்டு அவளை அழைத்துக் கொண்டு சென்றாள்.

அவளும் பேசாமல் அளை பின் தொடந்து செல்லவும் கார்த்திக் வாம்மா ரதி என்று வரவேற்றார்.அத்தோடு சேர்ந்து லட்சுமியும் அவளை அன்போடு வர வேற்றால் அவளும் பயத்துடனே மெதுவாக நின்றாள்.ரதிமா நீ களைப்பாக இருப்ப உன் அறைக்கு சென்று ஓய்வு எடு என்று அவளை அழைத்துக் கொண்டு அறையை நோக்கி சென்றாள் லட்சுமி. அவரை பின் தொடர்ந்து ரதியும் செல்லவே அறை வந்ததும் ரிஷி கதவை திற என்று அழைத்தும் அவன் ஒன்றும் பேசவில்லை. அவரே கதவை திறந்து கொடுத்து உள்ளே போ என்றுவிட்டு அவர் செல்லவும் தயக்கத்தோடும் அச்சத்தோடும் மெல்ல நடை போட்டு செல்லவும் அவன் அவளை ஏறெடுத்தும் பார்க்காது ஏய் நில்லு என்று கத்தவும் பயத்தில் நடுங்கி கொண்டு நின்றாள்.'இங்க பாரு ஒன்னோட சில விடயங்கள் பேசவேண்டும்' என்று சொல்லிவிட்டு 'உன்ன எனக்கு சுத்தமாவே புடிக்கல்ல எவ்வளவோ நான் டாட்ட சொல்லியும் ஒன்றுமே இல்லாத உன்ன எனக்கு கட்டி வைத்துவிட்டாரு சரி நான்தான் வேண்டும் இவரு இப்படி செய்றாரென்டு பார்த்தா நீயும் உன்னுடைய அப்பாவும் பணத்திக்கு ஆசப்பட்டு படிப்பகூட தொடராம ஓடி வந்து விருப்பம் சொல்லிடீங்களே என்னா ஒரு கேவலமான செயல்ன்டு எனக்கு சொல்ல வார்த்தையே வரவில்லை' என்று கத்திக் கூச்சலிட்டான். அவனது கோபம் அனைத்தையும் அவள் மேல் கொட்டி தீர்த்து விட்டான். இதனை கேட்ட ரதிக்கு அவமானம் ஒரு புறம். அவன் மேல் அச்சம் ஒருபுறம். அவளுக்கு உடல் நடுங்க கூனிக் குறுகி தலை குனிந்து நின்றாள்.பாவம் அவள் இதுவரை அவளை யாரும் இப்படி ஏசியதில்லை. சத்தமாக பேசியதும் இல்லை. அதனால் என்னவோ பயத்தில் நடுக்கத்தோடு நின்றாள்.'இங்க பார் நீ குடில்ல வாழ்ந்தவள் தானே உனக்கு சொகுசு மெத்தையெல்லாம் தேவை படாது என்று நினைக்கிறேன்.

போய் கீழே தூங்கே அதோடு எனக்கு தேவையான அனைத்து வேலையும் நீதான் பார்க்க வேண்டும். வேலக்காரிய நீ ஏவக்கூடாது உன்னுடைய கையாலே துணிகளை துவைக்க வேண்டும். எல்லா வேலைகளையும் உன் கையாலே செய்ய வேண்டும். இது என் டாடுக்கு தெரியக்கூடாது தெரிந்தது என்ன நடக்கும்டு எனக்கே தெரியாது ஓகே மைன்ட் இட்!' என்று கோர்வையாக பேசி முடித்தான். அவளும் பயத்தில் கண்ணீரோடு தலையை மட்டும் ஆட்டி வைத்தால் போ போய் கீழே தூங்கு என்றுவிட்டு அவன் போய் தூங்க சென்றுவிட்டான்.

அந்த அறையோ கண்ணுக்கு எட்டிய தூரம் விசாலமான் பெரிய அறையாக இருந்தது.ஒரு சிறு வீட்டின் முழு வீட்டின் அளவு அந்த அறையின் விசாலம் இருந்தது. அவளோ பாய் தலையனை ஒன்றுமே கொண்டுவராததால் எப்படி தூங்க என்றே தெரியாமல் அவளது பெட்டியை மெதுவாக திறந்து அவளது போர்வையை எடுத்துக் கொண்டு அவளது சில ஆடைகளை எடுத்து தலையணை போல் செய்து மற்ற ஆடைகளால் தன்னை போர்த்திக் கொண்டு உறங்க சென்றாள்.ஆனால் அவளால் உறங்க முடியவில்லை அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் ஊசியால் மனதை தைப்பது போன்று தைத்தது அப்பா ஏன்பா நீ என்ன கொடுத்தாய் இதுவரை நாளும் அவள் ஏழையாக பிறந்ததை எண்ணி வருத்தப்பட்டதே இல்லை முதல் தடவையாக ஏன் ஏழையா பிறந்தது தப்பா என்று தன்னையே நொந்து கொண்டாள். அவளால் அழமட்டுமே முடிந்தது இப்படியே வீட்டுக்கு போய்விடலாமா என்று எண்ணியவளுக்கு அப்பாவின் உபதேசம் நினைவுக்கு வந்தது கண்ணு நீ போக போறது பெரிய இடம் அவர்கள் என்ன செய்தாலும் பொறுமையாக இருக்க வேண்டும் அப்பாவின் வளர்ப்பை குற்றம் சொல்லாமல் பாதுகாத்துக் கொள் நீ அப்படி நடக்கக்கூடியவள் என்று எனக்கு தெரியும்.

தொடரும்........






# ஏ.பி.எம் இத்ரீஸ் பேசும்
# குடிமைச் சமூகத்தை வலுவூட்டல்

நியாஸ் பாரீட் (சிராஜி )

இலங்கையில் உள்ள சிறுபான்மை முஸ்லிம்களின் இடையில் குறிப்பிட்ட சில மனிதர்களால் மாத்திரம் மிகவும் விரும்ப படும் தவிர்க்க முடியாத ஆளுமையும் சிந்தனையாளருமான எ பி ம் இத்ரீஸ் பேசும் அரசியல், இஸ்லாம் போன்றவை தற்காலத்துக்கான ஒன்றாகும், பெரிய சிந்தனையாளர்கள் என தன்னை ஒரு இயக்கத்தினூடகே விளம்பர படுத்திக்கொள்ளும் குல்லாக்களின் மத்தியில், இவரது எழுத்துக்கள் சிறுபான்மை மக்களோடு அல்லது குறிப்பிட்ட ஒரு மத கருத்தோடு நின்றுவிடவில்லை.அரசியல் என்றும் நம்மால் நிராகரிக்கப்படும் ஒன்றாகவும் அதை பேசுபவன் வேறு சிந்தனையாளன் போன்ற விம்பங்களை உடைத்து அது நமது அன்றாட வாழ்வில் கலந்துள்ளது , கல்வியில் கூட அரசியல் எவ்வாறு ஆதிக்கம் செலுத்தும் என்பதற்கு அவரே ஓர் உதாரணம்.

மாற்றுக் கருத்து வெளியிடுபவனை எதிரியாகக் கணிக்கின்றோம். இதனால் ஒரு இஜ்திஹாத் முடிவை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒரு நூற்றாண்டை சும்மா கடத்தியிருக்கின்றோம். அடுத்த நூற்றாண்டையும் அப்படிக்கடத்துவது சாத்தியமா? நமது இருப்புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும் போது அரசியல் பற்றிச் சிந்திக்காமலிருக்க முடியுமா? அரசியல் எனக்குப் பிடிக்கும் என்று எந்தப் புத்திஜீவியின் வாயிலிருந்தாவது வருகிறதா? அது ஒரு சாக்கடை என்று கூறுவதன் மூலம் அரசியல் அற்றவர்களாக நாம் மாற்றப்பட்டுக் கொண்டிருப்பது நமக்குப் புரியவில்லையா? அப்படி நம்மை அரசியல் நீக்கம் செய்வதனூடாக அதிகார வர்க்கங்கள் தொடர்ந்தும் கதிரைகளில் இருந்தே வருகின்றனர். ஒவ்வொரு கல்வித் திட்டத்திற்குப் பின்னாலும் ஓர் அரசியல் இருக்கின்றது. ஆனால் கல்வித் துறையில் அரசியல் கலக்கக்கூடாது என்ற மனப்பாங்கே இங்கு இன்னும் நிலவுகின்றது. ஆக நுண் அரசியல்களையும் நுண் அதிகாரங்களையும் ஒழுங்கவிழ்த்துப் பார்ப்பதனூடாக நாம் நமது விடுதலைக்கான சாத்தியங்களை எட்டலாம் .

முஸ்லீம் பண்பாட்டை அதன் வரலாற்று வழியாகவும் இன்றய சூழலில் அது எதிர் கொள்ளும் நெருக்கடியில் இருந்தும் புரிய வைக்கிறார் ,19ம் நூற்றான்டின் இறுதியில் ஐரோப்பியப் பண்பாட்டுப் பட்டையாடுப்பை எதிர்க்கும் நோக்குடன் முஸ்லிம் பண்பாடு தன முகத்தை இறுக்கிக் கொண்டுவிட்டது இக்காலத்தில் உருவாக்கி வந்த தூய்மைவாதிகள் அல்லது முஸ்லிம் கடும் போக்கர்களால் மாறாதே அசையாத கட்டுமானமாக சித்தரிக்க முற்பட்டனர்.

மதத்தை ஆதிக்க சக்திகள் தமது ஆதிக்கத்தை காப்பாற்றவும், பராமரிக்கவும் நீட்டிக்கவும் பயன்படுத்துவது காலங்காலமாக நடந்து வருவதே. ஆனால் மக்களுக்கு அது மார்க்ஸ் கூறியது போல ஒரு புறத்தில் அபினாகவும் மறுபுறத்தில் இதயமற்ற உலகின் இதயமாக இருக்கின்றது. சோனகம் பற்றி பேசிய அறிஞர்களில் இவரை முதலில் வைக்க முடியும், இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தனது கலாச்சாரம் என்ன? மதம் என்ன? புரிதல் இன்றி வாழும் சூழல் குறித்த தெளிவை பேசும் சோனக தேசம் மிக சுருக்கமான கண்ணோட்டத்தில் விளக்குகிறார்.

ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான உரையாடல் அதை வலுவூட்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையும் உள்ளது, எழுத்து வடிவில் வரும் எல்லாப் படைப்புகளையும் விட நேர்காணல்கள் தனித்தன்மை வாய்ந்தவை - படைப்பு வடிவத்திற்குள் இயங்குபவர்களிடமிருந்து அவ்வடிவங்களுக்கு அப்பாற்பட்ட உளப்பிரதிபலிப்புகளை சிறந்ததொரு நேர்காணலில் பெற்றிடமுடியும். சிவில் (குடிமைச்) சமூகத்தை

வலுவூட்டல் எனும் இவரது நூலில் ஜனநாயகம் குறித்த தெளிவற்ற கருத்தியலில் இருப்போருக்கானே தெளிவு உரையாடலாக தொகுக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சூழலில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை, செல்நெறிகளை கருத்திற் கொண்டு சில தேவை நோக்கங்களுக்காகவும் இந்நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டியிருக்கிறது. அறிவை விவாதிப்பதும் அதன் ஊடாக புதிய சிந்தனைத் தளங்களை நோக்கி நகர்வதும் செயற்படுவதும் தான் எமது நோக்கமாகும். அந்த வகையில் இலங்கையில் உள்ளூராட்சி தேர்தல் நடந்துமுடிந்த கையோடு இதனை நடாத்துவது பொருத்தமாகவும் இருந்தது. இது ஜனநாயகத்தை முஸ்லிம் சமூகத்திற்குள் பரப்புவதற்கான ஒரு கூட்டமோ, உரையாடலோ அல்ல என்பதை தாங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கையில் படிப்படியாக நலிவடைந்து கொண்டு வருகின்ற சிவில் (குடிமைச்) சமூகத்தை வலுவூட்டுவதற்காக மேற்படி உரையாடலுக்கு தலைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டன. அதில் ஜனநாயகம் பிரதான பேசுபொருளாக அமைந்திருக்கவில்லை. நாம் நடாத்தும் ஒவ்வொரு உரையாடலையும் பதிவு செய்தும் அவற்றை எழுத்துருப்படுத்தியும் வருகின்றோம். இவை நூலாக வெளிவரும்போது பரந்த வாசகப் பரப்பை சென்றடையும். எனவே எமது உரையாடல் அரங்கு சிவில் சமூகம், அதன் பலம், பலவீனம், அதனை மேம்படுத்தல், வலுவூட்டலுக்கான ஆலோசனைகள் பற்றியதாகவே அமைந்திருந்தன.

ஜனநாயகம் உண்மையில் குப்ரானது, அது இஸ்லாமியமும் அல்ல. அப்படி இருக்கும் போது ஜனநாயகத்தை முன்னெடுப்பதால் நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள்?. ஜனநாயகம் குப்ர் என்பதற்கு இஸ்லாத்தின் அதிகார பிரதிகளிலிருந்து ஆதாரமாக எதனை முன்வைக்கிறீர்கள்? ஜனநாயகத்தைப் பின்பற்றும் மத்திய கிழக்கு முஸ்லிம் நாடுகள், ஆசிய முஸ்லிம் நாடுகள் அனைத்தும் குப்ரில் வாழ்கிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? அல்லது ஜனநாயகம் குப்ரானது என்பதை தங்களுக்கு உருவாக்கி அளிக்கும் மனநிலையாது? தாங்கள் எந்தப் பின்புலத்திலிருந்து கொண்டு இந்த மனநிலைக்கு வந்து சேர்ந்துள்ளீர்கள்? இதேபோன்ற எடுத்ததை எல்லாம் குப்ர், ஜாஹிலிய்யத், ஹராம் என்று உதறித்தள்ளுகின்ற மனோபாவம் இலங்கையில் இஸ்லாமிய இயக்கங்களின் வருகைக்குப் பின்னால் ஏற்பட்டுள்ளது.

எண்பதுகளின் பிற்பகுதியிலும் தொண்ணூறுகளின் ஆரம்பத்திலும் இலங்கை முஸ்லிம்களை காபிர் என்று கூறிக் கொண்டு தங்களைத் தாங்களே அமீராகவும் கலீபாவாகவும் பிரகடனப்படுத்திக் கொண்டு குறிப்பிட்ட சில கிராமங்களில் இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமிய கிராமம் என்ற கோதாவில் இறங்கி பின்னர் நீர்த்துப் போய் இன்று முஸ்லிம் பிரதேசங்களில் சிறு குழுவாகச் சுருங்கி பள்ளிவாயல்களை மட்டும் தமது அதிகார எல்லைகளாக வைத்துள்ள சம்பவங்கள் தான் நிழலாடுகின்றன.

மனித சமூகங்கள் அல்லது மேலைத்தேய சமூகங்கள், அறிவுஜீவிகள் உருவாக்கித் தருகின்ற அனைத்து சிந்தனைகளும் கோட்பாடுகளும் குப்ரானவை, ஹராமானவை, ஜாஹிலிய்யத்தானவை என்று முத்திரை குத்தி புறமொதுக்குகின்ற மனோபாவம் ஆரோக்கியமானதல்ல. குறிப்பிட்ட பண்டங்கள், பொருட்கள் போன்றவற்றுக்கு இந்த பத்துவாக்கள் அல்லது மார்க்கத் தீர்ப்புக்கள் சரியாக இருக்கலாம். ஆனால் அறிவு, சிந்தனை என்பவற்றை அப்படி எடுத்த எடுப்பிலேயே ஒற்றைப் படையான, தட்டையான புரிதலை மட்டும் வைத்துக் கொண்டு தூக்கி வீசிவிட முடியாது. அறிவு வளர்ந்து செல்லக்கூடியது அதேநேரம் நெகிழ்ச்சித்தன்மை கொண்டது. அழிவின் விளிம்பிலிருந்த கிரேக்க மற்றும் ரோம, பாரசீக அறிவுச் செல்வங்களை மீட்டெடுத்தவர்களும் முஸ்லிம்களே. அதை அவர்கள் மறுவாசிப்புச் செய்து புதிய உள்ளீடுகளைச் சேர்த்து ஐரோப்பாவுக்கு வழங்கிய வரலாற்றை இன்றைய மேற்கு புத்திஜீவிகளே மனமொப்பி ஏற்றுக் கொள்கின்றனர்.




ஜனநாயகம் ஒரு நிமிடத்துக்குள் வானத்திலிருந்து குதித்த ஒரு கோட்பாடு அல்ல. பழங்குடி, கோத்திர, நிலச்சுவாந்தர், மன்னராட்சி சமூகங்களிலிருந்த சுரண்டல், அடக்குமுறை, அடிமைத்துவம் போன்றவற்றுக்கு எதிராக மனிதன் நீண்டகாலமாக போராடி, இரத்தம் சிந்தி அடைந்த வெற்றியின் அடையாளமாகும். இரத்தம் சிந்தியதற்காக ஒரு கோட்பாடு உயர்ந்ததாக ஆகிவிடவும் மாட்டாது. ஆனால் எல்லாக் கொள்கைகளுக்கும் அல்லது மனித சிந்தனைகளுக்கும் இரண்டு பக்கங்களும் உள்ளன. ஒரு கருத்தை அல்லது சிந்தனையை ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் இருக்கின்றது. எந்தவொரு கருத்தும் முற்றுமுழுதாக சரியானதுமல்ல. முற்றுமுழுதாக பிழையானதுமல்ல. ஒரு குறிப்பிட்ட கருத்து ஒரு குறிப்பிட்ட சமூக சூழலில் பொருத்தமானதாக இருந்திருக்க முடியும். அது எல்லா சூழலிலும் எல்லோருக்கும் பொருந்தி வரும் எனக்கூறவும் முடியாது. ஒரு கருத்தின் போதாமையும் வெற்றிடமும் தான் இன்னொரு கருத்தைத் தோற்றுவிக்கின்றது. ஒரு சமூகம் தேக்கமுற்று இறுகிய நிலைக்குச் செல்லும் போது அச்சமூகத்தினுள் கட்டுடைப்புச் சிந்தனைகளும் மாற்றுக் கருத்துக்களும் தோற்றம் பெறுகின்றன.


இவ்வாறுதான் வரலாற்றில் சமூகங்கள் இயங்கி வந்துள்ளன. இச்சமூக இயங்கியலைப் புறக்கணித்து திடீரென்று ஒன்றைக் கொண்டுவந்து புகுத்த முடியாது. இப்படித்தான் அரசியல் இருக்க வேண்டும். இப்படித்தான் ஆட்சி நடக்க வேண்டும் என்று மேலிருந்து கொண்டு கட்டளையிட முடியாது.

இஸ்லாம் அரசியல் துறையில் இஜ்திஹாதுக்கான பெரிய வெற்றிடத்தை விட்டுச் சென்றதும் இதனால்தான். பழங்குடி, நாடோடிகளாக இருந்த அறபிகளை நபிகள் வணிக ரீதியாக ஐக்கியப்பட்ட இன்னொரு படித்தரத்திற்கு கொண்டு சென்றார்கள். கோத்திர முறையிலிருந்து சற்று முன்னேறிய ஒரு முறையைத்தான் அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். நபிகள் மரணித்த மறுகணமே ரித்தத் என்ற ஒரு பெரிய பிரச்சினையே ஏற்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் பழங்குடி மனப்பான்மையே. இருபத்தி மூன்று ஆண்டுகால உழைப்பு கோத்திர, பழங்குடி சமூகங்களின் மனப்பாங்கை முற்றாக மாற்றிவிடாதுதான் அதற்குக் காரணம். அப்படி நடந்திருந்தால் நபிகளுக்குப் பின்போ அல்லது குலபாஉர் ராஸிதூன்களுக்குப் பின்போ அதைவிட சிறந்த ஒரு அரசியல் அமைப்பை அறபு முஸ்லிம்கள் உருவாக்கி இருக்க வேண்டும். ஆனால் உண்மையில் நடந்ததோ தலைகீழாகத்தான். பதினான்கு நூற்றாண்டு இஸ்லாமிய வரலாற்றில் நடந்தது அப்பட்டமான மன்னராட்சியே என்றால் யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதன் நீட்சியை இன்றும் அறபு இஸ்லாமிய நாடுகளில் பார்க்கலாம். அறபிகளின் சமூக அமைப்பும் அதன் ஒழுங்கும் தான் அவர்களுக்கான அரசியல் முறைமையாகவும் இருக்கிறது.

இஸ்லாமிய அரசியல் என்பது அப்பாஸியர் ஆட்சியா? அல்லது உமையாக்களின் ஆட்சியா? அல்லது சிற்றரசுகளின் ஆட்சியா? அவை எல்லாமே பழங்குடி கோத்திர அடிப்படையிலான மன்னராட்சியாகவே இருக்கின்றன. சரி, அது ஒருபுறம் இருக்கட்டும். மன்னராட்சிதான் இஸ்லாமிய ரோல் மொடல் என்று கூறினால் அது இன்றைய குலோபல் யுகத்தில் சாத்தியப்படக்கூடிய ஒரு கருத்தியலா? அல்லது இஸ்லாமிய அரசியல் என்பதன் மூலம் சூறா முறையையும் பைஅத் செய்வதையும் கலீபாவை நியமிப்பதையும் கருதுகிறீர்களா? இந்த இரண்டு மூன்று செயற்பாட்டுக்குள் நூறு கோடிக்கும் மேற்பட்ட, நூற்றுக்கணக்கான மொழிகளைப் பேசுகின்ற, ஆயிரக்கணக்கான பண்பாட்டு வித்தியாசங்களைக் கொண்ட கோடிக்கணக்கான படிநிலை சமூக அடுக்குகளைக் கொண்ட அனைவரையும் ஒன்றுதிரட்ட முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? முஸ்லிம் சமூகம் ஒருபுறமிருக்க ஏனைய சமூகங்கள் மக்களுடைய நிலை பற்றி உங்களுடைய இஸ்லாமிய அரசியல் கொள்கை என்ன திட்டங்களை வைத்துள்ளது? அல்லது இஸ்லாமிய அரசியல் என்பதன் மூலம் நபிகளின் குடும்பத்தைச் சேர்ந்த அஹ்லுல் பைத்தின் ஆட்சி, இஸ்னா அஸரியா எனும் இமாமியத் கொள்கை அரசு என நீங்கள் கருதுகிறீர்களா? அதை முன்வைத்த ஈரானிலேயே இந்த முப்பது வருடகால அனுபவத்தில் சாத்தியமில்லாமல் போய் பல தேர்தல்கள், பல ஜனாதிபதிகள் என்று அம்மங்கள் தங்களுக்கான அரசியல் வடிவத்தை உருவாக்கிக் கொண்டிருப்பதை தாங்கள் அறியவில்லையா?

அரசு என்பது அல்லது அரசுருவாக்கம் என்பது ஒவ்வொரு சமூகத்தின் அறிவு, பொதுப்புத்தி, அதன் பண்பாடு, அவற்றிற்கிடையே நிலவும் ஊடாட்டங்கள், பொருள் உற்பத்தி, விநியோகம், என்று பல விசயங்களில் தங்கியுள்ளது. அவற்றின் படிநிலையிலிருந்துதான் அங்கு தோன்றும் அரசுகளின் தன்மையும் காணப்படும். சமூகங்களின் தன்மைக்கு ஏற்ப அது நாட்டாண்மை அரசாகவோ, பழங்குடி ராணுவ அரசாகவோ, மன்னர் ஆட்சியாகவோ இருக்க முடியும். ஒரு குழுவாக இருந்து கொண்டு தமது சமூகத்தை விட்டொதுங்கி வாழ்ந்து கொண்டு தாம் படித்தவற்றையும் தமது சீர்திருத்தக் கருத்துக்களையும் மிக உன்னதமானவையாகக் கருதிக் கொண்டு ஒரு இரவுக்குள் முழுச் சமூகத்தையும் ஆக்கிரமித்து மாற்றியமைத்துவிடலாம் என சேகுவரா பாணியில் கருதுவது மீண்டும் மீண்டும் பின்லேடன் போன்றவர்களையே உங்களுக்கு தலைவர்களாக உருவாக்கித் தரும்.

எதிர்ப்பு என்பதில் மட்டும் நின்று ஒரு கருத்துருவாக்கத்தையோ வாழ்வு முறையையோ தோற்றுவிக்க முடியாது. அமெரிக்க எதிர்ப்பு, மேற்கத்திய வெறுப்பு என்பது மட்டுமே கொண்ட அடிப்படைவாதம் தோற்றுவிடும் என்பதுதான் நமக்கு முன்னால் நடந்து கொண்டிருக்கும் வரலாறாகும்.



# புகைப்படத் தொகுப்பு

புகைப்படக் கலைஞர்களுக்கான களம்

## ஆகஸ்ட் மாத சிறந்த புகைப்படம்



அர்சாட் ஜெலீல்
கலேவேல மாத்தளை



பாத்திமா அப்கா – புத்தளம்

ஆகஸ்ட் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்

## நீங்கள் ஒரு புகைப்படக் கலைஞரா ?

## புகைப்பட போட்டி - 2022

மாதந்தோறும் சிறந்த புகைப்படங்களை தெரிவு செய்யும் போட்டி

செப்டெம்பர் மாதம் தலைப்பு : **கடற்கரை காட்சி**

என்ற தலைப்பில் சிறந்த படைப்புகளை எதிர்பார்க்கின்றோம்.

அனுப்பவேண்டிய முடிவுத் திகதி:
**30 Sep 2022**

அனுப்பவேண்டிய முறை :
skytamil.lk@gmail.com | +97431060249

WINNER

செப்டெம்பர் மாத தலைப்புக்கு ஏற்ற புகைப்படத்தை அனுப்பி **Rs. 1000** பணப்பரிசை வெல்லுங்கள்.

sky தமிழ் TV CHANNEL

# துணிந்தெழு

மாதந்தோறும் சிறந்த புகைப்படங்களை தெரிவு செய்யும் போட்டி

## ஆகஸ்ட் மாதம் தலைப்பு

## நாளைய நகரங்கள்






















































sky தமிழ்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

# தனித்துவமே நமது அடையாளம்



துணிந்தெழ சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எழுத்தாளுமைகளுக்கும்
வாசகர் நெஞ்சங்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும்

**இதயபூர்வமான நன்றிகள்...!**




#Thuninthelu www.skytamilmedia.com